மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 17 வியாழக்கிழமை (03.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 007

# நாட்டுக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்கி நல்ல பெயர் தேட வேண்டும்

## அதனைத் தாம் செய்வார் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, டிசெம்பர்3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் நடவடிக்கைகளினால் சர்வதேச மட்டத்தில் கடந்த காலங்களில் இலங்கைக்கு அவப்பெயர் வந்துவிட்டது. இலங்கையின் நற்பெயருக்கு உலகில் களங்கம் ஏற்பட்டுவிட்டது. நான் ஜனாதிபதியானதும் சட்டம், ஒழுங்கு நட வடிக்கைகளை சீர்படுத்தி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து, அந்தக் களங்கத்தை இல்லாமல் செய்வேன். இலங்கைக்கு நல்லபெயரை தேடித் தருவேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் இராணுவத்தளபதியும், எதிர்க்கட்சியின் பொது ஜனாதிபதி வேட்பாளருமான ஜெனரல் சரத்பொன்சேகா.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வரலாறு I, II, III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் I, II, III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## வலி.வடக்கில் 4,500 பேரை உடனடியாக மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்

### பஸில் ராஜபக்ஷ கூட்டமைப்பு எம்.பிக்களிடம் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,டிசெ.3

உயர்பாதுகாப்பு வலயமான வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் முதல் கட்டமாக 4,500 பேர் உடனடியாக மீள்குடியமர்த்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ இத்தகவலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா

(19ஆம் பக்கம் பார்க்க)

## டிசெம்பர், ஜனவரியில் டெங்கு பரவும் அபாயம்

கொழும்பு, டிசெ.3

அடுத்து வரும் இரண்டு மாதங்களில் டெங்கு நோய் மீண்டும் பரவும் சாத்தியமிருக்கிறது எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

தற்போது கொழும்பு, வவுனியா, மாத்தளை ஆகிய பகுதிகளில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என மக்கள் சுகாதாரம் தொடர்பான

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தேர்தல் பிரசாரத்துக்கு எதிர்க்கட்சிகளை அனுமதிக்க வேண்டும்

### அரசிடம் ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, டிச. 3

எதிர்க்கட்சிகள் வடமாகாணத்துக்குச் சென்று ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களில் ஈடுபட அரசு அனுமதி வழங்கவேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச தரப்பினர் மாத்திரமே வட மாகாணத்துக்குச் செல்ல தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். தேர்தல் காலத்தின் போது இது மிகவும் அநீதியான செயற்பாடாகும்.

புலிகளின் பிடியிலிருந்த வட மாகாணம் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு நாம் சென்று அரசியல் நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று அரசைக் கோருகின்றோம். ஆனால், எமது இந்தக் கோரிக்கையை அரசு தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது. ஆளுந் தரப்பினர் மாத்திரம் அங்கு சென்று அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் தேர்தலை கண்காணிக்கும் பணியில் உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபட அரசு அனுமதிக்கவேண்டும். (அ-சி)

## இந்தோனேஷியக் கடற்பரப்பில் தரித்து நிற்கும் இலங்கையரைத் தரை இறங்குமாறு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 3

இந்தோனேஷியாவின் மரிக் துறைமுகத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டிருக்கும் படகில் தங்கியுள்ள 250 இலங்கை அகதிகளை போராட்டத்தைக் கைவிட்டு இந்தோனேஷியாவில் தரை இறங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை மேற்படி அகதிகள் குழுவின் தலைவர் எனக் கூறப்படும் அலெக்ஸ் என்ற சஞ்சித் குகேந்திர ராஜாவின் தாயார் சத்தியா ராஜரட்ணம் முன்வைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அகதிகள் 250 பேரும் தொடர்ந்து படகில் தங்கியிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

இந்தோனேஷியக் கடற்துறை அதிகாரிகளின் கருத்துக்கு இணங்கி படகிலிருந்து வெளியேறி இந்தோனேஷியாவில் தரையிறங்குமாறு அவர்கள் அனைவரிடமும் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

இதேவேளை அவ்வாறு வெளியேறுவோர் இந்தோனேஷியாவில் தொடர்ந்து தங்கவைக்கப்படமாட்டார்கள் என்பதனை

(20ஆம் பக்கம் பார்க்க)

## வீதித் தடைகளை நீக்க அரசாங்கம் முடிவு

கொழும்பு, டிசெ.3

நாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தவிர்ந்த ஏனைய சகல வீதிகளிலும் போக்குவரத்துத் தடைகளை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனவும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியின் மூன்று கப்பல்களை இலங்கைக்கு கொண்டுவர முடிவு

### அமைச்சர் ரம்புக் வெல தகவல்

கொழும்பு, டிசெ.3

கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனின் சொத்துக்கள் அனைத்தையும் அரசுடமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய பாதுகாப்புத் தொடர்பான செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட கே.பி தொடர்பான 600 வங்கிக் கணக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதில் பெரும்பாலானவை ரத்து செய்யப்பட்டுள்ளன. இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமாக 14 கப்பல்கள் இருந்துள்ளன. அவற்றில் 5 கப்பல்கள் குமரன் பத்ம நாதனுக்குச் சொந்தமானவை. குறித்த 5 கப்பல்களில் 3 கப்பல்களை இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ-சி)

## அகதிகளின் விடுவிப்பிலும் அரசியல் உள் நோக்கமா?

கொழும்பு, டிசெ.3

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்கத் தகுதியானவர்கள் என்பதாலேயே அவர்கள் முகாம்களிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரிக்கு முன்னர் இந்த மக்கள் விடுவிக்கப்படுகின்றமையை இந்த அடிப்படையிலேயே பார்க்கவேண்டும். அதிகாரிகள் இதனைச் செய்வதற்கு அவசியமான அரசியல் நோக்கங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேராவும் இதே கருத்தை முன்வைத்துள்ளார். நீண்ட காலத்தின் பின்னர் முதற் தட வையாக அரசு சிறுபான்மை இனத்தவர்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

''அங்குள்ள வீதிகள் மூடப்பட்டுள்ளன. பொது போக்குவரத்து வசதிகள் இல்லையென தெரிவித்துள்ள அவர் அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா தமது பகுதிகளுக்கு செல்லும் மக்களுக்கு போதுமானது அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முகாமிலிருந்து செவ்வாய்க்கிழமை 10 ஆயிரம் பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு 10- 5 நாள் களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவித்தன. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 1st IN Com, G.A.Q. யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* மேற்படி பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/L ல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
* பேராதனை பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும்.
* புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 05-12-2009 காலை 8.00 மணி.

குறிப்பு - B.A. PART 1 யாழ்ப்பாண பல்கலைக்கழக புகுதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. (92730)

விவரங்களுக்கு - நிர்வாகி. S. அருள்நங்கை, புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

## பாராட்டுகின்றோம்



வன்னித் தொண்டராசிரியர் ஒன்றிய கூட்டத்திற்கு,எமது அழைப்பை மிக விருப்போடு ஏற்று வருகை தந்து எமக்கு ஊக்கமும் உறுதிமொழியும் கூறிய சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் ஈழமக்கள் ஜனநாயக விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் மதிப்புக்குரிய உதயன், தொலைபேசியூடாக உரையாற்றிய சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர்

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுடைய நிரந்தர நியமனம் தொடர்பான உறுதிமொழி எம்மை ஆறுதல் படுத்தியுள்ளது. இவர்களுடைய சேவையை மென்மேலும் வளர அவர் பணிதொடர வாழ்த்துகின்றோம்.

(92738)

**வன்னி தொண்டராசிரியர் ஒன்றியம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மட்டுவிலைச் சேர்ந்த இ.விஜயசூரியா பாலிநகரைச் சேர்ந்த வி.காந்திமாலா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன்

**செல்வன் சிந்துஜன்**

[பாலிநகர் மகாவித்தியாலயம் மல்லாவி தற்போது யாழ்.பரியோவான் கல்லூரி]

வீரபுரம் நலன்புரி நிலையத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தங்கியிருந்தவேளை 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகள் பெற்றுச் சித்தி யடைந்து மாவட்ட மட்டத்தில் 11ஆம் இடத்தையும் பாடசாலை வலய மட்டத்தில் 1ஆம் இடத்தையும் பெற்றமைக்காக அவரைப் பாராட்டித் தொடர்ந்து கல்வியில் முன்னேற ஆண்டவனை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

விஜயசூரிய தம்பதியினர் (அம்மா, அப்பா)
ஜெயலன் தம்பதியினர் (சித்தப்பா, சித்தி)
இராஜரட்ணம் தம்பதியினர் (அம்மம்மா, அம்மப்பா)

சுஜீவா வைத்தியசாலை, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (சி/562875)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2009 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ.த உயர்தரப் பரீட் சையில் உயிரியல் பிரிவில் (3ஏ) சித்திகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற கொழும்பு சைவ மங்கையர் கழக வித்தியாலய மாணவி

**செல்வி மைதிலி சிவபாதசுந்தரம்**

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன் மேலும் மேலும் கல்வியில் பல சாதனைகள் படைக்கவும் மருத்துவத்துறையில் சிறந்து விளங்கவும் வாழ்த்துகின்றோம்.

(92719)

வாழ்த்துவோர்கள்
உறவினர்களான திரு.திருமதி செல்வலட்சுமி குகன்,
திரு.தெய்வர் தங்கராசா,
திரு.திருமதி தேவிகா பாலகுமார்.

பொற்பதிவீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகப்பரீட்சை நடைபெற உள்ளது. தகுதி உடையோர் தமது தகைமையை உறுதி செய்யும் ஆவணங்களுடன் 07.12.2009 திங்கட்கிழமை மு.ப 11.30 மணிக்கு சங்கத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

பதவிகள்
லொறிச் சாரதி (குறைந்தது 7 வருட அனுபவம்)
பில் கிளாக்
கணக்கியல் தெரிந்த எழுது வினைஞர்

கல்வித்தகைமை : க.பொ.த (சா.த) கணிதம், தமிழ்மொழி உட்பட் 3 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயது 35-55 வரை. அண்மையில் பெறப்பட்ட 2 நற் சான்றிதழ்கள்.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/562879) யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களாகிய ந. ஜெயராஜ், ந. சிவராஜ் ஆகியோரின் அன்புத் தந்தை

**மு. நடராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(92748)

**ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக சகவீரர்கள்**

---

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்ட அறிவித்தல்**

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 13.12.2009 ஞாயிறு காலை 9.00 மணிக்கு கல்லூரி "B" மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்பதனை சங்க உறுப்பினர்களுக்கு அறியத்தருகின்றோம். தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

செயலாளர். (சி/562888) தலைவர்.

## துயர் பகிர்கின்றோம்



Dr.லலித்தாமணி அவர்களின் அன்புச் சகோதரன்

**பஞ்சரத்தினம் ஜனார்த்தன்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(சி/562565) பல்கலைக்கழக நண்பர்கள்.

## தவறிவிட்டது

வத்திராயன் வடக்கு, தாளையடியைச் சேர்ந்த காந்தரூபன் சதீஸ்கரன் என்பவருடைய கடவுச்சீட்டு இல. M 2314414, 22 ஆம் திகதி பருத்தித்துறை சிவன்கோயிலடிக்கும் வியாபாரிமூலைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் ஹாட்லிக் கல்லூரி வீதியில் உள்ள சக்தி கொமினிக்கேசனில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கடவுச்சீட்டு இல. M 2314414.

## கண்ணீர் அஞ்சலி



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்து வட்டு இந்துக்கல்லூரி அபிவிருத்தியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு உதவிபுரிந்துவந்தவருமான கொடை வள்ளல்

**கலாநிதி இரத்தினம் சர்வானந்தர்**

அகால மரணமடைந்ததையிட்டு, அவர்களது பிரிவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/562368)

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பாடசாலைச் சமூகமும்.

## இதய அஞ்சலி

**அமரர் மு. நடராசா**
(யாழ். இந்து கன்ரீன் நடா)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நெருங்கிய தொடர்புடைய அமரர் மு. நடராசா அவர்கள் இறை எய்திய செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(92749)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் குழுமம்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.நா.விமலநாதன் அவர்களது அன்புத் தாய்

**அமரர் நாகலிங்கம் மனோன்மணி**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(92736)

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் ந.சிவராசா அவர்களது அன்புத் தந்தை

**அமரர் மு.நடராசா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(92737)

ஆசிரியர் கழகம்,
[illegible]

---

## கண்ணீர் அஞ்சலி



**பஞ்சரத்தினம் ஜனார்த்தன்**

அவர்கள் காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இளையதம்பி இந்துவித்தியாலயம் (92723) பழைய மாணவர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை செல்வி ந.சிவகாமசுந்தரி அவர்களின் பாசமிகு தந்தையார்

**முருகர் நடராசா**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு மிக்க துயரடைவதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை யாழ்ப்பாணம். (சி/562877)

## மகிமையில் கிறிஸ்துவோடு 20 ஆண்டுகள்



**போதகர் ஜீ.எஸ்.ஏ. யோசப்**

நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாள்களாய் நிலைத்திருப்பேன்
சங்கீதம் 23:6B

| மண்ணில் | மகிமையில் |
|---|---|
| 20.05.1925 | 03.12.1989 |

உலக வாழ்வினை கர்த்தருக்குள் வாழ்ந்து. இவ்வுலகில் வாழ்வோரை கர்த்தருக்குள் வழிகாட்டி. உன்னதர் இயேசுவோடு 20 ஆண்டுகள் வாழும் போதகர் ஜீ.எஸ்.ஏ யோசப் அவர்களின் இவ்வுலக வாழ்விற்காய் ஆண்டவருக்கு நன்றிகள் பல. 03.12.2009 வியாழன் மாலை 4.30 மணிக்கு ஆலயத்தில் ஸ்தோத்திர ஆராதனை நடைபெறும்.

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
இல.89,பிறவுண் வீதி,
கொக்குவில். (சி/562889) கல்வாரி குடும்பம்.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் கந்தையா பஞ்சலிங்கம்**
[ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்]

மலர்வு 30.08.1928
உதிர்வு 03.12.2006

அன்புடனே எம்மை வளர்த்து அறிவூட்டி
பண்புடனே எம்மைப் பார் புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் இருக்க எம்மைவிட்டு
இறைவன்அடி சென்றதேனோ?
மூன்றாண்டுகள் சென்றாலும் முடிவுறாது உங்கள் அன்பு
எங்கள் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(92733)

பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

லிங்கமகால்,
தாவடிவடக்கு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

| மலர்வு | மறைவு |
|---|---|
| 28 | 03 |
| ★ | ★ |
| 10 | 11 |
| ★ | ★ |
| 1939 | 2009 |



**அமரர் முருகப்பா சுவாமிநாதன்**

எமது தந்தை உயிர் பிரிந்த வேளை எமக்கு உந்துசக்தியாகவும் பக்கபலமாகவும் நின்ற உயர்ந்த உள்ளங்களுக்கும் மற்றும் நேரடியாகத் துயரில் பங்கெடுத்தவர்களுக்கும் தந்தி, தொலைபேசி,மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அனைத்து வகையான உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு,

இன்று (03.12.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

88,கோயில் வீதி,
நல்லூர். (92747) பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வலிகாமம் வடக்குப் பகுதி மக்கள் சொந்த மண் மீளுவது எப்போது.....?

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் சிரசு போன்றது யாழ் குடாநாடு என்றால், அதன் மூளை போன்றது வலிகாமம். அதிலும் வலிகாமம் வடக்கு, யாழ்.குடாநாட்டு மக்களின் பிரதான பிரதேசம். வயல்களனிகளும், செம்மண் தரையுமாக வளங்கொழிக்கும் பூமி வலிகாமம் வடக்கு. ஒருபுறம் அள்ள அள்ளக் குறையாத கடல் வள்ம். மறுபுறம் பூமி அன்னையின் செழிப்பும் வனப்பும், வளமும் கொட்டிக் கிடக்கும் விவசாய நிலங்கள். உழைப்பாலும் முயற்சியாலும் உயர்ந்த மக்கள் நிறைந்த - செல்வம் கொழித்த - வலிகாமம் வடக்கின் பெரும் பகுதி இன்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட படை ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு கிடக்கின்றது.

யாழ்.குடாநாட்டில் சுமார் முப்பது வீத குடிசனப் பரம்பல் பகுதி இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயம் என்ற சூறையாடலுக்குள் சிக்குண்டு கிடக்கின்றது. அதற்குள் குடாநாட்டின் மூளை போன்ற வலிகாமம் வடக்கும் அடக்கம்.

பலாலி படைத்தளத்தைப் பாதுகாத்தல் என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்ட படைமுகாம் விஸ்தரிப்பு இன்று வலிகாமம் வடக்கின் பெரும் பகுதியை ஏப்பம் விட்டுக் கபளீகரம் செய்த நிலையில், முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் பாதுகாப்பு அரண்களுக்குள் முடங்கிக் கிடக்கின்றது அந்த மண். அங்கிருந்த பொதுமக்களின் சொத்துகள், வீடு, வாசல்கள், உடைமைகள் எல்லாம் 'சுவாஹா' ஆகிவிட்டன.

அந்த மண்ணில், வீடு, வாசல்கள், களனிகள், வயல்கள், வரப்புகள் என்று சொத்து சுகத்தோடு இருந்த மக்கள் ஈழப்போர் இரண்டின் போது, உடுத்த உடையோடு தத்தமது வீடுகள், இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்டார்கள். அவர்களது பாரம்பரிய பூமி இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வீழ, அவர்கள் நலன்புரி மையங்கள் என்ற பெயரில் இயங்கிய அகதி முகாம்களுக்குள் முடங்க வேண்டியவர்களானார்கள்.

இப்போது ஏறத்தாழ இரண்டரை தசாப்த காலமாகி விட்டது. அவர்களின் தாயகம் மீதான ஆக்கிரமிப்பு ஒருபுறம் தொடர, அந்த மக்களின் ஏதிலி வாழ்க்கையும் விபரீதமாகத் தொடர்கின்றது.

இரண்டாம் ஈழப் போர் முடிந்து, பின்னர் மூன்றாம் ஈழப் போர் கடந்து, இப்போது நான்காம் ஈழப் போரும் முடிவடைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. புலிகள் இயக்கத்தை அடியோடு அழித்து, ஈழப் போர்கள் அனைத்தையும் முற்றாக வென்று அவற்றை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டதாகக் கொழும்பு அரசு மார் தட்டுகின்றது.

ஆனால், வலிகாமம் வடக்கில் இருந்து விரட்டப்பட்ட ஏதிலி மக்களின் அவல வாழ்வு மட்டும் தொடர்கதையாக நீடிக்கின்றது. அதற்கு ஒரு முடிவு எட்டப்படும் என்ற நம்பிக்கையே இல்லை என்று கூறும் நிலைமையே காணப்படுகின்றது.

வன்னி யுத்தத்தில் சிக்குண்டு பேரவலப்பட்டு, பெரும் துன்ப துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த சுமார் மூன்று லட்சம் அகதிகளை நலன்புரி மையங்கள் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களில் முடக்கி வைத்திருந்த கொழும்பு அரசு, இப்போது தனது தேர்தல் திருவிழாவுக்காக -அந்த மக்களின் எச்ச சொச்ச வாக்குகளையாவது சுருட்டும் இலக்குடன் - திடீரென அவர்கள் மீது கருணை காட்டியது. அவர்களை முகாம்களிலிருந்து வெளியேற அனுமதித்தது. தடைகளை நீக்கியது. எனினும், அந்த மக்களுக்கு அடிப்படையான வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் முடக்கப்பட்டிருந்த முகாம்களிலிருந்து சுதந்திரமாக வெளியேற அனுமதிக்கப்பட்டனரே தவிர - நடமாட அனுமதிக்கப்பட்டனரே தவிர - பெரும்பாலும் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவேயில்லை என்பதுதான் உண்மை.

வலிகாமம் வடக்கு அகதிகளைப் பொறுத்தவரையிலும் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக - பலவந்த இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக - தங்களின் சொந்த மண்ணுக்குப் போக முடியாதவர்களாக அவர்கள் உள்ளனர்.

இவ்வாறு தமது பாரம்பரிய தாயகப் பூமியிலிருந்து தாங்கள் விரட்டியடிக்கப்பட்டு, பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருக்கின்ற நிலைமையை ஆட்சேபித்து, வலிகாமம் பிரதேச மக்கள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுவைப் பரிசீலித்த நீதிமன்றம் - நீண்ட கால இழுபறிக்குப் பின்னர் - அந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உத்தரவிட்டது.

ஆனாலும் உயர்நீதிமன்ற உத்தரவு கூட வலிகாமம் மக்களுக்கு உரிய நீதியைப் பெற்றுத்தருவதாக அமையவில்லை என்பதுதான் விசனத்துக்குரியது.

அகதிப்பட்டியலில் இருந்த பெயர்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக ஆள்கள் மீண்டும் குடியேற அனுமதிக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டதே தவிர, மீள்குடியமர்த்தலுக்கான முக்கியமான பணிகள் அங்கு பூர்த்தியாகவில்லை என்பதுதான் உண்மை.

இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்காக - வாக்கு யாசகம் வேண்டி - மக்களிடம் வரும் அரசுத் தலைமையிடம் இது குறித்து வற்புறுத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஓரினத்துக்கு ஒரு தனித்துவமான தாயகப் பிரதேசம் உண்டு என்பதனை அங்கீகரிக்கவே மறுத்துப் பிடிவாதம் பிடிக்கும் அரசுத் தலைமை -

தனித்துவமான தாயகப் பிரதேச உரிமையை சிறுபான்மை இனம் கேட்கவே கூடாது என்று 'அழிச்சாட்டியம்' பண்ணும் அரசுத் தலைமை -

இப்போது வாக்கு வங்கி வேட்டைக்காக வரும்போது வலிகாமம் தாயகப் பிரதேச மக்களுக்கு அங்கு முழு அளவில் மீளக்குடியமர அனுமதிப்பதாகக் கூறக்கூடும்.

ஆனால் செயலில் அது சாத்தியமானால்தான் அது நிச்சயம். அதுவரை வேண்டுமானால், எமது மன நிம்மதிக்கு அதனை ஒரு சாத்தியமான பதிலாக நாம் நம்பிக்கொண்டிருக்கலாம். அவ்வளவே.

# ஜனாதிபதியின் விஜய ஏற்பாடுகளை கவனிக்க கல்வி வெளியீட்டு ஆணையாளர் தலைமையில் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.03

எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ள தேசிய நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.புஸ்ப குமார தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்.கல்வித்திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.


யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான 2010ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடநூல்களையும், சீருடைகளையும் வழங்குவதற்கு எதிர்வரும் 9ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி கலந்துகொள்ளும் இந்தத் தேசிய நிகழ்வு காலை 9மணியளவில் கல்வியமைச்சர் சுசில்பிரேமஜயந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான முன் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.புஸ்பகுமார மற்றும் கல்வியமைச்சின் செயலாளர் எம்.என்.டீ.பண்டார ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இக்குழுவினர் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பான நிகழ்ச்சி நிரலை தயாரிக்க உள்ளனர். இந்த தேசிய நிகழ்வுக்கு ஒவ்வொரு கல்வி வலயங்களில் இருந்தும் 15 மாணவர்கள் வீதம் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 9 ஆம் திபதி வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாணவர்களிடம் இலவச பாடநூல்களையும் சீருடைத்துணிகளையும், சம்பிரதாயபூர்வமாக கையளித்த பின்னர் அன்றைய தினமே அனைத்து பாடசாலை அதிபர்களும் தத்தமது பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணிகளையும் பாடத் புத்தகங்களையும் கையளிக்க வேண்டும் என்று கல்வியமைச்சின் செயலாளர் எம்.எம்.என். டீ பண்டார கேட்டுள்ளார். (50-9)



யாழ்.வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விஷ்ணு ஆலய தீபத் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

ஆலயத்தின் தீபங்கள் சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டிருப்பதை முதலாவது படத்திலும் ஆலய முன்றிலில் சொக்கர்பனை கொளுந்துவிட்டு எரிவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

## பாலர் கல்விக் கழக வருடாந்த கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.3

பாலர் கல்விக் கழகம் 14 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் 44 ஆவது வருடாந்தக் கலைவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கழகத் தலைவரும், சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியருமான எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் பொ.மகேஸ்வரன் கலந்துகொள்வார். (ஒ-7)

## இடம்பெயர்ந்தவர்களை நிரந்தரமாகவே அரசு விடுதலை செய்ய வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு,டிசெ.3

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் பொது மக்களை நிரந்தரமாக விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆறு மாத காலமாக குறித்த இடம்பெயர் மக்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுளளதாக மன்னிப்புச்சபை சுட்டிககாட்டியுள்ளது.

ஒருலட்சத்து20ஆயிரம் இடம்பெயர் மக்கள் சுதந்திரமாக இடம் நகர அனுமதிக்கப்பட்டமை வரவேற்கத் தக்கது எனவும், நிபந்தனைகள் இன்றி அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபையின் இலங்கைக்கான அதிகாரி யொலென்டா பொஸ்டா தெரிவித்துள்ளார்.

15நாள்களுக்கு வெளியே சென்று திரும்புவதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல்களை ஆதாரமாகக் காட்டி சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

நிரந்தரமாக மக்களின் சுதந்திர இடம்நகர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென மன்னிப்புச்சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தமது எதிர்காலம் குறித்து இடம்பெயர் மக்கள் சுதந்திரமான தீர்மானங்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களை எவ்விதத் தங்கு தடையுமின்றி பார்வையிடுவதற்கு மனிதாபிமான மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு அனு மதியளிக்கப்பட வேண்டுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெலி விபத்து பயிற்சியின்போது நடைபெறவில்லை; ஜனாதிபதியின் நிகழ்வுக்கு சென்றபோதே விழுந்தது

### ஐ.தே.கட்சியின் எம்.பி. சொல்கிறார்

விமானப்படைக்குச் சொந்தமான எம். ஐ 24ரக ஹெலிக்கொப்டர் பயிற்சிக்குச் சென்றபோது விபத்தாகவில்லை எனவும் ஜனாதிபதியின் நிகழ்வு ஒன்றைப் பதிவுசெய்யச் சென்றபோதே விபத்து இடம்பெற்றதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மூத்த அமைச்சர் ஒருவரின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதியின் நிகழ்வொன்றைப் ஒளிப்பதிவுசெய்யச் சென்றபோது கடந்த வெள்ளிக்கிழமை விபத்துக்கு உள்ளான ஹெலிக்கொப்டர் தொடர்பான பல்வேறுபட்ட தகவல்களை அரசு மூடி மறைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் இது தொடர்பாக விளக்கமளித்த அவர், குறித்த ஹெலியில் முன்னதாகவே தொழில்நுட்பக் கோளாறு இருந்ததாகவும் ஆனாலும் இது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவில்லை எனவும் சென்னார்.

ஹெலி பயிற்சியின்போதே விபத்துக்கு உள்ளானதாகப் பாதுகாப்பு அமைச்சினால் திரிபுபடுத்தப்பட்டு ஊடகங்களுக்கு செய்தி வழங்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதியின் நிகழ்வு ஒன்றுக்காகச் சென்றபோது இடம்பெற்ற விபத்து என ஏன் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கவில்லை எனவும், கேள்வி எழுப்பிய அகிலவிராஜ் காரியவசம், அந்த ஹெலியில் பயணம் செய்து உயிரிழந்த நான்கு பேர் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் கண்டித்தார்

மொனராகல புத்தல பிரதேசத்தில் இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 18 04.12.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | துதியை பி.ப.10.34 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை பி.இ.12.11 வரை |
| சுபநேரம்: | 06.15-07.45 வரை |
| ராகுகாலம்: | 10.45-12.15 வரை |

## நவாலிப் பகுதியில் நெல் நாற்று நடுகை

நவாலி, டிசெ.3

தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழையினால் கல்லுண்டாய் ஆனைக்கோட்டை நவாலிப் பகுதி வயல்களில் நெல் நாற்றுக்கள் நடுவதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வயல்களில் வெள்ளம் தேங்கி பயிர் அழிந்த இடங்கள் மற்றும் முளைக்காத இடங்களிலேயே நாற்று நடுவதைக் காண முடிகிறது.

இந்த நிலையில் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வாரித்தம்பி பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற எழுது வினைஞர்)

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி பொன்னுத்துரை நேற்று (02.12.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - சோதிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும் சாந்தி, சுகந்தி, சண்முகதாஸ், ஜெயந்தி, முருகதாஸ், ஜெயதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தவேள், புஸ்பராஜா, மனுவல்லா, இந்திரஜித், சுதர்சினி, சண்முகப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கணாவத்தை வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர். (சி/562553)
தகவல்: குடும்பத்தினர்.

## பஞ்சரத்தினம் ஜனார்த்தன்



(Com. Tr., B.Ed. 2 nd year, ஆசிரியர் யாழ்/இளையதம்பி இ.வி.)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சரத்தினம் ஜனார்த்தன் (ஜனா) (30.11.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பஞ்சரத்தினம் - பங்கஜராணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், சுதார்த்தன் (France), Dr.லலித்தாமணி (பல் மருத்துவர், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசா (ஓய்வு பெற்ற இ.மி.சபைப் அலுவலர்), இராஜரட்ணா (ஜேர்மனி),யோகராணி, நேசராணி, சரோஜினி ஆகியோரின் அன்பு மருமகனும், நகுலராணி (ஜேர்மனி), மகாதேவன் (ஜேர்மனி), சதானந்தன் (கனடா) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14, கதிரவேலு ஒழுங்கை,
அரியாலை. (92746)
தகவல்: மு.பஞ்சரத்தினம் (தந்தை)

## காரைநகர் யாழ்ற்ரன் அதிபருக்கு சேவை நயப்பும் மணிவிழாவும்

யாழ்ப்பாணம், டிசெ. 3

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவத்தின் சேவை நயப்பு, மணி விழா நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் ஆசிரியர்கழகத் தலைவர் திருமதி க.லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் வே.தர்மரட்ணம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் கற்கை நெறிப் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், யாழ்.பல்கலைக்கழக கணிதத்துறைத் தலைவர் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன், ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.பாஸ்கரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-7)

## தடகளப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ்.கல்வி வலய பெருவிளையாட்டு தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் கலந்து கொள்வார்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி இராஜினி குமாரவடிவேல் வழங்குவார். (1-7)

## 72 ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



மண்ணில் 03 ★ 12 ★ 1937

விண்ணில் 22 ★ 04 ★ 2008

திருமதி பிலோமினா குயின்ரஸ் பெனடிற் (பபா - குஞ்சு)

(உப அதிபர், யா/கொழும்புத்துறை மகாவித்தியாலயம்)

எனது துணைக்காக நாரந்தனை லூர்க்ஸ் மாதாவின் அருளால் எனது பெற்றோரான M.A. இராசையா தம்பதியினருக்கு மகளாக 10 வருடங்களின் பின் உருவான எனது சகோதரியே உன் பிரிவால் நித்தமும் அழுது குமுறுகின்றேன்.

உனது பிறந்த நாளான இன்று உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

10/A, கதிற்றல் வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 5687 (சி/562882)
திருமதி R.சேவியர் (பேபி).

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதன் பெருமாள்



(ஓய்வுபெற்ற மாநகரசபை ஊழியர், நீர்வேலைப்பகுதி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் பெருமாள் நேற்று (02.12.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இராமநாதன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற உமையவல்லியின் அன்புக் கணவரும், தருமரெட்ணம், யோகரெட்ணம், ஜெயரெட்ணம், செல்வரெட்ணம், ஜீவரெட்ணம், விஜயரெட்ணம், ஞானரெட்ணம், மோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-12-2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு 57, இலந்தைக்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை. (92743)
தகவல்: மோகன் மகன்.

## முருகேசு தில்லையம்பலம்

(தேவாலய வீதி, சங்கானை)

தேவாலய வீதி, சங்கானையை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட முருகேசு தில்லையம்பலம் நேற்று (02-12-2009) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு -சின்னம்மாவின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும், தங்கராசா (ஜேர்மனி),தேவராசா (இந்திரன், கிளை முகாமையாளர், ப.தெ.வ. அ.கூ.சங்கம், சங்கானை), அமரர் திலகராசா, குகனேஸ்வரி, தவராசா (வவுனியா), அருட்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும், லட்சுமி (ஜேர்மனி), வலன்டினா (பிரதேச வைத்தியசாலை, காரைநகர் ), கமலராசா, சகுந்தலா,திரவியமலர் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை இந்து கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை. (சி/562893)
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.

## செல்லப்பா சண்முகநாதன் (S.S.சண்முகநாதன்)



அரியாலையைச் சேர்ந்த செல்லப்பா சண்முகநாதன் (இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்) நேற்று (02.12.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பூரணம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - யோகம்மா தம்பதியினரின் மருமகனும், தவயோகேஸ்வரியின் (இளைப்பாறிய நிதி உதவியாளர், பிரதேச செயலகம்,தென்மராட்சி) அன்புக்கணவரும், தர்சி (ஆசிரியை, யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சிந்துஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சதிஷ்குமாரின் (HNB,யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும், கமலாதேவி, தியாகராசா, செல்வராசா, சோதிராசா, சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் ரங்கநாதன் (லண்டன்), நிமலதாஸ், கமலேஸ்வரி (லண்டன்), தனலட்சுமி, தயாளசீலன் (கனடா), தனபாக்கியம், கனகலிங்கம் (கனடா), லீலா கேதீஸ்வரன் (லண்டன்), தியாகராசா, சந்திரபவானி, காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் இந்துமதி, சுகுணாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11,கனகரட்ணம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். 021-3214258 (சி/562894)
தகவல்: குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் மார்க்கண்டு அரியரத்தினம்

(உரிமையாளர் - சிற்றிவைன் ஸ்ரோர்ஸ், றோயல் வைன் ஸ்ரோர்ஸ், நிருத்திகா ஜுவெலர்ஸ்)

மலர்வு 05.10.1947

உதிர்வு 03.12.2006

உன்னத வாழ்வு கண்டீர்
உத்தம குணங்கள் கொண்டீர்
அன்புள்ள கணவரானீர்
பண்போடு எமைக்காத்த தெய்வமே
மூன்றாண்டுகள் சென்றாலும்
என்றும் நீர் எங்கள் நினைவில்

399, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (92838)
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதிபர் கே.யோகநாதன் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்திலும், மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும் அமைச்சர், வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சிக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கட்டுக்கம்பல, இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.ஸ்ரீபதி, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் ஆகியோர் முன்வரிசையில் இருந்து கலைநிகழ்வை ரசிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வாக்காளர் இடாப்பில் பெயருடைய இடம்பெயர்ந்தோர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடு

## யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

வாக்காளர் இடாப்புகளில் தமது பெயர்களை உடைய இடம்பெயர்ந்த வாக்காளர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகவலை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2008ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தமது பெயர்கள் உள்ள வாக்காளர்கள் இடம்பெயர்ந்திருப்பின் அவர்கள் வசிக்கின்ற பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க விரும்புகின்ற வாக்காளர்கள் தாம் தற்போது வசிக்கும் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர் இடாப்புகளை சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் பொது மக்கள் பார்வையிடமுடியும்.

இதேவேளை வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமது 2008ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளை யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் பார்வையிட முடியும் - என்றார் (50-9)

## இளைஞர் விருதுக்கான போட்டியில் வெற்றி பெற்றோரின் பரிசளிப்பு நாளை

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகம் நடத்திய 2009ஆம் ஆண்டுக்கான இளைஞர் விருதுக்கான போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குநர் அ.சக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் பாஸ்வர சேனாங்க குணரத்ன கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்து சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தியும் கலந்துகொள்வர். (50-23)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 'எக்ஸ்றே' உபகரணங்கள் வந்தன

யாழ்ப்பாணம், டிசெ.3

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 'எக்ஸ்றே' உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமைவந்து சேர்ந்துள்ளன.

இதுவரை காலமும் இந்த ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்றே' உபகரணங்கள் இல்லாத காரணத்தால் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கே அனுப்பப்பட்டு வந்தனர்.

கொழும்பில் இருந்து ஏ-9 பாதையூடாக எடுத்துவரப்பட்ட இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டு, ஓரிரு தினங்களில் அவை இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

'எக்ஸ்றே' உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் இதுவரை காலமும் நோயாளர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-1)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# 'நிக்கொட்' உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட 2 ஆவது மாடிக் கட்டடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

'நிக்கொட்' நிறுவனத்தின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் 75 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டாவது மாடிக் கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதனையடுத்து இந்தக் கட்டடம் கடந்த 25 ஆம் திகதி நோயாளர் பாவனைக்காக கையளிக்கப்பட்டது

'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் ஆர்.சிவரூபன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். போதனா வைத்தியசாலையில் 5 மாடிக் கட்டடம் அமைக்கும் திட்டத்தின் கீழ் இரண்டாவது மாடிக்கட்டடத்தை முழுமையாக அமைக்கும் பணியினை 'நிக்கொட்' நிறுவனம் 75 மில்லியன் ரூபா செலவில் மேற்கொண்டது.

இந்த மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் கடந்த ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கட்டடவேலைகள் யாவும் கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி பூர்த்தியடைந்தன.

சுமார் 180 நோயாளர் கட்டில்கள் போடக் கூடியவாறு அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் வைத்தியசாலையின் நோயாளர் பாவனைக்கென கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஏ.தேவநேசனிடம் கையளிக்கப்பட்டது - என்றார். (50-9)

# வடமராட்சியில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்து

வடமராட்சி, டிசெ.3

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 9ஆம் திகதி வரை வளர்ப்பு நாய் களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும்பணி நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, குடத்தனை பொதுசுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோவின் ஏற்பாட்டில் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.வசீகரன் இப்பணியை மேற்கொள்வார்.

இன்று வியாழக்கிழமை குடத்தனை கிராமசேவையாளர் பிரிவி லும், நாளை 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை குடத்தனை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவிலும், நாளை மறுதினம் 5ஆம் திகதி சனிக்கிழமை அம்பன் கிராமசேவையாளர் பிரிவிலும், எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை குடத்தனை வடக்கு கிராமசேவையாளர் பிரிவிலும், 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொற்பதி கிராமசேவையாளர் பிரிவிலும், 9ஆம் திகதி புதன்கிழமை மணற்காடு கிராமசேவையாளர் பிரிவிலும் விலங்கு விசர் நோய்த்தடுப்பு மருந்து ஏற்றும் பணி இடம்பெறும்.

அத்துடன் இதன்போது பெண் நாய்களுக்கான கருத்தடை தடுப்பு மருந்தும் ஏற்றப்படவுள்ளது. ஆதலால் குறித்த திகதிகளில் அந்தந்தப் பகுதிகளில் வசிப்போர் தமது வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்தைப் போட்டுக்கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர். (50-236)

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.3

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. எனவே தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்புகின்ற வாக்காளர்கள் தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் தபால்மூல வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் ''மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம்'' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை -இடம்பெயர்ந்த தபால்மூல வாக்காளர்களும் தத்தமது பிரிவுத் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (50-9)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

25

**04.12.1985**

முகமூடி நபரின் உதவியுடன் இராணுவத்தினர் பளைப் பகுதியில் வீடு வீடாகச் சோதனை நடத்தி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞன் பலி; பலர் காயம்!

**05.12.1985**

அரசியல் ரீதியில் திட்டமிட்டு பழிவாங்கப்படுவதை நிரூபித்தால் மட்டுமே மேற்கு ஜேர்மனி எவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கும் என இலங்கைத் தமிழருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்படுவது தொடர்பான வழக்கொன்றில் ஜேர்மன்சமஷ்டி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

**06.12 1985**

திருகோணமலை, வவுனியா, மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் மாணவர்கள் க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்ற கல்வித் திணைக்களம் வசதி செய்து கொடுத்துள்ளது.

**04.12.1985**

நானோ, எனது அமைச்சர்களோ யாழ்ப்பாணத்துக்குப் போக முடியாதுள்ளது. யாழ். குடாநாட்டுக்கான உணவு விநியோகத்தை நிறுத்தி பயங்கரவாதிகளை ஒரு மாத காலத்துக்குள் வெளியேற்றிவிடமுடியும். [illegible], இந்தியா அதனை அனுமதி[illegible] என 'இந்தியாருடே' [illegible]க்கு வழங்கிய பே[illegible]யில் ஜே.ஆர். கேட்டுள்ளார்.

**05.12.1985**

பேச்சுவார்த்தை பயன்தரும் என்ற நம்பிக்கை இல்லாததால் நீண்டபோர் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராவதாக அதன் தலைவர் பிரபாகரன் 'புரொண்ட் லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

**06.12.1985**

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நிலையை இந்திய அரசு மீண்டும் ஐ.நா.சபையின் கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையாள்கள் தேவை

வவுனியாவில் பிரபல விருந்தினர் விடுதி, உணவகத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. நிர்வாகி (Basic Hotel Management Experience Required)
2. காசாளர் (கணனி அனுபவம் தேவை)
3. வரவேற்பாளர் (மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள்)
4. கணக்காளரும், களஞ்சியப் பொறுப்பாளரும்
5. உணவு பரிமாறும் கவுண்டர் பொறுப்பாளர்
6. தலைமை சமையற்காரர்
7. சமையல் உதவியாளர்
8. கூல்பார் பொறுப்பாளர்
9. உணவு பரிமாறுபவர்கள்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உணவு, தங்குமிட வசதிகள் இலவசம். தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பங்களீள 07.12.2009க்கு முன் அனுப்பவும்

தொ.பே.:
0773405396 (92724)



தென்மராட்சியில்.........
15 ஆவது வருட கல்விச் சேவையில்...

**பிறைற்றின் கல்வி நிலையம்**

சங்கத்தானை, சாவகச்சேரி

**கல்வியாண்டு 2010**

தரம் 6 - O/L வரையான வகுப்புகள்
ஆரம்பம் 05.12.2009
சனி பி.ப. 3 மணி. (92734)


## கிராம அபிவிருத்தி அலுவலராக பதவியேற்பு

யாழ்ப்பாணம், டிசெ.3

தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றிய இ.பரராஜசேகரம் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலராகப் பதவியுயர்வு பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## மட்டுவிலில் நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.3

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர் அமரர் பொன். நாகமணியின் 13ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மநிலைய கலையரங்கில் நடைபெறும்.

நிலையத் தலைவர் சி.பகீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குச் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ப. செல்லத்துரை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

ஸ்தாபகர் நினைவாக நடத்தப்பட்ட போட்டிகளில்வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கல், கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஒ-207)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1144 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 06 15 24 36

01-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 5,885,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 155,891 | 20/- | 3,117,820/- |
| 2 இலக்கங்கள் | 14,538 | 40/- | 581,520/- |
| 1 இல. + லக்கினம் | 14,098 | 60/- | 845,880/- |
| 2 இல. + லக்கினம் | 1,342 | 200/- | 268,400/- |
| 3 இலக்கங்கள் | 399 | 1000/- | 399,000/- |
| 3 இல. + லக்கினம் | 38 | 10,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,885,000/- | - |
| மொத்தம் | | | 5,992,620/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 186,313 | | 6,492,620/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,232,200/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : சத்துர மதுரங்க பிட்டிகல
கைத்தொலைபேசி வெற்றியாளர்: புத்திக சத்துரங்க இரத்தினபுரி

2009 டிசெம்பர் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 400743802-4-24 |
| பதுளை | 400745639-2-22 |
| கொழும்பு | 400756796-1-25 |
| கொழும்பு | 400757111-6-19 |
| ஹம்பாந்தோட்டை | 400746678-9-07 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



# பதவி வெற்றிடம்

வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல கிளைகளுக்கும் கீழ் குறிப்பிடப்படும் சகல பதவிகளுக்கும் வெற்றிடம் காணப்படுவதால் விண்ணப்பிக்க முடியும். தங்களது சுயவிவர கோவையை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 15.12.2009க்கு முன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதவி விபரம்**

01. கிளை முகாமையாளர்
02. விற்பனை முகாமையாளர் - (ஆயுள் காப்புறுதி / பொதுக்காப்புறுதி)
03. கனிஷ்ட விற்பனை முன்னேற்றத்திற்கான நிறைவேற்று அதிகாரி - (ஆயுள் காப்புறுதி / பொதுக்காப்புறுதி)
04. சிரேஷ்ட விற்பனை முன்னேற்றத்திற்கான நிறைவேற்று அதிகாரி - (ஆயுள் காப்புறுதி / பொதுக்காப்புறுதி)
05. விற்பனை முன்னேற்றத்திற்கான நிறைவேற்று அதிகாரி - (ஆயுள் காப்புறுதி / பொதுக்காப்புறுதி)
06. விற்பனை முன்னேற்று அதிகாரி - (ஆயுள் காப்புறுதி / பொதுக்காப்புறுதி)

**தகைமைகள்**

**கிளை முகாமையாளர்**

காப்புறுதித் துறையில் நான்கு வருட அனுபவம் உள்ளவர்கள் / வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள்

**விற்பனை அதிகாரிகள்**

காப்புறுதித் துறையில் ஆறுமாதம் அல்லது ஒரு வருடத்திற்கு மேல் அனுபவம் உள்ளவர்கள், IBSL பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**ஊதியம்**

நிரந்தர ஊதியத்துடன் தரகுப்பணமும் வழங்கப்படும். இது தகைமைக்கேற்ப பேசித்தீர்மானிக்கப்படும்.

குறிப்பு: *விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக்கோவையில் விண்ணப்பிக்கும் மாவட்டம், விண்ணப்பிக்கும் பதவி, தொலை பேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவும்.*

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

பிராந்திய முகாமையாளர்,
வ/கூட்டுறவுக்காப்புறுதிக்கம்பனி,
இல. 305, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 0212228071, 0716840786

(சி/562871)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் உருத்திராதேவி பத்மசீலன்
(பவானி)



தோற்றம்: 27.07.1955 மறைவு: 03.11.2009

பேரன்பு கொண்டெம்மைப்
பொருந்தக் காத்து நிதம்
சீரொன்ற வளர்த்துச்
சிறப்புறவே உயர்த்திவிட்ட தாயே!
எம் குடும்பச் சுடரொளியே
மாயமதாய் நீர் மறைந்த துயரம்
தீரவில்லை
மாத்தனையான் திருவருளால்
மன்னிடுவீர் சிவனடிகள்.
ஓம் சாந்தி!

ஏமது அன்புமிக்க குடும்பவிளக்கின் பிரிவினால் நாம் துயருற்றபோது பலவழிகளில் ஆறுதல் தெரிவித்து உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (04.12.2009) நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய வைபவங்களில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

கணவர், பிள்ளைகள், மருமகன், சகோதரன், பேரப்பிள்ளைகள்.



BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

# இலங்கை வங்கியின் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டம் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

இலங்கை வங்கியானது இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இலவச கருத்தரங்கையும் பயிற்சிப் பட்டறையையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

இலங்கை வங்கியில் கணக்கினை தற்போது பேணுபவர்களும் இதுவரை கணக் கினை ஆரம்பிக்காதவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றலாம். மேலதிக விவரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளிலோ அல்லது உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களும் தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையலாம்.

இக்கருத்தரங்கை நடத்த கொழும்பிலிருந்து நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்கள் வருகை தரவுள்ளனர்.

தாங்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பின் இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தி அருகிலுள்ள இலங்கை வங்கி கிளைகளிலோ அல்லது உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்திலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தெரிவு கள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும்.

பயிற்சியாளர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும் .

ந.சிவரட்ணம்,பிரதிப்பொதுமுகாமையாளர்,
(வடபிராந்தியம்)

இலங்கை வங்கியின் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டம்
கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் - 12ஆம், 13ஆம் திகதி மார்கழி 2009
விண்ணப்பப்படிவம்

01. முழுப்பெயர் : ..............................
02. விலாசம் : ..............................
03. ஆ. அ. அ. இல. : ..............................
04. தொ. பே. இல. : ..............................
05. கல்வித்தகைமை : ..............................
06. தொழில் தகைமை : ..............................
07. குடியியல் நிலைமை : ..............................
08. தொழில்சார் பயிற்சி பெற்றுள்ளவரா: ..............................
09. ஏதாவது தொழில் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளீரா? இருப்பின் (விவரம்)
..............................
10. ஏதாவது தொழில் முயற்சி ஆரம்பிப்பதில் ஆர்வமாயுள்ளீர்களா?இருப்பின் (விவரம்)
..............................
11. உங்கள் உறவினர்கள் யாராவது தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனரா? இருப்பின் (விவரம்)
12. இலங்கை வங்கி கணக்கிலக்கம் இருப்பின் (விவரம்)
..............................

மேற்குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் யாவும் உண்மையானதும் அத்துடன் நான் இலங்கை வங்கியின் தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக்கருத்தரங்கில் கலந்துகொள்ள ஆர்வமாயுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

.................. ..................
திகதி (சி-562867) கையொப்பம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடு செய்த கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் பயிற்சி முகாமின் ஆரம்ப வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சர்வதேச மெய்வன்மைச் சங்கத்தின் ஜேர்மன் நாட்டுப் பயிற்றுவிப்பாளர் பி.வங்கமன் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், பயிற்சி முகாமில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# 513ஆவது படையணியின் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது ஆனைக்கோட்டை பிரதீப் வி.க.

## இரண்டாம் இடத்தை காங்கேசன்துறை ஐக்கியம் வென்றது

வலி.வடக்கு, டிசெ.3

513ஆவது படையணி 'விளையாட்டின் மூலம் இளைஞர் யுவதிகளுக்கான சமாதானம்' என்ற தொனிப்பொருளில் நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

மானிப்பாய் செல்வமுத்து விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி தொடங்கி முடிவடையும் வரை இரு அணிகளும் மிகவும் கடுமையாக மோதிக்கொண்டன. ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டி இறுதி நேரத்தில் மழை, வெளிச்சமின்மை ஆகிய காரணங்களினால் போட்டியில் மாற்றம் செய்யப்பட்டு இறுதி இரண்டு சுற்றுக்களும் 8 புள்ளிகளுக்கு விளையாடுவதாக முடிவு செய்யப்பட்டது.

முதல் மூன்று சுற்றுக்களில் முதலாம், மூன்றாம் சுற்றுக்களைப் பிரதீப் விளையாட்டுக் கழகம் 25:21, 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

இரண்டாம் சுற்றை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

இந்நிலையில் 4ஆம், 5ஆம் சுற்றுக்களை 08 புள்ளிகளுக்கு விளையாடிய போது நான்காம் சுற்றை பிரதீப் விளையாட்டுக் கழகம் 08:07 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.


நான்கு சுற்றுக்களில் பிரதீப் விளையாட்டுக் கழகம் 3:1 சுற்று என்ற அடிப்படையில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று 513ஆவது படையினரின் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (50-86)

# பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பெருவிளையாட்டு மற்றும் தடகள போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோகசாமி ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இப்பரிசளிப்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேல் கலந்துகொள்வார்.

வாழ்த்துரையை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வழங்குவார். (50-23)




# அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு கோலூன்றிப் பாய்தல் உபகரணங்கள்

## வடமாகாணக் கல்வியமைச்சு வழங்கியது

வலி.வடக்கு, டிசெ.3

வடமாகாண கல்வி அமைச்சு அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான கோலூன்றிப் பாய்தலுக்கான உபகரணங்களை வழங்கியுள்ளது.

இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் அருணோதயக் கல்லூரி சாதனை நிலைநாட்டியதுடன், மூன்று முதலாம் இடங்களையும் ஒரு 2ஆம் இடத்தையும் பெற்றது.

ஒரு பாடசாலை தேசியமட்டத்தில் நான்கு இடங்களைப் பெற்றமையைக் கௌரவிக்கும் வகையிலும் கோலூன்றிப் பாய்தலை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த விளையாட்டு உபகரணங்களை வடமாகாண ஆளுநர்மேஜர்ஜெனரல்ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் இணைந்து வழங்கியுள்ளனர். (50-86)

# உதைபந்தாட்டப் போட்டியிலும் யாழ்.பல்கலைக்கழக அணி சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ.3

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

அண்மையில் ராஜரட்டைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து மொறட்டுவப் பல்கலைக்கழக அணி மோதியது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி முடியும்வரை இரு அணியினரும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் கோல்கள் பெறவேண்டும் என்ற உற்சாகத்தோடு களமிறங்கி மோதிக் கொண்டனர்.

இறுதியில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் மெறட்டுவப் பல்கலைக்கழகத்தை வென்றது.

இப்போட்டித் தொடரில் யாழ். பல்கலைக் கழக அணிவீரன் ஜீவகுமார் 7 கோல்களை அடித்தது குறிப்பிடத்தக்கது. (50-23)

# நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் 40 வயதிற்கு மேற்பட்ட வீரர்களுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (50-23)

# யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணியில் இடம்பெற விரும்புவோருக்கு

யாழ்ப்பாணம், டிசெ.3

வடமாகாண உதைபந்தாட்ட அணிஒன்று மிக விரைவில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. இதற்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணித் தெரிவு இடம்பெறவுள்ளது.

இந்த அணியில் இடம்பெற விரும்பும் வீரர்கள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு விளையாட்டுக்குரிய உபகரணங்களோடு வருகை தருமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (50-231)

# ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா திருகோணமலையில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.3

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களுக்குத் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமை திருகோணமலை பயணமாகின்றனர். (50-23)




அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு வடமாகாண கல்வி அமைச்சினால் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான கோலூன்றிப் பாய்தல் உபகரணங்கள் அண்மையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரால் வழங்கப்பட்டன. கல்லூரிக்கு வழங்கப்பட்ட கோலூன்றிப் பாய்தல் உபகரணங்களைப் படங்களில் காணலாம்.


(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAVEENS ENGLISH MEDIUM CLASSES

## KARAVEDDY (WITH LABORATORY FACILITIES)

**03.12.2009 இல் அரச ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் வாழ் நாள் முழுவதும் ஆசிரியராகத் தொழிற்பட விரும்பும், அவர் மனம் திறந்து பேசுகிறார்.**



**திரு.ப.ஈஸ்வரநாதன்** *B.Sc (Agric) Dip.in Ed.SLTS - I*

**கல்வி**

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி | : அல்வாய் வடக்கு றோ.க.பாடசாலை |
| இடை நிலைக்கல்வி | : நெல்லியடி M.M.V |
| உயர்கல்வி | : மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை, சென்.ஜோன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| பட்டப்படிப்பு | : பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பட்டப்பின் படிப்பு | : யாழ்.பல்கலைக்கழகம் |
| சேவை | : 1981-1985 நு /கைலன்ஸ் கல்லூரி, அட்டன் (தேசிய பாடசாலை)<br>1985-1987 நு/ சென்.ஜோசப் கல்லூரி, மஸ்கெலியா<br>1987-1993 யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி<br>1993-2001 யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை |

**இருண்ட காலம்** Darkage

2001-2005 கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை கரவெட்டி (ஆரம்ப பாடசாலை)
2005-2008 சிறிநாரதா வித்தியாலயம் கரவெட்டி (கஷ்ரப் பிரதேச பாடசாலை)
2008-2009 யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் கரவெட்டி (ஆரம்பப் பாடசாலை)

### அறிமுகம்

நான் முன்னைய நாள் அல்வாய் வடக்கு செல்லையா விதானையாரின் பேரனும், பழனிப்பிள்ளை விதானையாரின் மகனுமாவேன். எனது மாமா முன்னாள் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பொன்.கந்தையா (COMMUNIST) ஆவார்.

### ஆசிரியராகப் பிரவேசம்

க.பொ.த உயர்தர வகுப்பில் படிக்கும்போதே எனக்கு ஆசிரியராக வரவேண்டும் என்ற அவா இருந்தது. எனக்குத் தெரிந்ததை மற்றவனுக்குத் தெளிவாகச் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆற்றல் இருந்தது. எனது தந்தை என்னை '' பிரக்கிராசிக்கு'' படிக்கச் சொன்னார் .ஆனால் எனக்கு அதில் நாட்டம் இருக்கவில்லை. 1970ஆம் ஆண்டில் ''சித்தி உறுதி அன்றேல் பணம் வாபஸ்'' என்ற கவர்ச்சிகரமான விளம்பரத்தை முன்வைத்து க.பொ.த சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞானப் பாடங்களுக்கான 'ரியூசன்' வகுப்பை வதிரி இரும்பு மதவடியில் உள்ள ஒரு வீட்டில் ஆரம்பித்தேன். எனக்கு ஆசிரியத் தொழில் ஈடுபாட்டை ஏற்படுத்திய ஆசான்களில் மூவரைக் குறிப்பாகக் குறிப்பிடலாம். நெல்லியடியில் M.M.V யில் எனக்கு பௌதிகம் போதித்த மறைந்த இராசரத்தினம் ஆசிரியரும், தமிழ் போதித்த ''சுகணா'' என அழைக்கப்பட்ட சு. கணபதிப்பிள்ளையும் ஆவார்கள். மூன்றாவது ஆசான் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் விலங்கியல் போதித்த திரு.பி.கனகசபாபதி ஆவார்.

### திசை மாறிய துறை

1973 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது விஞ்ஞான ஆசிரியராக வரவேண்டும் என்ற அவாவில் விஞ்ஞானத்துறைக்கு (Bio Science) விண்ணப்பித்த போதும் விவாசாய விஞ்ஞான பீடத்திற்கு (Agriculture science) தெரிவு செய்யப்பட்டேன். பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வி பல தரப்பட்ட பீட மாணவர்களது நட்பைப் பெற எனக்கு வழிவகுத்தது.

1977இல் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறினேன். விவசாய விஞ்ஞானப்படிப்புக்கு பல வேலை வாய்ப்புகள் இருந்தபோதும் ஆசிரியத் தொழிலால் உந்தப்பட்ட நான், 1977இல் இருந்து 1981இல் முதல் நியமனம் கிடைக்கும் வரை ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டேன்.

### மீண்டும் ஆசிரியத் தொழில்

1978இல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் வசதிகள் சேவைகள் கட்டணத்தில் படிப்பித்தேன். இக்காலப்பகுதியில் தற்சமயம் கொழும்பில் புகழ் பெற்ற உயிரியல் ஆசிரியராகக் கருதப்படும் வி.குகாதரனுடன் இணைந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரபல்யாமான தனியார் கல்வி நிறுவனங்களில் காலை 5மணி தொடக்கம் மாலை 8 வரை ஓய்வு உறக்கமின்றி தாவரவியல் பாடத்தைப் போதித்து வந்தேன்.

### *Liverpool Academy*

இக் காலப்பகுதியில்தான் நெல்லியடி M.M.V. இற்கு முன்னால் '' சின்னண்ணா'' என்று அழைக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர் கந்தசாமியால் ஆரம்பிக்கப்பட்ட Liverpool Academy இல் கா.பொ.த. உயர்தர வகுப்பை நிர்வகிக்கும் பணியை நான் ஏற்றுக்கொண்டேன். மற்றைய வகுப்புகளை கண்காணிக்கும் பொறுப்பு நெல்லியடி Maths Center நிர்வாகியான மறைந்த திரு.விமலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

### முதல் நியமனமும் மலையக சேவையும்

1981 இல் நிரந்தர நியமனம் பெற்று மலையகம் சென்றேன். எனது முதல் நியமனப் பாடசாலையான நு/கைலன்ஸ் கல்லூரி, அட்டனில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் என்பனவற்றை நான் ஒருவனே போதித்தேன். பௌதிகவியல் பாடத்தை ஆசிரியர் கலா சாலை முன்னாள் அதிபர் திரு மு.பரஞ்சோதி அவர்கள் போதித்தார். அப்பாடசாலையில் இருந்து 3 மாணவர்கள் மருத்துவபீடத்திற்கும், பல மாணவர்கள் வேறு பீடங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1985இல் மஸ்கேலியா சென்.ஜோசப் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றேன். அங்கு கணித பாடம் போதிப்பதற்கு தகுந்த ஆசிரியர்கள் இருக்கவில்லை. எனவே கணித பாடத்தை க.பொ.சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கும் பாடசாலையை விட்டு நீங்கிய கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கும் தனிப்பட்ட வகுப்புக்கள் வைத்து கணிதபாடத்தைப் போதித்து க.பொ.த கணித பாடத்தில் சாதனைக்குரிய பெறுபேற்றைப் பெற வைத்ததுடன், அப்போது மலையக மக்களுக்கு என வழங்கப்பட்ட 408 ஆசிரிய நியமனங்களில் கணித பாடச்சித்தியால் 50 இற்கும் மேற்பட்ட மஸ்கேலியா பிரதேச மாணவர்கள் ஆசிரியத் தொழிலைப் பெறவாய்ப்பாகவும் அமைந்தது.

### யாழ்.மண்ணிற்கு மீண்டும் வருகை

1987இல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மலையகத்தில் இருந்து இடமாற்றப்பட்டேன். என்னை போட்டி மத்தியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் திரு.சிவபாதசுந்தரம் அவர்கள் தன்னோடு இணைத்துக் கொண்டார். அவரது காலம் விக்னேஸ்வராக் கல்லூரியின் வளர்ச்சியில் பொற்காலமாகக் கருதப்பட்டது

அவரது ஓய்வின் பின் அவரது இடத்தை பிரதியீடு செய்த தற்போதைய வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் திரு.வை.செல்வராசா அவர்களும் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார். அவரின் கீழ் பல பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்னை மீறிய கடும் உழைப்பை வழங்கிப் பாடசாலையை ஒரு உன்னத நிலைக்குக் கொண்டுவர எனது பங்களிப்பைச் செய்தேன்.

அதிபர் வை. செல்வராசா அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் சென்ற பின்னர் நான் விக்னேஸ்வராக் கல்லூரியை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. இது பற்றி அறிந்து என்னைக் ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு.பாலசிங்கம் அவர்கள், தற்போதைய விக்னேஸ்வரா அதிபர் திரு. சிவசிதம்பரம் அவர்கள் ஊடாக எனக்கு தன் வேண்டுகோளை தெரியப்படுத்தினார் . நானும் எனது விருப்பத்தைத் தெரிவித்து ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்றேன். என்னை திரு.பாலசிங்கம் அவர்கள் மிகக் கண்ணியமான முறையில் நடத்தியதுடன் ஒரு தொலைபேசி சேவையை நான் பெறுவதற்குத் தன்னாலான உதவியைச் செய்தார்.

இக்காலப்பகுதியல் அதிபர் சேவை,கல்வி நிர்வாக சேவைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் Parallel Service என்ற கொள்கை முன்வைக்கப்பட்டு அதன்படி எல்லாச் சேவையும் சமமென்றும் சமசம்பளத் திட்டம் என்றும் கூறப்பட்டது. இதனடிப்படையில் முதல் ஆசிரியர் சேவைக்கு சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட்டது. இதனாலும் கற்பித்தலின் உள்ள உந்தலாலும், அதிபர் சேவை, கல்வி நிர்வாகச் சேவைப் பரீட்சைகளை உதாசீனம் செய்தேன்.

ஆனால் இவ்வித பரீட்சைகளினூடாகவும், தற்காலிக நியமனங்களில் இருந்தவர்களது பதவி உறுதிப்படுத்தியதன் விளைவாலும் வந்த அதிபர்கள்,கல்வி அதிகாரிகளுக்கு சமூகம் கொடுக்கும் அந்தஸ்தையிட்டு எனது தவறை உணர்ந்த போதும் ஆசிரியத் தொழிலால் வரும் அங்கீகாரமும் மதிப்புமே நிலையானது என்று எண்ணி எனது மனதைத் தேற்றிக் கொண்டேன்.

ஆனால் இவ்விதமாக கல்வித்துறைக்குள் தம்மை நுழைத்துக்கொண்ட அதிபர்கள்,கல்வி அதிகாரிகள். கல்விப் பணிப்பாளர்களால் தினம் தினம் அறிமுகப்படுத்தப்பட்ட அவர்களுக்கே உரிய கல்விச் சித்தாந்தம் கொள்கைகளாலும் சுற்று நிருபங்களாலும் நான்''பொறி'' கலங்கிப்போனேன்.அன்றைய நாட்டின் அரசியல் நிலை என்னை ஊமையாக்கியது. சாப்பிடுவதற்கும், பாடங்களைப்படிப்பதற்கும் மட்டுமே வாய்திறந்தேன்.

### விசேட தன்மை

இக்காலப்பகுதியில் குடா நாட்டில் இருந்து தாவரவியல் பாட மதிப்பீட்டுக்கு நான் ஒருவனே கொழும்பு சென்று வந்தேன். அது போன்று தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கருத்தரங்குகளுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து நான் ஒருத்தனே சென்று வந்தேன். விக்னேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி எனது காலப்பகுதியில் தாவரவியல் பாட சித்திப்பெறுபேறு 90% மேற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கல்வி வலயம்IIஇன் தாவரவியல் வள ஆளணியியளாளராக சேவை செய்தேன். ஹாட்லிக் கல்லூரியின் மறைந்த முன்னாள் அதிபர் திரு. வேணுகோபால் அவர்கள் அதிபராக இருந்த போது பரீட்சை ஆணையாளர் என்ற பதவியைத் தந்து எனது ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்புத் தந்தார். அவரது மறைவு எனக்கு இன்னும் மன வேதனையைத்தந்து கொண்டு இருக்கிறது. 1990ஆம் ஆண்டளவில் உதயன் பத்திரிகையின் சிறப்புச் செய்தியாளராக சிறிது காலம் பணிபுரிந்தேன்.

### சனி பார்வை ஆரம்பம்

11.04.1997இல் நடைபெற்ற தாவரவியல் கருத்தரங்கில் பங்கு பற்றிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் ஒரு வருடத்திற்கு மேலாகியும் கொடுக்காததால் கருத்தரங்கை ஒழுங்கு செய்த வள ஆளணியினர் என்ற முறையிலும் கல்வித்திணைக்களத்திற்கு பல தடவைகள் முறையிட்டும் நிவாரணம் கிடையாததாலும் உதயன் பத்திரிகையில் ''ஒருவருடமாகியும் இன்னும் இல்லை'' என்ற தலைப்பில் ''வாசகர் திருமுகம்'' என்ற பகுதியில் 13.5.1998இல் எழுதிய கடிதத்தினால் கல்வித்திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டேன். க.பொ.தஉயர்தர வகுப்பில் 20 வருடங்களாகப் படிப்பித்த என்னை, க.பொ.த உயர்தர வகுப்புகளுக்குப் படிப்பிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டேன்.வள ஆளணியினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். இதனை ஆட்சேபித்து வலையம்IIஐ சேர்ந்த பல தரப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 35க்கு மேற்பட்ட விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் எழுத்து மூலம் என்னை மீண்டும் வள ஆளணியினராக நியமிக்க வேண்டும் எனக் கேட்ட போதும் கல்வித்திணைக்களம் தனது முடிவில் மாற்றம் செய்யவில்லை.

### கொடுமையில் கொடுமை

க.பொ.த உயர்தர வகுப்பில் இருந்து என்னை நீக்கியபின்னர்,நான் வகுப்பாசிரியராக இருந்த வகுப்புமாணவர்கள், கல்விச் சுற்றுலாச் சென்ற போது கல்வியில் முத்துக்கள் என்று கருதப்பட்ட ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் 4 பேரை கடல் காவு கொண்டு விட்டது. இது எனது மனதை நன்கு பாதித்தது. இதனைத் தொடர்ந்து பாடசாலை நிர்வாக மாற்றத்தால் ஏற்பட்ட பல தரப்பட்ட நெருக்கடிகளால் கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலைக்கு இடமாற்றத்தில் சென்றேன். இதே சமயம் எனது மனதைத் தாக்கிய இன்னொரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். எனது உற்ற நண்பனாக விளங்கிய கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தராகத் திகழ்ந்த திரு.எஸ். இரவீந்திரநாத் அவர்கள் கடத்தப்பட்டு இது வரை விடுவிக்கப்படவில்லை என்பது யாவரும் அறிந்ததே. அவரை விடுவிக்கும்படி ''தமிழ்அன்னையின் பெயரால் வேண்டுகோள்'' என்ற தலைப்பில் வலம்புரிப் பத்திரிகையில் பகிரங்க வேண்டுகோளை விடுத்தேன். ரவீந்திரநாத்துடன் இருந்த நட்புக்கு இலக்கணமாக எனது மகனுக்கும் ரவீந்திரநாத் என்று பெயரைச் சூட்டியதுடன் ''RAVEENS'' என்ற கல்வி நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து அதனை வழிநடத்துவதால் எனது நண்பனின் பெயர் நிலைநிறுத்தப்படும் என்பது எனது அற்ப ஆசை.

### சனி பார்வையின் உச்சம்

கட்டைவேலி மெ.மி.த. ஆரம்ப பாடசாலையில் இருந்து மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டேன். ஒரு மாதத்தில் 3 இடமாற்றக் கடிதங்கள் வெவ்வேறு பாடசாலைகளுக்கு போடப்பட்டு, இறுதியில் கரவெட்டி சிறிநாரதா பாடசாலைக்கு இடமாற்றப்பட்டேன். இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதற்கு குறிப்பான உள்நோக்கத்தை இடமாற்றிய கல்விப் பணிப்பாளர் கொண்டு இருந்தார். இது ஒரு கஷ்ட நிவாரண படிவழங்கப்படும் ஒரு பாடசாலை என்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்த இடமாற்றம் ஒரு தண்டனைக் குரிய இடமாற்றம். எனக்கு இருந்த சொற்ப விஞ்ஞான அறிவை மறக்கச் செய்ய கல்வித் திணைக்களத்தால் மேற்கொண்ட நடவடிக்கை என எண்ணிக் கொண்டேன். இந்த இடமாற்றத்தை எதிர்த்து பல தரப்பட்டவருக்கு முறையிட்டும் எவ்வித பயனும் இல்லாது போக மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறையிட்டு HRC/J/FR/05/1775 அதற்குரிய நடவடிக்கை இன்னும் முற்றுப்பெறவில்லை.

இவ் விசாரணைக்காகச் சென்ற ''(ஓட்டோ)''விற்கான செலவு ரூபா முப்பதாயிரத்தை (30000/=)தாண்டி விட்டது. ஆனால் பிரதிவாதி திணைக்கள வாகனங்களில் எவ்வித செலவும் இன்றி வந்து செல்கிறார்.

இக்காலப்பகுதியில் சிறிநாரதா பாடசாலைக்கு இடமாற்றத்தில் செல்ல விரும்பாமல் ஓய்வு பெற தீர்மானித்தேன். பேராதனைப்பல்கலைக்கழக சம காலத்திற்குரியவரும், நண்பருமான, மாகாணக்கல்விப்பணிப்பாளர் திரு. இராசையா அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் எனது தீர்மானத்திற்கு அனுமதிக்கவில்லை. எனக்கு எவ்வித இடர்வரினும் அதனைப் பார்த்துக் கொள்வதாக உறுதி கூறியமையால் ஓய்வூதியம் பெறும் எண்ணத்தை கை விட்டேன் . கல்வித்திணைக்களத்துடன் எனக்கு முரண்பாடு இருந்தபோதும் கல்வி சமூகத்துடன் என்னை இணைத்துக் கொள்ள இரு பாடசலைகளுக்கான அதிபர் வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரியபோது நானும் விண்ணப்பித்தேன். எனக்கு '' தகைமை'' இல்லை என்று என்னை நிராகரித்து விட்டனர்.

நான் அதிபரினதும், கல்வித்திணைக்களத்தினதும் பல சவால்களை (Challenges) எதிர்நோக்க வேண்டியதாயிற்று குறிப்பாக எனது சம்பளப்பணத்தை எனக்குத் தரமறுத்து அதனைக் கல்வித்திணைக்களத்தில் ஒப்படைத்தல், சம்பள இடைநிறுத்தம் [illegible] பதிவு செய்தல்,வரவுப்பதிவேட்டில் கையெழுத்து வைக்க விடாமல் தடுத்தல், விஞ்ஞானத்துறையுடன் தொடர்பற்ற உளவள ஆலோசகர் மூலம் என கற்பித்தலை மேற்பார்வை செய்தல் போன்றவற்றையும் விசாரணைகள் என்ற தோரணையில் பொலிஸ் விசாரணை, திணைக்கள விசாரணை, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாரணைகளையும் சந்தித்தேன்.

இவை அனைத்தையும் விட பாடசாலை வளவில் நான் கடமையில் உள்ள போது வெளியார் ஒருவரது தகாத வார்த்தைப் பிரயோகத்திற்கும், தாக்குதல் முயற்சிக்கும், உயிர் அச்சுறுத்தலுக்கும் ஆளானேன். இது தொடர்பான முறையீட்டை பல தரப்பட்டவருக்கும் அறிவித்த போதும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை அரச ஊழியர் கடமைக்கும் மதிப்பளிக்கவில்லை.

### விழலுக்கு இறைத்த நீர்

எனக்கு பல்வேறுபட்ட காலங்களில் ஏற்பட்ட பல்வேறு இன்னல்களை, முறையற்ற நடவடிக்கைகளை அரசியல் உயர் தலைமைப்பீடம், கல்வி அமைச்சு, கல்வித்திணைக்கள பலதரப்பட்ட அதிகாரிகள், நீதித்துறையுடன் தொடர்பான, நீதியை அமுல் நடத்தும் நிறுவனங்களுக்கு முறையிட்ட போதும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. நான்முறையிட்ட கடிதங்களை பதிவு செய்வதற்கான தபால் கட்டணமே ரூபா நாலாயிரத்தை (4000/=) தாண்டி விட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியில் ஓய்வூதியம் பெறும் இத்தறுவாயில் கூட நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையிலும், ஓய்வூதியம் கிடைக்குமா என்ற ஐயப்பாடான நிலைக்கு நான் கல்வித் திணைக்களத்தினால் ஆளாக்கப்பட்டு உள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது .

### இன்றைய குடாநாட்டுக்கல்வி தரக் குறைவுக்கான காரணம்

1. கல்வியை போதிக்கும் ஒரு பகுதி ஆசிரியர்கள், அதிபர்கள் கல்வியதிகாரிகளின் மேலாதிக்கத்தை எவ்விதம் எதிர் கொள்ளலாம் என்பதை எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். மற்றைய ஆசிரியர்கள் எவ்விதம் அதிபரை கல்வி அதிகாரிகளை மனம் குளிர்ச் செய்யலாம் என எண்ணிக் கொண்டு இருப்பதால் தாங்கள் கற்பிக்கப்பட வேண்டிய பிள்ளைகளின் கல்வி பற்றி பெரும்பாண்மையான ஆசிரியர்கள் சிந்திப்பதில்லை.
2. பொதுவாக சில அதிபர்களை அன்றிக் கல்வியதிகாரிகளை ஆசிரியர் சமூகம் அங்கீகரிப்பதில்லை. சில ஆசிரியர்கள் தமது அதிபரின் பெயரைச் சொல்ல கூச்சப்படுகிறார்கள், வெட்கப் படுகிறார்கள். பொருத்தமற்றஒன்று அதிபர் ஸ்தானத்தில் இருப்பதாக எண்ணுகிறார்கள். இந்நிலையில் பாடசாலையில் அதிபரை அங்கீகரிக்கும் ஆசிரியர் கூட்டம் ஒன்றும், அதிபரை அங்கீகரிக்காத ஆசிரியர் கூட்டம் ஒன்றும் என இரு கூட்டங்கள் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கும் போது மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க நேரம் எங்கே?
3. பல தனியார், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் தனிநபர் விளம்பரத்தை மையப்படுத்தி நிறுவனங்களின் ஊடாக ''உதவி'' என்ற போர்வையில் பாடசாலையைப் பயன்படுத்தி வருவதால் மாணவர் கல்விச் செயற்பாடு நன்கு பாதிக்கப்படுகிறது என்பது உலகறிந்த பரமரகசியமாகும்.
4. வாழ்நாள் போராசிரியர்கள் போல கல்வி அதிகாரிகளும், வாழ்நாள் கல்வி அதிகாரிகளாக இருக்க முயற்சிக்காமல் புதியவர்கள், இளைஞர்கள் சிந்தனைகளுக்கு இடமளிக்க வேண்டும்.
5. கல்வி அதிகாரிகள் அரசாங்க ஊழியர்களே. இவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்ல. இவர்கள் மாலை, மேள தாள ஊர்வலங்களுக்கு காட்டும் அக்கறையை கல்வி அபிவிருத்தியில் காட்டுவதில்லை.

### ஆசிரிய சமூகத்திற்கு வேண்டுகோள்

முள்ளில் சீலையைப் போட்டால் ''சீலை''யைத்தான் கவனமாக எடுக்க வேண்டும். இல்லாவிடில் சீலைதான் கிழியும் கல்லுடன் பானை மோதினால் என்ன பானையுடன் கல்லு மோதினால் என்ன உடைவது பானைதான்.

அதுபோல் ஆசிரியரும் சீலை, பானை போன்ற நிலைக்குரியவர்கள்தான். பிரச்சினை வரும்போது அதிபர்கள் கல்வி அதிகாரிகள் எல்லோரும் தமக்குள் ஏற்றத்தாழ்வு இருப்பினும் பொது எதிரியை எதிர்க்கும்போது நிர்வாகிகள் என்ற தோரணையில் ஒன்று சேர்ந்து விடுவார்கள்.(Samebirds flock together)_ இதனால் ஆசிரிய சமூகம் தான் பாதிக்கப்படும். உங்கள் ஒற்றுமையே உங்கள் பலம். நம்பகத்துக்குரிய ஆசிரியர் தொழிற்சங்கம் உருவாக்கப் படவேண்டும்.

### எனது சுபாவம்

இன்று நான் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் எனக்கு ஒரு நிலைத்த அங்கீகாரத்தைப் பெற கல்வித் திணைக்களம் அனுமதிக்கவில்லை. எனது எவ்வித செயற்பாடும் பட்டக்காலிலேபடும் கெட்டகுடியே கெடும் என்ற முதுமொழிக்கு அமைய என்னையே பாதித்தது. உண்மைக்கு அழிவில்லை என்ற முதுமொழி கூட எனக்கு பொய்மொழியாகிவிட்டது. ஆனபோதும் எனது கல்விச்சேவையால் இருதலை முறைக்கு நான் போதித்து வருவது எனக்கு மன நிறைவைத் தருகிறது. நான் எவ்வித இடர்கள், இன்னல்களை எதிர்நோக்க வேண்டிய காரணம் நான் ஒருபோதும் அநீதி, அட்டூழியம் என்பனவற்றுக்கு தலை வணங்கியது இல்லை.

### எனது விருப்பம்

நான் தற்சமயம் தளர்ந்து நோய்வாய்ப் பட்ட உடலைக் கொண்டு இருப்பினும் தளராத மனதுடன் உழைத்து "RAVEENS" நிறுவனத்தினூடாக எனக்கு ஒரு அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்பதே எனது விருப்பம். இவ்விருப்பத்தை ஈடேற்றுவதற்கு பல தரப்பினரும் குறிப்பாக நியாயவாதிகளும், எனது மாணவ சமுதாயமும், எனது நண்பர்களும் பக்கபலமாக இருப்பார்கள் என்று நம்புவதுடன் நான் வணங்கும் தெய்வங்கள் எனக்கு மனப்பலத்தையும் உடற்பலத்தையும் வழங்கி எந்தவித சவால்களையும் எதிர்நோக்கக்கூடிய ஆற்றலைத் தர வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

ப.ஈஸ்வரநாதன்
தொ.பே: 021 2263321, 021 3005472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரங்களின் சிறப்புப் பெயர்கள்

- கோயில்களின் நகரம் - காஞ்சிபுரம்
- அரபுக்கடல் ராணி - கொச்சி
- விளக்குகளின் நகரம் - கேரளா
- வாசனைத் துறைமுகம் - ஹொங்கொங்
- மாடிக்கட்டட நகரம் - நியூயோர்க்
- இந்தியாவின் பூந்தோட்டம் - பெங்களூர்
- ஏழு தீவு நகரம் - மும்பை
- பொற்கதவு நகரம் - சன்பிரான்ஸிஸ்கோ
- முடிவில்லா நகரம் - ரோமாபுரி
- புயலடிக்கும் நகரம் - சிக்காக்கோ
- கனவுக் கோபுரங்களின் காற்று நகரம் - ஒக்ஸ்போட்
- அரண்மனை நகரம் - கல்கத்தா
- ஏழு குன்றுகளின் நகரம் - ரோம்
- இளஞ்சிவப்பு நகரம் - ஜெய்ப்பூர்.

பி.நிஷாந்தினி,
11 'G', யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# தர்மம் செய்து உயர்வடைவோம்

"அறம் செய்ய விரும்பு", "ஐயம் இட்டு உண்" என்பன ஔவை மூதாட்டி எமக்குக் கூறி வைத்த உபதேசங்கள் ஆகும். தர்மம் என்பது எவ்விதமான பிரதிபலனையும் எதிர்பாராது செய்யும் செயலாகும். இதனை தானம், கொடை, ஈகை போன்ற பெயர்களாலும் சுட்டுவார்.

தர்மம் என்பது பற்றி திரையுலகக் கவிஞர் ஒருவரும் "தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர்காக்கும், கூட இருந்தே குழி பறித்தாலும் கொடுத்தது காத்து நிற்கும்" என்று கூறியுள்ளார்.

தர்மம் செய்து உயர்வடைந்தோர் பலர். இவர்களுள் பாரி, ஓரி, காரி முதலான கடையேழுவள்ளல்கள் மற்றும் கர்ணன், இறந்தபின்பும் கொடைகொடுத்த சீதக்காதி போன்ற பல வள்ளல் பெருமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தர்மத்தை தமது உயிர் மூச்சாகக் கொண்டவர்கள்.

எமது நாட்டில் இடம்பெற்ற யுத்த அழிவுகள், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள் என்பவற்றால் மக்கள் பலர் பாதிக்கப்பட்டு வறுமைநிலை அடைந்துள்ளனர். வாழ வழி தெரியாது தவிக்கின்றனர். இருப்பினும் எம்முள் பல வசதிபடைத்தோரும் வாழ்கின்றனர். இவர்கள் வறுமைநிலை அடைந்தோரைப் பரிவுடன் நோக்கி உதவுதல் பெரும் தர்மம் அன்றோ. வசதிபடைத்தோர் தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு ஆடம்பரச் செலவைக் குறைத்து வறிய மக்களுக்கு கொடை புரிந்தால் தர்ம பலன் காத்து நிற்கும் என்பது திண்ணம்.

கதிர் மனோகரன்.

# பிடிக்கவில்லை



மயக்கும் மாலை பிடிக்கவில்லை
சிவக்கும் வானம் பிடிக்கவில்லை
மணக்கும் மல்லிகை பிடிக்கவில்லை
மழையில் நனையவும் பிடிக்கவில்லை

நுரைக்கும் அலைகள் பிடிக்கவில்லை
கவி விதைக்கும் தமிழும் பிடிக்கவில்லை
மனம் பறிக்கும் இசையும் பிடிக்கவில்லை
சிறை பிடிக்கும் மழலை பிடிக்கவில்லை

புற்களில் பனியும் பிடிக்கவில்லை
பூக்களின் வண்ணம் பிடிக்கவில்லை
சுற்றும் பூமியும் பிடிக்கவில்லை
சுழலும் மனிதரும் பிடிக்கவில்லை

ஏன் என்னையே எனக்குப்
பிடிக்கவில்லை
என் அன்னையே
நீ அருகிலாத போது.

கம்சத்வனி
பாலசுப்ரமணியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# தெரிந்த உயிர் இனம் பற்றி தெரியாத சில விடயங்கள்



இது மிகவும் விலைமதிப்புள்ளது. இதன் உடலின் ஒவ்வொரு பாகமும் பயன்படுகிறது. சுறாமீனின் துடுப்புகளை (fins) சீனக்காரர்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். அதன் பற்கள் நகை செய்யப்பயன்படும். குடலும், கொழுப்பும் "ஷார்க்லிவர் ஒயில்" என்ற எண்ணெயைக் கொடுக்கிறது. இதன் எலும்புகளிலிருந்து கால் நடைகளுக்கும் பறவைகளுக்கும் உணவு தயாரிக்கிறார்கள். இதன் தலையிலிருந்து ஒரு விதப் பசை தயாரிக்கிறார்கள். உடலின் மேல் பாகமும் வயிறும் உயர் தோலாகிறது.

சா.ஜிந்துஜா,
குமரகோட்டம்,
கோண்டாவில்.

## கேள்விக்கு என்ன பதில்? -51

சர்வதேச கிரிக்கெட் மைதானங்களில் உள்ள ஆடுகளம் வடக்கு- தெற்கு நோக்கியதாகவே அமைக்கப்படுவதுண்டு. இதற்கான காரணம் என்ன?
(சரியான விடைகளை 10.12.2009 இற்கு முன்னர் அனுப்பவும்).

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................. ..................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கேள்விக்கு என்ன பதில்?-49இன் சரியான விடை

நாங்கள் கிறிஸ்தவர்களையும், வாசனைத் திரவியங்களையும் தேடி வந்தோம்.

இளவல்கள் வட்டம்

## கேள்விக்கு என்ன பதில்-49 இல் பரிசு பெறுவோர்

01) சு.தனுஷியா,
சந்நிதி வீதி, உடுப்பிட்டி.
02) பி.டிலக்ஷனா,
நவாலி வடக்கு, மானிப்பாய்.
03) வா.ஜெயப்பிரசன்னா,
கல்லூரி வீதி, பருத்தித்துறை.

# வரலாற்றில் இந்த வாரம்

### நவம்பர் 27



சோமாலியாவில் 1997ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 2,30 000 மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகினர்.

### நவம்பர் 28

1990 ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி பிரிட்டனில் ஆட்சி மாற்றமொன்று நிகழ்ந்தது. இதன்போது இரும்புப் பெண்மணி என வர்ணிக்கப்பட்ட மார்க்கிரட் தட்சர் பிரதமர் பதவியினைத் துறந்தார். புதிய பிரதமராக ஜோன் மேயர் பதவி ஏற்றார்.



### நவம்பர் 29



'சான்ட் கிறீக்' எனப்படும் வரலாற்றில் கறைபடிந்த படுகொலை 1864ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி நடைபெற்றது. சான்ட் கிறீக் என்ற இடத்தில் சரணடைந்த நிராயுதபாணிகளாக 150 செவ்விந்தியர்கள் அமெரிக்கக் குதிரைப்படையால் கொல்லப்பட்டனர்.

### நவம்பர் 30

பல நாவல்களை எழுதி உலகப் புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளரான மார்க் டுவெயின் என்பவர் 1835ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி பிறந்தார்.



### டிசெம்பர் 01



விலங்குகளை வைத்து சிறுவர் விரும்பும் வகையில் அவற்றைப் பாத்திரங்களாக உருவாக்கிப் புகழ்பெற்ற 'வோல்ட் டிஸ்னி' 1966ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி மரணமானார்.

### டிசெம்பர் 02

கியூபாவை ஆட்சிபுரிந்த பாட்டிஸ்பா அரசை வீழ்த்துவதற்காக பிடல் காஸ்ரோ தலைமையிலான போராளிகள் 1956ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி கியூபாவில் வந்திறங்கினர்.



### டிசெம்பர் 03




தற்போது அலங்காரங்களுக்காகப் பயன்படுத்தப்படும் 'நியோன்' விளக்கு முதன் முறையாக 1910 ஆம் ஆண்டு டிசெம்பர் 03 ஆம் திகதி பாரிஸில் நடைபெற்ற மோட்டார் கண்காட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி மாதிரி வினாத்தாள்கள்

## தொகுதி II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வரலாறு - I    33-T-I

* பின்வரும் நிகழ்வுகள், விடயங்களைத் துணைகொண்டு 1-3 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - பாகியன் B - மார்க்கோபோலோ
C - கல்பொத்த D - போதிவம்சம்
E - மாந்தை F - தூபராம
G - வல்லிபுரம் H - கணதர ஓயா
I - சிகிரியா J - E.H. கார்

01. இலங்கையின் அழகை விதந்துரைத்த அயல்நாட்டு அறிஞர்களின் விடைத் தொகுதியாக அமைவது,
1) G, J, D 2) G, A, J 3) C, B, A 4) A, B, J

02. உபதிஸ்ஸகாம அமைக்க காரணமான நதியையும் பண்டைக்கால இலங்கையின் துறைமுகமும் முறையே,
1) H, E 2) H, I 3) E, F 4) H, A

03. மிக நீளமான கல்வெட்டாகவும், முதல் தூபியாகவும் அமையும் விடைத்தொகுதி,
1) C, E 2) C, F 3) C, D 4) C, A

* அநுராதபுர காலத்துக்குரிய சில வரலாற்று நிகழ்வுகள் தரப்படுகின்றன. அதனைத் துணைகொண்டு 4-5 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A - மகாபத்த B - அசிக்காகிக
C - மஹேல D - சலபனாவ
E - சொரவ்வ F - கம்சபா
G - இசுறுமுனிய காதலர் சிலை H - படகாரிக
I - கம்லத்தா

04. இலங்கையில் போர் உபகரணங்களுக்கு பொறுப்பான அதிகாரியாகக் காட்டப்பட்டவரையும், அலைதாங்கியின் மறுபெயராக அமையும் விடைத்தொகுதியையும் முறையே தருக.
1) D, A 2) E, I 3) C, F 4) B, E

05. ''கமிக'' இன் கால ஓட்ட மருவுதலையும், காத்திரமான கலைப்படைப்பையும் காட்டிநிற்கும் விடைத்தொகுதி,
1) C, A 2) F, G 3) G, F 4) C, E

* கீழே கருத்துச்சோடி வீதம் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப 6-10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A - வில்மன் கோட்டன் - கோல்புறூக் கமரன்
B - பார்த்தலோமியஸ்டயஸ் - வாஸ்கொடகாம
C - சமூக உடமைப் புரட்சி - ஸ்டாலின்
D - பரிஸ்ரர் பட்டம் - மகாத்மாகாந்தி
E - ரொறிங்டனின் வரி அறவீடு - 1848 கிளர்ச்சி

06. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எத்தகைய தொடர்பும் இன்றி அமையும் விடைத்தொகுதி,
1) C 2) A 3) B 4) E

07. கீழைத்தேசம் நோக்கிய தம் வருகையை ஏற்படுத்தியோரின் விடைத்தொகுதி,
1) B 2) A 3) C 4) D

08. முதலாமவரின் இயலாமையை நிவர்த்தி செய்வதற்கு இரண்டாமவரினது முயற்சியாக அமைவது,
1) A 2) D 3) C 4) E

09. முதலாமவரின் தவறான அணுகுமுறையின் வெளிப்பாடாக மற்றையது அமைந்து கொள்ளும் விடைக்கோலம்,
1) E 2) D 3) C 4) B

10. இந்தியாவில் உலகில் ஆன்மீகத்தின் மைல்கல்லாக அமைபவர் அயற்தேசத்தில் பெற்ற வருகையைத் தாங்கிநிற்கும் விடை,
1) D 2) C 3) A 4) B

11. இலங்கையில் நிறுவப்பட்ட ஆரியக் குடியிருப்புக்களில் முதலாவது குடியிருப்பை நிறுவியவர்களின் விடைத்தொகுதியாக அமைவது யாது?
1) விஜயன், அநுராத, உபதிஸ்ஸ, உருவெல.
2) பண்டுவாசுதேவன், பத்தகச்சான, மஹிந்தர், குவேனி.
3) தாடிக, பீடிக, புலகத்த, பிணயமாற.
4) மஹிந்தர், சங்கமித்தை, விஜயன், மதுராபுரி இளவரசி.

12. அநுராத சந்திரவட்டக்கல்லில் இடம்பெற்ற அம்சங்கள் முறையே,
1) யானை, குதிரை, சிங்கம், மான்.
2) மான், மயில், யானை, சிங்கம்.
3) யானை, குதிரை, சிங்கம், எருது.
4) யானை, குதிரை, எருது, சிங்கம்.

13. 1833, 1912, 1921, 1924, 1931 ஆகிய அரசியல் யாப்பு சீர்திருத்தங்களில் 1833 அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள் கொண்ட விடைத்தொகுதி,

A - அமைச்சரவை. B - அரசுக்கழகம்.
C - சட்டவாக்கக் கழகம். D - இருசபை பாராளுமன்றம்.
E - தேசிய அரசுப்பேரவை. F - நிர்வாகம் 5 மாகாணமாதல்.

1) A, B 2) C, D 3) D, E 4) C, F

14. நிரல் X இற்கு பொருந்தும் வகையில் அமையும் Y நிரல் விடைத்தொகுதி யாது?

| X | Y |
|---|---|
| 1 - நிஸ்ஸங்கமல்லன் | A - கலாவெல |
| 2 - வசபன் | B - பாண்டியவிஜய குளம் |
| 3 - மகாசேனன் | C - மணிஹீரவாவி |
| 4 - தாதுசேனன் | D - மானகட்டிய |

1) B, C, D, A 2) B, A, C, D 3) B, D, C, A 4) B, D, A, C

15. இலங்கையின் அரச இருக்கைகளும் அவற்றை ஆண்டவர்களினதும் சரியான ஒழுங்கைக் காட்டும் விடை யாது?

| X | Y |
|---|---|
| 1 - 3ஆம் விஜயபாகு | A - கோட்டே |
| 2 - மகாநாகன் | B - தம்பதெனியா |
| 3 - வலகம்பா | C - உறுகுணை |
| 4 - 6ஆம் பராக்கிரமபாகு | D - அநுராதபுரம் |

1) B, C, D, A 2) B, C, A, D 3) B, A, D, C 4) B,D, A, C

16. பின்வருவோரில் ஐரோப்பாவில் மத சீர்திருத்தத்தை முன்னெடுத்த நபர்கள் யாவர்?

A - கல்வின் B - போப்பையா.
C - ஜோன்ஹஸ். D - சுவிங்கிளின்.
E - தாந்ரே. F - கிட்லர்.

1) A, E, F 2) A, E, D 3) A, E, B 4) A, C, D

17. மறுமலர்ச்சி கண்டுபிடிப்பாளர்கள் X நிரலிலும் அவர்களின் கண்டுபிடிப்புகள் Y நிரலிலும் உள்ளன. அவற்றைப் பொருத்துமிடத்து சரியாக அமையும் விடை,

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1 - நிக்கலஸ் கொப்பநிக்கஸ் | A - ஊசல் தத்துவ விதி. |
| 2 - கெப்லர் | B - குருதிச் சுற்றோட்டம். |
| 3 - வில்லியம் ஹார்வே | C - புவி தட்டை அன்று. |
| 4 - கலிலியோ கலிலி. | D - கோள்கள் நீள்வட்டப் பாதையில் சுழன்று வரல். |

1) C, D, B, A 2) C, D, A, B 3) C, A, D, B 4) C, A, B, D

18. வத்சயம் எதனைத் தலைநகராகக் கொண்டது?
1) கௌசாமபி. 2) உஜ்ஜேனி. 3) பாடலிபுரம். 4) அவந்தி.

19. இந்தியாவின் இறுதிச் சுதந்திர அரசு யாது?
1) டில்லி. 2) பஞ்சாப். 3) பாடலிபுரம். 4) கன்னோசி.

20. பிரஜோனசித்துவின் மகளை மணந்த மௌரியன் யார்?
1) அசோகன். 2) சாணக்கியன்.
3) பிந்துசாரன். 4) சந்திரகுப்த மௌரியன்.

21. இராஜாதிராஜன், விக்கிரமாதித்தன் என்ற பட்டப்பெயர்களைச் சூடிக்கொண்ட குப்த மன்னர்களை முறையே தரும் விடைத்தொகுதி,
1) சமுத்திரகுப்தன், ஸ்கந்தகுப்தன். 2) விஸ்ணுகுப்தன், குமாரகுப்தன்.
3) ஸ்கந்தகுப்தன், 2ஆம் சமுத்திரகுப்தன்.
4) குமாரகுப்தன், சமுத்திரகுப்தன்.

22. உலகின் பல்வேறு மொழிகளிலும் குப்தர்கால இலக்கியங்கள் வெளிவரக் காரணமான புலவர் யார்?
1) காளிதாசர். 2) கௌடில்யர்.
3) கல்வணவர். 4) சமுத்திரகுப்தன்.

23. டில்லிசுல்தான் அரசாட்சியை தொடக்கிவைத்த அரசகுலம் எது?
1) அடிமை வம்சம். 2) லோடிவம்சம்.
3) கில்ஜிவம்சம். 4) துக்ளக்வம்சம்.

24. உலக அபிமானி என்ற பெயரினால் அழைக்கப்பட்டவர் யார்?
1) கோபாலகிருஷ்ண கோகிலே. 2) பபின்சந்திரபோல்.
3) தடாபாய்நபரோசி. 4) பாலகங்காதரதிலகர்.

25. அமைதி, காணி, உணவு ஆகிய சுலோகங்களை முன்னிறுத்தி நடத்தப்பட்ட புரட்சியைத் தலைமையேற்று நடத்தியவர் யார்?
1) குருசேவ். 2) கொப்பர்சேவ்.
3) லெனின். 4) ஸ்டாலின்.

26. குப்தர்கால இந்தியக் கல்விச் செழிப்புக்கு காரணமான பல்கலைக்கழகங்கள் அடங்கும் தொகுதி யாது?
1) ஒக்ஸ்பேக், பேடன்பேர்க், கேம்பிறிச்.
2) நாலந்தா, தக்ஸசீலா, விக்கிரமசீலா.
3) நாலந்தா, தக்ஸசீலா, விற்றன்பேக்.
4) விற்றன்பேக், தக்ஸசீலா, நாலந்தா.

27. இரண்டாம் உலகப் போரில் அச்சு நாடுகளின் அணியைச் சேர்ந்திருந்த நாடுகளின் தொகுதி எது?
1) ஜப்பான், ஆஸ்திரியா, ஹங்கேரி, பிரிட்டன்.
2) பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா.
3) பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா.
4) ஜேர்மனி, ஜப்பான், ஆஸ்திரியா, ஹங்கேரி.

28. மதச்சீர்திருத்தம் முதலில் கருக்கொண்ட தாயகமாக அமைவது,
1) ஜேர்மனி. 2) ஒல்லாந்து. 3) பிரான்ஸ். 4) இத்தாலி.

29. பிரான்ஸியப் புரட்சியின் மத்திய வகுப்பினரின் உறுதியான தத்துவ மேதைகளின் விடைத்தொகுதி,
1) ரூசோ, சேக்ஸ்பியர், மொன்டெஸ்கியூ.
2) ரூசோ, மொண்டெஸ்கியூ, கௌடில்யர்.
3) தோமஸ், கொப்ஸ், ரூசோ, வோல்ரயர்.
4) ரூசோ, மொண்டெஸ்கியூ, வோல்ரயர்.

30. முதலாளித்துவ நாடுகள் வட அத்திலாந்திக் நாடுகளை உள்ளடக்கி உருவாக்கிய நிறுவனம் யாது?
1) ரோட்டோ. 2) CIA 3) வார்சோ. 4) KGP

31. முதலாம் உலகப் போருடன் தொடர்புபட்டவர்களின் விடைத்தொகுதியாக அமைவது,
1) ஹிட்லர், வூட்ரோவில்சன், கிளமன்சோ.
2) வின்சன் சேர்ச்சில், ஹிட்லர், ஓர்லாண்டோ.
3) வூட்ரோவில்சன், ரூஸ்வெல்ட், ஓர்லாண்டோ.
4) வூட்ரோவில்சன், லொய்சோர்ச், ஓர்லாண்டோ.

11ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு I - தொடர்ச்சி....

32. மத்தியகால வணிக மார்க்கமாக அமையாதது,
1) ஸ்தான்புல். 2) ஜெனோவா.
3) பாரிஸ். 4) அலெக்சாந்திரியா.

33. ஸ்வேதகொன் அமையப்பெற்றிருப்பது,
1) ரோம். 2) தாய்வான்.
3) மலேசியா. 4) ஆப்கானிஸ்தான்.

34. வலகம்பா, மகாசேனன் ஆகியோரின் பணி தொடர்பான பொதுவான இயல்பு,
1) பாரிய பொருளியல் பணி புரிந்தமை.
2) தென்னிந்திய ஆக்கிரமிப்பை எதிர்கொண்டமை.
3) தேரவாதத்துக்குச் சார்பாக செயற்பட்டமை.
4) மகாஞானத்துக்குச் சார்பாக செயற்பட்டமை.

35. இரத்துச்செய்யும் அதிகாரம் கொண்ட நாடுகள் அடங்கிய விடைக்கோலம்,
1) அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா.
2) நோர்வே, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா.
3) ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா.
4) நேபாளம், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா.

36. இலங்கையில் நிலவிய ஒல்லாந்தர் ஆட்சியின் பெறுபேறாக அமையும் விடை,
1) ரோமன் கத்தோலிக்க மதத்தின் அறிமுகம்.
2) உரோமன் டச்சுச்சட்டம் அறிமுகம்.
3) புதிய சங்கீத முறையின் அறிமுகம்.
4) ஆங்கிலக் கல்வியின் அறிமுகம்.

37. மறுமலர்ச்சியை ஏற்படுத்தாத விடையாக அமைவது,
1) அச்சியந்திரம் கண்டறிவு.
2) மானிய முறைச் சரிவு.
3) ஐரோப்பாவில் குவிந்த செல்வம்.
4) திருச்சபையின் செல்வாக்கு.

38. ஜப்பானில் மேஜியின் சீர்திருத்தம் நீதித்துறையில் ஏற்படுத்திய மாற்றமாக அமையாதது,
1) சிறந்த நீதி நடைமுறை உருவாக்கப்படல்.
2) 14 நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்றம் உருவாதல்.
3) உயர் நீதிபதிகளின் பதவிக்காலம் 10 ஆண்டுகளாக இருத்தல்.
4) யாலியன் வாலாபாக் படுகொலை நிகழுதல்.

39. தேசிய அரசுகளின் பண்பாக அமையப்பெறாத விடை,
1) நிலைத்த படை.
2) நிலைத்த பிரபுக்களின் அதிகாரம்.
3) நிலைத்த வலுவான முடி.
4) மத்தியமயப்பட்ட நிர்வாகம்.

40. இலங்கையின் அரசியல் ஆட்சி வளர்ச்சியில் பொருத்தமற்ற கருத்துச்சோடி,
1) N.M.பெரேரா - லங்கா சமசமாஜக் கட்சி.
2) A.E.குணசிங்க - தொழிற்கட்சி.
3) S.J.V.செல்வநாயகம் - தமிழ்க் காங்கிரஸ்.
4) D.S.சேனநாயக்கா - ஐக்கிய தேசியக் கட்சி.

# வரலாறு - II

**33-T-II**

★ பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.
★ பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும், பகுதி III இலிருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
★ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I





01. அ. பின்வரும் I இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், II இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I கோகர்ணம், கற்பிட்டி, மின்னேரியா, தீகவாவி, கோணநதி, களுத்துறை, வல்லிபுரம், மாத்தறை, சிகிரியா, கஜரகாம.

II கிருஷ்ணா நதி, பெர்லின், ஜேர்மனி, புளோரன்ஸ், பிரித்தானியா, ஜப்பான், சென்பீற்றர்ஸ்பேர்க், தென்கொரியா.

ஆ. கீழே A, B, C, D வரிசைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமானவர்களை அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து முறையே எழுதுக.
A - றொபேட் பிறவுண்றிக்கின் ஆலோசகராகச் செயலாற்றியவர்.
B - ரஷ்யாவை ஆதரித்துநின்ற முதல் பிரதமர்.
C - இலங்கையில் முதல் படித்த இலங்கையர்.
D - இலங்கையில் இலவசக் கல்வியின் முன்னோடி.
(ரொறிங்டன், சேர் பொன்.இராமநாதன், D.S.சேனநாயக்கா, S.W.R.D. பண்டாரநாயக்கா, C.W.W.கன்னங்கரா, ஜோன் டொய்லி)

இ. கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்புக்களை, நபர்களை, மையங்களை முறையே குறிப்பிடுக.

ஈ. கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
A - ஜப்பானால் அமெரிக்காவின் எத்துறைமுகத்தில் குண்டுமழை பொழியப்பட்டது.
B - புனித தந்ததாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட காலம்.
C - குப்த பேரரசை நிறுவியவன்.
D - பௌத்தத்திற்குப் பெரிதும் ஆதரவுகாட்டிய நாயக்க மன்னன்.

## பகுதி - II

02. 1) A, B, C எனக் காட்டப்பட்டுள்ள இராச்சியங்களை முறையே பெயரிடுக.
2) பின்வரும் இராசதானிகளை நிறுவியவர்களை முறையே தருக.
A - பொலநறுவை.
B - தம்பதெனியா.
C - கம்பளை.
D - கோட்டை.




3) இராசரட்டை நாகரிகத்தின் சரிவிற்கான காரணிகள் இரண்டினை விளக்குக.
4) இலங்கையின் அரச மையங்களில் படையெடுப்பை மேற்கொண்ட தென்னிந்திய ஆக்கிரமிப்பைச் சுருக்கமாக விவரிக்குக.

03. 1) A - அநுராதபுரத்தின் கடைசி வேந்தன், B - தேவநம்பியதீசனின் தந்தை, C - பொலநறுவையைத் தலைநகராக்கியவன். ஆகியோரை முறையே குறிப்பிடுக.
2) இராச்சிய இடப்பெயர்வில் பொலநறுவையை ஆண்ட மகா பராக்கிரம பாகுவின் பொருளியல்பாடுகளை விளக்குக.
3) அரச புலம்பெயர்வில் இலக்கிய வளர்ச்சி, கலை வளர்ச்சி ஆகியவை எவ்வெவ் அரசுகளில் நிகழ்ந்தன என்பவற்றை விளக்குக.
4) இலங்கையில் அரச மையங்கள் புலம்பெயர்ந்த ஒழுங்கினைக் குறிப்பிட்டு 2ஆம் பராக்கிரமபாகுவின் சாதனைகளை மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக.

04. 1) A - கோனப்பு பண்டார, B - குசுமாசனதேவி, C - டிக்கிரி பண்டார ஆகியோரின் மறுபெயர்களை முறையே தருக.
2) சீதாவாக்கையின் எழுச்சியில் பங்கேற்ற இருவரைக் குறிப்பிட்டு அதில் ஒருவர் அதன் எழுச்சிக்கு ஆற்றிய சேவைகள் 2 தருக.
3) கண்டியை ஆண்ட நாயக்க மன்னர்களை பட்டியலிட்டு ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன் மலையக மக்களின் வெறுப்பிற்கு ஆளாகியமைக்கான காரணிகள் மூன்றை விளக்குக.
4) இலங்கையில் கண்டி அரசினை வேற்று நாட்டவரினால் இலகுவில் வெற்றி கொள்ள முடியாமைக்கான காரணிகள் மூன்றை விளக்குக.

05. 1) இலங்கையில் தம் வரவை ஏற்படுத்திய வேற்று நாட்டவரின் போர்த்துக்கேயரின் வருகைக்கான பிரதான நோக்கங்கள் 3 தருக.
2) A - இலங்கையின் முதலாவது பெருந்தோட்டப்பயிர், B - முதல் பிரித்தானிய தேசாதிபதி, C - 1766 ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோர், D - இலங்கையில் கண்டியின் கடைசி சிங்கள மன்னன் ஆகியோரைக் குறிப்பிடும் விடைகளை முறையே தருக.
3) இலங்கையில் தேசிய, மத, கலாசார மறுமலர்ச்சி நிகழ்ந்த முறைகளைக் குறிப்பிட்டு அதில் யாதாயினும் ஒன்றிற்கு யாதாயினும் ஒரு நபர் ஆற்றிய சேவையினை விளக்குக.
4) இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிராக கலகங்கள் நிகழ்ந்த காலங்கள், சந்தர்ப்பங்கள் மூன்றினை விளக்குக.

06. 1) A - இருசபைகொண்ட பாராளுமன்றம், B - நிர்வாகக் குழு முறைமை, C - அடிப்படை உரிமைகள் விரிவாக விளக்கப்படுதல் ஆகியவை நிகழ்ந்த சந்தர்ப்பங்களை முறையே தருக.
2) இலங்கையின் உள்ளூராட்சி அமைப்பு முறையைக் குறிப்பிட்டு மாகாண சபையின் கடமைகள் இரண்டையும் தருக.
3) ஜனாதிபதி ஒருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் மூன்றையும், அதிகாரங்கள் மூன்றையும் குறிப்பிடுக.
4) இலங்கையில் பிற்காலத்தில் கல்விக் கட்டமைப்பில் ஏற்பட்ட விருத்திகள் 3 இனை விளக்குக.

## பகுதி - III

07. 1) A - குப்த பேரரசு, B - மௌரியப் பேரரசு, C - மொகலாயப் பேரரசு ஆகியவற்றை முறையே குறிப்பிடுக.
2) இந்தியாவை ஆண்ட முஸ்லிம் பேரரசுகள் அல்லது வம்சங்கள் நான்கினைக் குறிப்பிட்டு இஸ்லாமியரின் கவனம் இந்தியாவின் மீது திரும்ப காரணங்கள் 2 தருக.
3) டில்லிசுல்தானின் சரிவிற்கான காரணிகள் 3 ஐ விளக்குக.
4) மொகலாயப் பேரரசில் அக்பரின் சாதனைகள் அவ்வரசின் எழுச்சிக்கு எவ்வகையில் துணைநிற்கின்றதென விளக்குக.

08. 1) ரஷ்யா போல்ஸிக் புரட்சியின் பின் வலுக்கொண்ட நாடாக மாற காரணமான மூவரைத் தருக.
2) A - ரஷ்யப்புரட்சி, B - பிரான்ஸியப்புரட்சி, C - சீனாவில் சமூக உடைமை, D - தொழில் புரட்சிக்கு வரைவிலக்கணம் அளித்தலை மேற்கொண்டோர் ஆகியோரைக் குறிப்பிடும் விடைகளை முறையே தருக.
3) ரஷ்ய வீழ்ச்சியினால் ஏற்பட்ட உள்நாட்டு மாற்றங்கள் 4 ஐத் தருக.
4) ஜப்பான் கொண்டிருந்த பொருளாதார முயற்சிகள் மூன்றினைக் குறிப்பிட்டு கைத்தொழில் துறையில் ஏற்பட்ட உலகப்போரின் பின்னரான மூன்றுகட்ட வளர்ச்சிகளையும் குறிப்பிடுக.

09. 1) A - மானிய முறை, B - மறுமலர்ச்சி, C - நாடுகாண் பயணங்கள் ஆகியவை முதலில் நிகழ்ந்த தாயகங்களை முறையே தருக.
2) மத்தியகால மானியமுறையின் தோற்றத்திற்கான காரணிகள் 2 இனை விளக்குக.
3) ஐரோப்பாவில் நிகழ்ந்த சிலுவைப்போரின் எண்ணிக்கையையும் அதில் பங்கேற்றோருக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மூன்றையும் விளக்குக.
4) மறுமலர்ச்சி நிகழ்ந்த பிரதான துறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அக்கால அறிவியல் விஞ்ஞான விருத்தியைச் சுருக்கமாக விளக்குக.

10. 1) முதலாம் உலகப்போர், 2ஆம் உலகப்போர் கால அமெரிக்க ஜனாதிபதிகளையும், அந்நாட்டின் அரச மாளிகையையும் முறையே தருக.
2) முதலாம் உலகப்போர் நிகழ வாய்ப்பளித்த காரணிகள் 2 இனை விளக்குக.
3) சர்வதேச சங்கம் தாங்கியிருந்த நோக்கங்கள் 2 ஐயும், அதன் வீழ்ச்சிக்கான காரணங்கள் 3 ஐயும் தருக.
4) ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தை நிலைநாட்டுவதில் தோல்வி கண்ட சந்தர்ப்பங்கள் 3 இனை விளக்குக.

-நிறைவுற்றது-

ஆசிரியர்: கல்விச்சுடர் ஆசிரியர், தென்மராட்சி.
தொடர்புகளுக்கு: 0714273035, 0716850005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் பத்திரிகையில் ஞாயிறு தோறும் வெளிவரும் விடைதெரியுமா? போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்வு அண்மையில் உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.செயலகப் பிரதித்திட்டமிடல் பணிப்பாளரும், மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக்குழு ஒருங்கிணைப்பாளருமான திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் மு.முரளிதரன், வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் எஸ்.சிவபாதசுந்தரம், மூத்த பத்திரிகையாளர் எஸ்.பெருமாள் ஆகியோர் உரையாற்றுவதனையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: உமா, சுகந்தன்)

# இளம் சந்ததியினர் கைத்தொலைபேசி பாவனையால் கலாசாரச் சீரழிவுகளுக்கு ஆளாகும் அபாயம்

## 'உதயன்' பரிசளிப்பு விழாவில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.3

இன்றைய காலகட்டத்தில் கைத்தொலைபேசியை வைத்திருக்காதவர்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்.குடா நாட்டிலும் கைத்தொலைபேசிகளுக்கு பஞ்சமில்லை. இளம் சமூகத்தினர் அவற்றின் ஊடாக வேண்டத்தகாத படங்களைப் பார்த்து, அவை தொடர்பாக கருத்துப் பரிமாறும் நிலை காணப்படுகிறது. இதனால் இளம் சமூகத்தினர் கலாசார சீரழிவுகளில் சிக்கி வழிதவறும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளரும், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன்.

ஞாயிறு தோறும் உதயனில் வெளிவரும் விடைதெரியுமா? போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு அண்மையில் உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே திருமதி இ.மோகனேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். இந்தநிகழ்வில் அவர் கூறியவை வருமாறு:

குழந்தைகளினுடைய வளர்ச்சிப்பாதையில் ஊடகங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். அந்த வகையில் உதயன் பத்திரிகை மிகச் சிறப்பாகத் தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. சிறுவர்களின் அறிவுத் தேடலை அவர்களது பொது அறிவினை மேம்படுத்தும் வகையில் உதயன் பத்திரிகை சிறுவர் கதிர் பகுதி மூலம் உதவி வருகிறது.

யாழ்.மாவட்டத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் இன்றைய சிறுவர்கள் இருக்கிறார்கள். நல்ல சிந்தனையும் நல்ல சூழலும் குழந்தை வளர்ப்பில் அவசியமானது. தமது பிள்ளைகளுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளைக் கண்காணித்து கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும் உரிய வேளையில் தட்டிக் கொடுத்தும் பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

அது மட்டுமன்றி குழந்தைகளின் சுய சிந்தனைக்கும் பெற்றோர் வழிகாட்ட வேண்டும். எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளம் இட்டுக் கொடுப்பது சிறுவயது நடத்தைகளும், சிந்தனைகளும் ஆகும்.

தற்போது தேவையற்ற சீடிகள், சஞ்சிகைகள் மற்றும் கைத்தொலைபேசிகள் என்பவற்றைத் தேவையற்றுப் பயன்படுத்துவதில் இளம் சமூகம் ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கிறது.

பால்நிலை சமத்துவமின்மை, சிறுவர் துஷ்பிரயோகம் இவைகளை இல்லாமல் செய்வதற்கு சிறுவர் உரிமைகள் குறித்து பெற்றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி ஊடகங்கள் விழிப்பாக இருக்க வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஆனைப் பந்தி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் மு.முரளிதரன் குறிப்பிடுகையில்,

சிறுவர்கள் உள்ளிட்ட அனைவரதும் அறிவு விருத்திக்கு ஊடகங்கள் சிறப்பான பங்காற்றி வருகின்றன. உதயன் பத்திரிகை சிறுவர் பகுதி மூலம் சிறுவரது அறிவுத் தேடலுக்கு உதவி வருகிறது. இதனால் சிறுவர்களது மூளையின் அனைத்துப் பகுதிகளையும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். மூளையின் இடது, வலது பக்கங்கள் இயங்குவதாவது குழந்தையின் ஆளுமை விருத்தி இயல்பாகவே ஏற்படுகின்றது. சிறுவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பெரும் எதிர்பார்ப்பை உண்டுபண்ணி வருகின்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவர்களது பாடப் புத்தகம் மட்டும் உதவாது. சிறுவர்களது தேடல்கள், நுண்ணறிவுகள், பொது அறிவு சார்ந்த விடயங்கள் அவசியமாக இருக்கும். இதற்கு ஏற்ற வகையில் உதயன் உதவி வருகிறது - என்றார். வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் எஸ்.சிவபாதசுந்தரமும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (04-09-14-15-16)

# வலுவிழந்தோரும் சமூகத்தின் பிரிக்கமுடியாத ஒரு பிரிவினரே; அவர்களின் நலன்பேணல் என்பது தலையாய கடமையாகும்

**சர்வதேச வலுவிழந்தோர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

வலுவிழந்தோர் என்றாலே வேண்டப்படாதவர், பயனற்றவர், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் ஏன் நாட்டிற்குமே ஒரு விரும்பப்படாத சுமையானவர் என்ற கருத்து காலா காலம் சர்வ உலகிலுமென்றே கூறினாலும் மிகையாகாது. ஆனால் மேற்கு நாடுகள் பல காலத்திற்கு முன்பே தமது கண்ணோட்டத்தை மாற்றிக்கொண்டன. உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படும் யுத்த விளைவுகள் மற்றும் சமூக அழுத்தங்கள் மேற்கு நாட்டவர்களின் கண்களைத் திறக்க வைத்தன. வலுவிழந்தோர்களை மாற்று வலுவுடையோர்களாக மாற்றி சாதாரண சமுதாய நீரோட்டத்தில் அவர்களையும் இணைக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. பல்வேறு விதமான புனர்வாழ்வுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்த மட்டிலே மிக அண்மைக்காலமாகத்தான் வலுவிழந்தோர் பற்றியொரு விழிப்புணர்வு மக்களிடையேயும், அரசாங்கத்திடமும் தோன்றியுள்ளது. இவ் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத்தான் உலகளாவிய ரீதியில் டிசெம்பர் 3ஆம் திகதி சர்வதேச வலுவிழந்தோர் தினமாக உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எல்லோரிடமும் ஏதோவொரு ஊனமுண்டு. ஆனால் கண்ணில் படாத ஊனங்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அவற்றை நாங்கள் கூற விரும்புவதுமில்லை. ஆனால் கண்ணில் படுபவை கவனிக்கப்பட வேண்டியவை. இவ்வகையைச் சார்ந்தவர்கள் தற்போது போர் ஓய்ந்த சூழ்நிலையில் கணக்கெடுக்க முடியாத கட்டுமீறிய தொகையாகிவிட்டது. ஏற்கனவே புனர்வாழ்வுக்காக ஏங்கித் திரியும் மாற்று வலுவடையோர்களுடன் புதிய தொகையும் சேர்த்துப் புனர்வாழ்வு அழிக்க முடியுமா? இன்றைய நிலையில் மாற்று வலுவுடையோர் நலன் பேணுவதற்கு மட்டும் ஒரு தனியமைச்சு உருவாக்குதல் அவசியமும், அவசரமானதுமாகும். இந்த வேண்டுகோளை இந்தாண்டு சர்வதேச வலுவிழந்தோர் தினத்தில் மையப் பொருளாக முன்வைக்க விரும்புகின்றோம். இன்று நடைபெறுவதென்ன? வலுவிழந்தோருக்கான விசேட தினங்களிலே அவர்களை அழைத்து உணவு கொடுத்து சில நிகழ்வுகளையும் மேடையேற்றிப் பரிசில்களையும் வழங்கி திருப்தி காணப்படுகின்றது. ஆனால் மேற்கொள்ளப்பட வேண்டிய உண்மையான பணி இவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டத் திட்டவட்டமான பணிகளை மேற்கொள்வதே.

வலுவிழந்தோர் புனர்வாழ்வு பற்றி மேலோட்டமாகப் பார்ப்பதிலும் சிறிது ஆழமாக ஆராய்ந்து சில திட்டங்களை முன்வைத்தல் பொருத்தமானதாகும். எம்மால் புனர்வாழ்வளிக்கக்கூடிய பிரிவினரை எடுத்துக்கொண்டால் விழிப்புலன் இழந்தோர், செவிப்புலன் இழந்தோர், உடல் ஊனமுற்றோர், மூளைவளர்ச்சி குன்றியோர் இந்த நான்கு பிரிவினரையும் மட்டும் முதலிலே எமது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனைய குறைபாடுள்ளோர் தொகை மிகக் குறைவாக இருந்தாலும் அவர்களின் புனர்வாழ்வுத்திட்டம் வேறுபட்டதென்பதாலும் அவர்களை இங்கு கவனத்திற்கு எடுத்துக் கொள்வதில்லை. மேற்கூறிய நான்கு பிரிவினர்களில் பார்வையற்றவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் குறைபாடு நடமாடல் சம்பந்தமானதே. இன்றைய ஒன்றிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ அவர்கள் சாதாரண பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்று உயர் கல்வியையும் பெற்று உயர் தொழில்களையும் வகுத்து வருகின்றனர். இவர்களுக்கு வாழ்வகம், (பார்வை இழந்த மாணவர்களுக்கான இல்லம்) பெரிதும் கைகொடுக்கின்றது. ஆனால் கல்வி கற்க முடியாதவர்கள் நிலை சிறிது ஆராயப்படவேண்டியுள்ளது. இவர்களில் சிலர் தமது சொந்த முயற்சியால் கதிரைப்பின்னல், தும்புத்தடி, விளக்குமாறு செய்தல், சிறுவியாபாரம் போன்ற தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் சிலர் பிச்சையெடுத்தும் வருகின்றனர். ஆனால் தென்பகுதியிலுள்ள சீதுவை, வத்தேகம போன்ற ஒரு வதிவிட வசதியிடமான தொழிற்பயிற்சி இன்னும் இங்கு ஆரம்பிக்கப்படவில்லை. இந்த முயற்சியை அரசாங்கமோ அரச சார்பற்ற நிறுவனமோ, தயாள சிந்தனையுள்ள தனியாரோ மேற்கொள்ள வேண்டுமென இன்றைய தினத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இதேபோன்று செவிப்புலன் அற்றவர்கள் உயர்கல்வியை மேற்கொள்ள முடியாதவர்கள். எனவே அவர்கள் இன்று தமது சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி சிலசில தாபனங்களில் சிற்றூழியர்களாக வேலை பார்க்கின்றனர். இன்னும் சிலபேர் மிகவும் குறைந்த ஊதியத்திற்குத் தனியாரிடம் கெஞ்சி மன்றாடி வேலை பெற்றுத் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். ஆனால் பலர் எந்தப் பயிற்சியோ, தொழிலோ இன்றிக் காலத்தை வீணே கழிக்கின்றனர்.

இவர்களிடம் நிறைந்த ஆற்றல் உண்டு. ஆனால் அவற்றை வெளிக்கொண்டுவர வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஊமையின் கனவு என்று ஏழ்மையாகப் பேசப்படுகின்றார்கள். இவர்களுக்குத் தேர்ச்சி (சமூக) புனர்வாழ்வு, தொழிற்பயிற்சி நிலையம் என்பன காணப்படுவது போன்று ஒரு வதிவிடப் பயிற்சி நிலையத்தை அமைத்துப் பயிற்சியளித்து வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துதல் அவசியமானதாகும். இதனையும் முன்கூறியுள்ளது போன்று அரசோ, அரசசார்பற்ற நிறுவனமோ, தனியாரோ மேற்கொள்ளலாம்.

மூன்றாவது பிரிவான உடல் ஊனமுற்றவர்களின் புனர்வாழ்வில் ஜெய்ப்பூர் நிறுவனம் தம்மாலான பங்கினை ஆற்றி வருகின்றது. ஆனால் அவர்களுக்கும் பொருத்தமான தொழிற்பயிற்சியை வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அவர்களிடமும் ஆற்றல் நிறைய உண்டு. ஆனால் வழிப்படுத்துபவர்கள் எவரும் இல்லை. அவர்கள் கல்வியையும் தொடர ஆவன செய்தல் வேண்டும். தொழிற்பயிற்சிகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும். பொருத்தமான தொழில்கள் வழங்கப்படுவதற்கு ஆவனசெய்யப்பட வேண்டும்.

நான்காவது பிரிவான மூளை வளர்ச்சி குன்றியோர் இவர்களின் கல்வி தற்போது கவனிக்கப்பட்டு வருவது பாராட்டுதற்குரியது. தொழிற்பயிற்சி, தொழில் வாய்ப்புக்கள் என்பன தனியான சிறப்புத்திட்டம் வகுத்து அமுல்படுத்தல் அவசியமாகும்.

இன்று அரசு பல வசதிகளை வழங்க முன்வந்துள்ளது. 4% (நான்கு வீதம்) வேலை வாய்ப்பு, வீடு வசதிகள், சுயதொழில்களுக்கான உதவி, கடன் வசதி, பயிற்சி உபகரணங்கள் எனப் பல உதவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் இவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்ய சமூகம் முன்வர வேண்டும்.

**கே.கோபாலகிருஷ்ணன்**
**செயலாளர்-வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் யாழ்ப்பாணம்.(AROD)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றமுன்னர் குடியேற்றம்; ஆபத்துக்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 03

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாத சூழ்நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற்றப்படுகின்றமை குறித்து சுட்டிக்காட்டியுள்ள கண்ணிவெடி அகற்றும் அமைப்புகள், இதனால் தவிர்க்க முடியாதபடி உயிரிழப்புகளும், காயங்களும் ஏற்படப்போகின்றன என எச்சரித்துள்ளன.

சர்வதேச செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் நிலக்கண்ணி வெடி ஆலோசனைக்குழுவின் தலைவர் லெவெலைன் ஜோன்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அச்செய்திச்சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்படவுள்ள நிலையில் அவர்களது பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது பணிகளைத் துரிதப்படுத்த வேண்டிய அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

கண்ணிவெடிகள் மரங்கள், வீடுகள், வீதியோரங்களிலும் புதைக்கப்பட்டுள்ளன. கண்ணிவெடிகளை இனம் காண்பது கடினமாகவுள்ளது என இலங்கையில் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக இப்பணியை மேற்கொண்டுவரும் கண்ணிவெடிகள் ஆலோசனைக்குழுவின் தலைவர் லெவெலைன் ஜோன் தெரிவிக்கிறார்.

இந்தப் பகுதிகளில் சில காலமாக மக்கள் வாழாதமையால் நிலக்கண்ணி வெடிகள் குறித்த உள்ளூர்த் தகவல்களைப் பெறுவதும் அவை எங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பதை இனம் காண்பதும் கடினமாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மோதல் நடைபெற்ற கிராமங்களில் கிணறுகள் வெடிக்காத வெடிபொருட்கள் நிரம்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரு தரப்பும் பொதுமக்களை இலக்கு வைத்தமைக்கான அறிகுறிகள் இல்லாத போதிலும் பொதுமக்களின் வாழ்விடங்களும் வயல்கள் போன்றவற்றிலும் கண்ணி வெடிகள்மிக அதிகமாகக் காணப்படுகின்றன என்றார் அவர்.

நாம் செய்து முடிக்கவேண்டிய பணி இன்னமும் உள்ளது. நிலக்கண்ணி வெடிகளை அகற்றுபவர்கள் ஆராயாத பகுதிகள் இன்னமும் உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாத பகுதிகளுக்குள் மக்கள் செல்வதால் உயிரிழப்புகள், காயங்கள் ஏற்படப்போவது தவிர்க்க முடியாதபடி நிகழப்போகின்றன என்றும் ஜோன்ஸ் எச்சரித்துள்ளார். (சி)

# பம்பலப்பிட்டிக் கொலை வழக்கு சாட்சிக்கு மரண அச்சுறுத்தலாம்

கொழும்பு, டிசெ. 03

தாம் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சாட்சியம் தெரிவித்தமையை அடுத்து, தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என பம்பலப்பிட்டி கொலை வழக்கில் சாட்சியமளித்த பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் அண்மையில் நடைபெற்ற, மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞரான பாலவர்ணம் சிவகுமாரை கடலில் மூழ்கடித்து கொலை செய்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் சாட்சியமளித்த பெண் ஒருவரே இந்த அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளார்.

ரேணு குணதிலக என்ற இந்த பெண், தாம் தனிமையில் வாழ்ந்து வருகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பொலிஸார் தமக்கு எதிராக ஏதாவது பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி தம்மை சிறைக்கு அனுப்ப முயற்சிக்கலாம் எனவும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ஊடகங்கள் பக்கச் சார்பாகச் செயற்பட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 03

ஊடகங்கள் பக்கச் சார்பான முறையில் செயற்பட்டால் அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது தேர்தல் ஆணையாளர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

தேர்தல் காலங்களில் அரச ஊடகங்கள் அரசிற்குச் சார்பான முறையில் செயற்பட்டு வருவதற்கான ஆதாரங்களை எதிர்க் கட்சியினர் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் பக்கச் சார்பாக செயற்படும் ஊடகங்கள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

தனியார் மற்றும் அரச ஊடகங்களை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் தம்மிடம் காணப்பட்டுள்ளது. எனத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகள் குறித்த பொன்சேகாவின் கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறது அரசத் தரப்பு

கொழும்பு, டிசெ. 03

சரத் பொன்சேகாவின் விடுதலைப்புலிகள் குறித்த உரை அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இது கண்டனத்துக்குரிய ஒன்று என ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி வெளியிட்ட கருத்துக்கள் அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. நாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாத்ததாகத் தெரிவித்துக் கொள்ளும் ஓர் இராணுவ ஜெனரலிடமிருந்து இவ்வாறான ஒரு கூற்றை நாம் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதியோ மக்களோ இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பொன்சேகாவின் கொள்கை இதுதானென்றால் அது மிகவும் ஆபத்தானது.

பொன்சேகாவின் இந்த உரை பல்வேறு தியாகங்களையும் அர்ப்பணிப்புக் களையும் செய்த ஆயிரக்கணக்கான படையினருக்கு இழைக்கும் துரோகம் ஆகும். தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களிடமிருந்து உதவியை பெற்றுக் கொள்வது சட்டத்துக்கு முரணானது. இவரது இந்தக் கொள்கைக்கு ஜே.வி.பியும் ஆதரவு வழங்குமா?

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பானது பீனிக்ஸ் பறவைக்கு நிகரானது மீண்டும் உயிர்த்தெழ சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கிறது என அறிய முடிகிறது. இவ்வாறான ஒரு நிலைமையில் ஜெனரல் சரத் பொன்சேகா விடுதலைப்புலிகளுக்கு ஒட்சிசன் வழங்க முயற்சிக்கின்றாரா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.



தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாண அஞ்சல் வங்கிக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் அச்சுவேலிக்கிளை முகாமையாளர் எஸ். நந்தகுமார், நெல்லியடிக்கிளை உதவி முகாமையாளர் ஈ.அன்ரன் யோகநாயகம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், வாடிக்கையாளர்கள், உத்தியோகத்தர்கள் மத்தியில் அஞ்சல் வங்கி முகாமையாளர் இ.இராஜா மகேந்திரசிங்கம் உரையாற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (50)

## மனமுவந்து உதவுங்கள்



சுன்னாகம் ஏழாலை மேற்கைச் சேர்ந்தவரும் மட்டக்களப்பு மாமாங்கம் இல. 95/4, 1 ஆம் குறுக்குத் தெரு என்ற விலாசத்தில் வசிப்பவருமான ரவிச்சந்திரன் ஷர்மிளா (சஞ்சயா) என்பவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு இருதய சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் அதற்கு 5 இலட்சம் ரூபா செலவாகும் எனவும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

கஷ்ட நிலையில் உள்ள இவரின் பெற்றோர் பரோபகாரரிகளிடம் இருந்து உதவிகளை எதிர் பார்க்கின்றனர். பணம் உதவி செய்ய விரும்புவோர் கொமர்ஷல் வங்கி மட்டக்களப்புக் கிளை 8105034963 என்ற கணக்கு இலக்கத்திற்கு பணத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்கின்றனர். அவர்களது தொலைபேசி இலக்கம் : 0778526121.

## சாதாரண தர மாணவருக்கான இலவசக்கருத்தரங்கு

யாழ்ப்பாணம் டிசெ. 03

ஜி. சீ. ஈ சாதாரண தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு பண்டத்தரிப்பு சூரியன் அக்கடமியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்கான இக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு பண்டத்தரிப்பு சூரியன் அக்கடமியில் நடைபெறும்.

இதில் கணிதம், விஞ்ஞானம், சித்திரம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல்களும் நடைபெறும். (50-16-112)

# டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தற்காலிக அடையாள அட்டைகள்

## ஆட்பதிவுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 03

இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படும் - என்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அடையாள அட்டை இல்லாதவர்கள் தங்கு தடையின்றி தேர்தலில் வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் சுமார் 26 லட்ச வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை இன்றி இருக்கின்றனர் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.ஜீ.தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

உரிய ஆவணங்களை சரியான நேரத்தில் சமர்ப்பிக்க தவறியமை காரணமாக சிலருக்கு தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது விநியோகம் செய்யப்படவுள்ள தற்காலிக அடையாள அட்டைகளை ஜனாதிபதி, பொது மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கு பயன்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கும் செல்வாக்கு அதிகம் புலனாய்வுப்பிரிவினர் இரகசியக் கருத்துக் கணிப்பு

கொழும்பு, டிசெ. 03

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பேராதரவு யாருடைய பக்கம் உள்ளது என்பதைக் கண்டறியும் விதமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் அரச புலனாய்வுப் பிரிவினர் கருத்துக் கணிப்பீடு ஒன்றை அண்மைய நாட்களில் மேற்கொண்டுள்ளார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அவர்கள் இக்கருத்துக்கணிப்பின் முடிவுகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இரகசிய அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார்கள்.

அரச புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கவால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த இரகசிய அறிக்கையின்படி 53 சதவீதமான இலங்கையர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் 46 சதவீதமான இலங்கையர்கள் பொன்சேகாவுக்கு ஆதரவாகவும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெனரல் பொன்சேகாவின் செல்வாக்கு நகரப் பகுதிகளில் ஓங்கிக் காணப்படுகிறது என்றும் கிராம மக்களின் விருப்பத்துக்குரிய தெரிவாக மஹிந்த ராஜபக்ஷ உள்ளார் என்றும் அதில் கோடிகாட்டப் பட்டுள்ளது.

ஆனால் தேர்தலில் போட்டியிடுகின்றமை குறித்து பொன்சேகா உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னரே இக்கருத்துக் கணிப்பீடு இடம்பெற்றுள்ளது என்றும் அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னரும் மக்கள் யாருடைய பக்கம் என்பது குறித்து புலனாய்வுப் பிரிவினர் கருத்துக் கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு 60 சதவீதமாக இருந்தது என்றும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்திகள் கசிந்துள்ளன.

எது எப்படி இருப்பினும் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என பொன்சேகா உத்தியோகபூர்வமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை அறிவித்துள்ள நிலையில், மக்களின் மன நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிடும் பட்சத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கான மக்கள் செல்வாக்கில் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் ஏற்படத்தான் செய்யும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

# ஜெனரல் சரத்பொன்சேகாவின் கிரக நிலை சிறப்பாக உள்ளது

## அவரது மனைவி கூறுகிறார்

கொழும்பு, டிச. 02

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கிரகநிலை மிகவும் சிறப்பான முறையில் அமைந்துள்ளது என அவரது பாரியார் அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரலுக்கு சிறந்த எதிர்காலம் இருக்கிறது என நண்பர்களும், உறவினர்களும் ஜாதக பலன்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவித்துள்ளார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜோதிடத்தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும், உறவினர்கள் இது தொடர்பாக வலியுறுத்தி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரலின் ஜாதகத்தை எடுத்துச் சென்ற அனைவரும் சிறந்த பலன் கிட்டும் எனத் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலரின் குருபூசை தினவிழா நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் செவ்வாயன்று

யாழ்ப்பாணம், டிசெ.03

ஆறுமுகநாவலரின் 130 ஆவது குருபூசைத்தினவிழா எதிர் வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலனசபைத் தலைவர் த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் ''நாவலரும் புராண படனமும்' என்னும் தலைப்பில் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடை பெற்ற பேச்சுப் போட்டி யில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் நடைபெறவுள்ளது.

பரிசு பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு

உ.சாந்திகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), நவநீதா சிவநேசநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), பிரசாந்தி கண்ணதாஸ் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மத்தியபிரிவு

ஜானுஷா அருந்தவராசா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), தம்பிஐயா மதுஜனன் (இணுவில் மத்திய கல்லூரி), க.யஸ்மிதா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

(204-16)


## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

01.12.2009

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2185

வெற்றி எழுத்து: C — வெற்றி எண்கள்: 8 0 1 1 0 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C 8 0 1 1 0 3 | ரூபா.17,027,056/= | பரிசு | |
| 1 பரிசுகள் | 8 0 1 1 0 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் | 01 |
| 2 பரிசுகள் | 0 1 1 0 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 11 |
| 3 பரிசுகள் | 1 1 0 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 107 |
| 4 பரிசுகள் | 1 0 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 1074 |
| 5 பரிசுகள் | 0 3 | ரூபா. 100/= | பரிசுகள் | 10716 |
| 6 பரிசுகள் | 3 | ரூபா. 20/= | பரிசுகள் | 106376 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | 8 0 1 1 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 11 |
| 8 பரிசுகள் | 8 0 1 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 116 |
| 9 பரிசுகள் | 8 0 1 | ரூபா. 100/= | பரிசுகள் | 1102 |
| 10 பரிசுகள் | 8 0 | ரூபா. 50/= | பரிசுகள் | 10629 |
| 11 பரிசுகள் | C | ரூபா. 20/= | பரிசுகள் | 42635 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 10,163,470.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 17,793,520.00

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு

தேசிய லொத்தர் சபை

2470662, 4607000, Hotline 2433631



25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

உதயன்

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வாரகாலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்தப் போட்டி 06.12.2009 ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத்தாள்களை பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக் கப்பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப் பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 ★ 03 ★ 1920



மறைவு 03 ★ 11 ★ 2009

திருமதி **வள்ளியம்மை செல்லையா**

எங்கள் குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (03.12.2009) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (92717) குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் செல்லையா கனகலிங்கம்

திதி :- பிரதமை 03.12.2009



**தோற்றம்** 11.09.1946

**மறைவு** 13.12.2008

ஓடி உருண்டதப்பா உமைப்பிரிந்து ஓராண்டு!
வாடி வதங்குகின்றோம் உம் பிரிவை எண்ணி நிதம் நிதம்
ஆறுதல் சொல்லும் ஆலமரமாய் இருந்து விட்டு
அவசரமாய் சாய்ந்தது ஏனோ?
எம்முள்ளத்தில் உறைந்திருக்கும் உங்கள் ஆத்மா
சாந்திபெற என்றும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

அரசடி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

(92727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறைக்குப் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## ஆனந்தநடராஜா கஜந்தன்
## கணிதப் பிரிவு பெறுபேறு 3ஏ
## சென்.ஜோன்ஸ் கல்லூரி
## மாவட்டநிலை-29

ஒரு மனிதனின் வாழ்க்கையில் காணப்படுகின்ற முக்கியமான விடயங்களில் மிகவும் முக்கியமானது கல்வி. அந்த வகையில் எனது ஆரம்பக்கல்வியை வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்திலும், 6-7ஆம் ஆண்டுகளை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும், 8-13 வரை சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்றேன்.

தற்போது நான் கணிதத்துறையில் மாவட்ட நிலையில் 29 பெற்று பொறியியல் துறைக்குச் செல்வதையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றேன். எனக்கு இப்பெறுபேறு கிடைத்தது திருப்தியே.

எனது தந்தை 'பிள்ளையார் ஸ்ரோர்ஸ்' முகாமையாளராக உள்ளார். எனது அம்மா வீட்டுப் பணிகளுக்குப் பொறுப்பானவராக உள்ளபோதும் இருவரும் என் கல்விக்காக இறுதிவரை அயராது பாடுபட்டனர். அதேபோல என் சகோதரர்களும் பரீட்சை நேரத்தில் எனக்குத் தோளோடு தோள் நின்று உதவிபுரிந்தனர். அவர்களுக்கு என் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

கொழும்பிலிருக்கும் என் மாமா, மாமி ஆகியோர் பல்வேறுபட்ட வினாத்தாள்களை எனக்கு அனுப்பி இப்பெறுபேற்றினைப் பெற மிகவும் உதவியாக இருந்தனர்.

இவற்றைவிட யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழாம் எமது சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இருந்ததனாலும் எனக்கு இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது. ஏனைய மாணவர்களைப் போல என்னையும் தனிப்பட்ட ரீதியில் கவனித்து கல்வியை ஊட்டிய ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள்.

எனது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி ஆசிரியர்களுக்கும் இந் நேரத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

எனக்கு இறுதிவரை பல்வேறு வழிகளில் உறுதுணையாக இருந்த நண்பன் டெறிக் ஜெசூரனிற்கும் நன்றிகள்.

இவற்றுக்கெல்லாம் அருளாசி வழங்கிய இறைவனுக்கு என் மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றேன்.

எதிர்காலத்தில் நான் பொறியியலாளராக வந்து யாழ்ப்பாணத்தை முன்னேற்ற அயராது பாடுபடுவேன் - என்றார்.



## போல் பிறைற் பெனடிக்ற்
## உயிரியல் பிரிவு
## ஏ 2பி
## யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி

நான் முதலாம் ஆண்டில் இருந்தே சென்ஜோன்ஸ் கல்லூரியிலே கற்று வருகிறேன். ஆரம்பத்திலிருந்தே இப்பாடசாலையில் கல்வி பயின்று வருவதனால் இப்பாடசாலை மீது எனக்கு அளப்பரிய பற்று. என்னோடு படித்த சக மாணவர்களும் நானும் சிறப்புத் தேர்ச்சியடைந்து பல்கலைக்கழகம் ஒன்றாகச் செல்லவேண்டும் என்பதே எனது விருப்பம்.

அதில் ஓரளவு தற்போது நிறைவேறியிருப்பது மகிழ்ச்சியானதே. அந்தவகையில் எனது கல்விக்கு ஆரம்பத்திலிருந்து இன்றுவரைக்கும் எனது குடும்பத்தினரின் ஆதரவும் அன்பும் இருந்து வந்துள்ளது. அதே போல நான் என் உயிரினும் மேலாக மதிக்கும் கல்வியை அள்ளி வழங்கிய என் கல்லூரியையும், அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் நான் என்றென்றும் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தந்தை எச்.சி.எம் நிறுவனத்தின் வட மாகாண இணைப்பாளராக உள்ளார். எனது தாய் ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர். அதேபோல எனது சகோதரரும் எனது கல்விக்குப் பரீட்சை நேரத்தில் மிகவும் உறுதுணையாக இருந்தனர்.

இவற்றுக்கெல்லாம் ஆசியை அன்று தொடக்கம் இன்றுவரை வழங்கிக்கொண்டிருக்கும் இயேசுவின் கிருபைதான் நான் இந்நிலைக்குவரக் காரணம் என்றுதான் கூறவேண்டும்.

எனது பெறுபேற்றுக்கு நிச்சயமாக இறையருள் இருந்துள்ளது. ஆகவே கடவுளுக்கு நன்றிகள்.

ஏனைய சகமாணவர்களும் கல்வியில் உயர்ந்து என்றென்றும் எம்கல்லூரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பெருமை தேடிக்கொடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். எனது வெற்றியை அனைவருடனும் பகிர்வதற்கு வாய்ப்பளித்த எனது நண்பனுக்கும் ''உதயனுக்''கும் நன்றிகள்.



## இராஜபொன்கலன் நிதம்சன்
## வர்த்தகப்பிரிவு பெறுபேறு : 3ஏ,
## மாவட்டநிலை-06,
## சென்.ஜோன்ஸ் கல்லூரி.

ஆரம்பத்தில் யாழ். புனிதபொஸ்கோ பாடசாலையில் கல்வி கற்ற நான், தரம் 06 இல் இருந்து சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கற்று வருகின்றேன்.

எனது தந்தையார் ஒரு வர்த்தகர். அம்மா வீட்டுப் பணிகளுக்குப் பொறுப்பானவர். எனினும் தரம் 06 இல் இருந்தே எனக்கு மிகவும் ஆக்கமும், ஊக்கமும் தந்து நான் இந்நிலையை அடைய முதற் காரணம் என் பெற்றோர்களே.

அதேபோல நான் என் உயிரினும் மேலாக மதிக்கும் எனது பாடசாலை எமக்குக் கல்வியை மட்டும் ஊட்டாமல் ஒழுக்கத்தையும் சேர்த்து ஊட்டியதனால் எத்திசையில் நாம் சென்றாலும் எம் கல்லூரியின் பெருமைகளை ''ஜொனியன்ஸ்''களாகிய நாம் பறைசாற்றிக் கொண்டே இருப்போம்.

வர்த்தகத்துறையில் உயர்பெறுபேறு பெற்று சாதிக்கவேண்டும் என்பது எனது நெடுங்காலக் கனவு. அது இன்று நிறைவேறி இருப்பதையிட்டு நான் மிக மகிழ்வடைகிறேன். உயர்தரப் பரீட்சை எழுதி முடிந்ததும் '3ஏ' வரும் என்று நம்பியிருந்தேன். அதே போல பெறுபேறு கிடைத்தது இரட்டிப்பு மகிழ்ச்சி.

யாழ்ப்பாணத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்விகற்ற மாணவர்கள் அனைவரும் ஏதோ ஒரு துறையில் சாதனைகள் பற்பலவற்றை படைத்துவந்துள்ளார்கள்.

நாமும் எமது நண்பர்களும் தற்போது அதே சாதனைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றோம். இனி வரும் மாணவசமுதாயமும் எம் பாடசாலையின் பெருமையை மேலும் உயர்த்த வேண்டும் என்பதே எனது ஆசை.

நான் அடைந்திருக்கும் இச்சித்தியை எனது யாழ். நண்பர்களுடனும் ஏனையோருடனும் பகிர்ந்து கொள்ள இச்சந்தர்ப்பத்தினை வழங்கிய ''உதயனுக்கு'' எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து ஆசிரியர்களுக்கும், சகமாணவர்களுக்கும் எமது அதிபர், உப அதிபர்களுக்கும் நன்றிகூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(செவ்வி - அனுஷ்மன்)

# விக்கினங்களை விலக்கவல்ல விநாயகருக்கு பெருங்கதை விரதம் இன்று ஆரம்பமாகிறது

சைவசமய வழிபாட்டில் விநாயகப் பெருமானுக்கு முதலிடமளித்து வழிபடும் மரபு பேணப்படுகின்றது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் அனுஷ்ட்டிக்கப்படும் விநாயகர் விரதமும் திருவெம்பாவையும் அடியவர்களுக்குப் பன்மடங்கு பலனைத் தருபவை என்பது புராணங்களின் கூற்றாகும். மனிதருக்குப் புத்துயிர் ஊட்டி வீடு பேறு அளிக்கவல்லவை இவ்விரதங்கள்.

கார்த்திகை விளக்கீட்டின் மறுநாள் ஆரம்பமாவது பிள்ளையார் கதை விரதம். இவ்விரதம் திருவெம்பாவை ஆரம்பநாள் அல்லது அதற்கு முதல்நாள் நிறைவடைகின்றது. இதனைப் பெருங்கதை, விநாயகர் விரதம் என்றும் அழைப்பார்கள். இருபது நாள்கள் விரதம் நோற்று இருபத்தோராவது நாள் உபவாசத்துடன் விநாயகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் செய்து நிறைவு செய்தல் மரபு.

அடியார்கள் விநாயகன் என்றும், விக்கினேஸ்வரன் என்றும், கணபதி என்றும், கணேசன் என்றும், யானைமுகன் என்றும், பிள்ளையார் என்றும் பெருமானை அழைப்பார்கள். விநாயகன் என்பது என்றும் மேலான தலைவன் என்பதையும், விக்கினேஸ்வரன் என்பது இடர் களைவோன் என்பதையும், கணபதி என்பது கணங்களுக்கு அதிபதி, மோட்சத்தை அருளுபவன் என்பதையும் யானைமுகன் என்பது ஓங்காரமூர்த்தி என்பதையும் பிள்ளையார் என்பது குழந்தைக்கடவுள் என்பதையும் உணர்த்துவதாகும்.

விநாயகர் பெருங்கதையில் மக்களாகிய எமக்கு அறநெறி கூறும் பல புராண வரலாறுகள் இடம்பெறுகின்றன. பகீரத மன்னன் கங்காநதியை பூலோகத்திற்கு வரவழைக்க விநாயக விரதமே பலனளித்தது. தமயந்தியைப் பிரிந்த நளமகாராசா மீண்டும் தமயந்தியை அடையவும், சீதாதேவியை இழந்த இராமன் அவளை அடையவும், முப்புரங்களைத் தகனம் செய்யச் சிவனுக்கு ஆதாரமாக இருந்ததும், கருங்கல்லாகிப்போன அகலிகை சாப நிவர்த்தி பெறவும் ஆதாரமாக இருந்தது இவ்விரதமே.



பொய் பேசுதல் மகாபாவம் என்பதையும் பிள்ளையார் கதை உணர்த்துகிறது. மேலும் இவ்விரதத்தை ஆரம்பித்துவிட்டு இடைநடுவில் கைவிடுவதும் அசிரத்தையோடு தொடர்வதும் அல்லல்களைத் தரும்.

விநாயகர் விரதத்தை சிரத்தையுடனும் ஆசார அனுட்டானங்களுடனும் கடைப்பிடித்தால் சகல பேற்றையும் பெறலாம். விநாயகப் பெருமான் தன்னை வழிபடுவோருக்குப் புத்தியையும் சித்தியையும் கொடுப்பார். விளக்கை முன்வைத்து இராவழி போவது போல் விநாயகரை முதல் வணங்கி செயல்களைச் செய்ய வேண்டும். பொல்லா வினைகளை வேரறுக்க வல்லவர் விநாயகர். சித்தியையும் புத்தி யையும் ஞானத்தையும் சகல செல்வங்களையும் நல்கி அருள்புரியும் ஆனைமுகனைத் தினமும் பரவி வணங்குதல் நன்கடனாகும்.

நன்றி: (இந்துசாதனம்)

# நெடுந்தீவு தூண்காலைப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புகளுக்கு மின்விநியோகம்

நல்லூர், டிசெ. 03

நெடுந்தீவு தூண்காலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மீனவர் குடியிருப்புகளுக்கு மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் 'நிக்கொட்' நிறுவனம் ஏற்கனவே 42 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

தற்சமயம் 'நிக்கொட்' அமைப்பு இக் குடியிருப்புகளுக்கு மின்விநியோகத்தை வழங்குவதற்கென நடவடிக்கை எடுத்துள்ளது.

5.3 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இந்த வேலைகள் எதிர் வரும் ஜனவரி மாதத்தில் பூர்த்தியடையும் என 'நிக்கொட்' பிரதித் திட்டப்பணிப்பாளர் ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.

(50-11[illegible]

# உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்துக்கு வேலணையில் 14 கிராமசேவகர் பிரிவுகள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 03

வேலணைப் பிரதேச செயலக பிரிவில் 2010ஆம் ஆண்டுக்கு உலக வங்கி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 14 கிராம உத்தியோகத்தர் பிரிவுக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:

மண்டைதீவு கிழக்கு (ஜே/07), சரவணை கிழக்கு (ஜே/20), சரவணை மேற்கு (ஜே/21), புங்குடுதீவு வடகிழக்கு (ஜே/22), புங்குடுதீவு கிழக்கு (ஜே/23), புங்குடுதீவு தென்கிழக்கு (ஜே/24), புங்குடுதீவு கிழக்கு (ஜே/25), புங்குடுதீவு வடக்கு (ஜே/27), புங்குடுதீவு மத்தி வடக்கு (ஜே/28), புங்குடுதீவு மத்தி கிழக்கு (ஜே/31), புங்குடுதீவு வடமேற்கு (ஜே/32), புங்குடுதீவு மேற்கு (ஜே/33), நயினாதீவு மத்தி (ஜே/35), மண்டைதீவு தெற்கு (ஜே/09)

(50-204-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல் வைத்தியம்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொழும்பில் இருந்து புதிதாக நியமிக்கப்பட்ட தோல் வைத்திய நிபுணர் (Consultant Dermatologist) தினமும் சன்றைஸ் மெடி கிளினிக்கில் பார்வையிடவுள்ளார்.

இடம்: **சன்றைஸ் மெடி கிளினிக்,**
(பஸ்நிலைய வைரவர் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே. 0212226069
(92705)

## MIS ICT ICT ICT ICT

Computer Center #74, சபாபதி வீதி, தலையாழி யாழ்ப்பாணம். TPNO: 021 321 6083, 0776577359

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Grade 10
05.12.2009 at 11.30 am - Tamil Medium
06.12.2009 at 11.30 am - English Medium

ஒரு பிரிவில் 15 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்

புதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளவும்

Grade 11
02.12.2009 at 5.00 pm - Tamil Medium
03.12.2009 at 6.00 am - Tamil Medium
04.12.2009 at 3 pm / 4 pm- English Medium

**For Grade 10 / 11**

மாணவர்களுக்குத் தனித்தனியான வசதியான நேரங்கள்
By R.Kumaran - B.Sc.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் முத்தையா
**கனகலிங்கம்**
(ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

தோற்றம் 09.06.1940
மறைவு 02.11.2009

தங்கத் திருமகனே குடும்பத்தின் குல விளக்கே
தவமிருந்தும் கிடைக்காத தாரகையே - உந்தன்
மனைவியும் பிள்ளைகளும் உறவினரும் தரணியில் தனித்திருக்க
விண்ணுலகம் சென்றதென்ன விளம்புவீர்!

நி.முகவரி: கனகசபை ஒழுங்கை,
கிரிமலை வீதி, காங்கேசன்துறை.
த.முகவரி: 27, மூத்ததம்பி ஒழுங்கை,
மானிப்பாய்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**
(92627)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இவ்வுலகில் 11 . 08 . 1934

மறு உலகில் 13 . 12 . 2008

**திருமதி தர்மலிங்கம் புஸ்பராணி**

அன்பான குடும்பமதில் அனைவரையும் அரவணைத்து
பண்பான பாசத்தால் பாசமொடு வளர்த்தெம்மை
குன்றாத வாழ்வுபெற குலவிளக்காய் இருந்தீரே
கன்றாக நாமிருக்க தாய்ப்பசுவாக இருந்தீரே
கடமைதான் முடிந்ததென்று கண்களை மூடிவிட்ட
காலம்தான் சென்றதம்மா
எம் கண்ணுக்குள் மணியாகி கண்ணீரில் நனைகிறீரே தினம் தினம்
அம்மா உங்கள் பிரிவால் காலத்தால் தீராத
கடும் துயரில் மூழ்கிவிட்டோம்.

கஸ்டிலேன், கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(92707)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

வையத்தின் மைந்தனாக 16 . 08 . 1963

தெய்வத்தின் சொந்தமாக 06 . 12 . 2006

**அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்**
(முன்னை நாள் ஆசிரியர் யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை)

திதி: கார்த்திகை மாத அபரபக்கத் துதீயை
03.12.2009

ஞானத்தின் திருவுருவே நம் வாழ்வின் ஒளி விளக்கே
தேனொக்கும் வாழ்வளித்த தெய்வத் திருவுருவே
கண்ணீரிற் கரைகின்றோம் தெய்வமே கண்ணீரிற்
கரைகின்றோம்

எம் உடலில் உயிர் வாழும் காலம் வரைக்கும் எம்முள்
இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்
எம்முள் இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'ரவி மஹால்',
நாவற்காடு,
வரணி.
(92718)

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பான மனைவி திலகவதி
மற்றும் குடும்பத்தினர்.

## மில் சேவைகள்

தேங்காய் எண்ணை, ஈரஅரிசிமா, அரிசிமா, கோப்பி, உழுந்து உடைத்தல், கடலைமா ஆக்குதல் போன்ற சேவைகளை உடனுக்குடன் பெறலாம்.
தொடர்பு: இல. 26, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்
(கொம்பியூட்டர் சென்ரர் முன்பாக)
(92665)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

அச்சுவேலி சிற்றூர்திச் சங்கத்தைச் சார்ந்த சிற்றூர்தியில் கைச்சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு: **சிற்றூர்திச் சேவைச் சங்கம்,**
அச்சுவேலி. (92731)

## தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு

நல்லின தென்னம்பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன்கிடைக்கும் தென்னம்பிள்ளைகளும் உண்டு.
தொடர்பு: 0776592044 (92732)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணனி இயக்குநர், லொத்தர் டிக்கற் விற்பனையாளர் உடன் தேவை.
தொடர்புக்கு:
**ஸ்ரீதுர்க்கா தேவி பல்பொருள் வாணிபம்**
K.K.S. வீதி, சுன்னாகம் (HNB சுன்னாகம் முன்பாக)
தொ.பே.: 021 2240172 (92729)

## விற்பனைக்குண்டு

தரமான Sharp Multi media Projector (350w) நிழற்படக்கருவி விற்பனைக்குண்டு. (Model X.R - 108)
தொடர்பு: 0213216365 (92716)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி றோட்டில் மருத்துவ பீடத்தில் இருந்து 150m தூரத்தில் உள்ள இடது பக்க ஒழுங்கையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
சனி, ஞாயிறு நாள்களில் தொடர்பு கொள்ளவும்.
077 9496928, 077 6627124 (92726)

## உதவிப் பணக் கொடுப்பனவுகளை உடன் பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம், டிசெ.3

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் இந்த மாதத்துக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோய் உதவிக் கொடுப்பனவுகள் என்பன நேற்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை வழங்கப்படவுள்ளன.

வருடாந்த கணக்கை நிறைவு செய்யும் பொருட்டு மேற்குறிப்பிட்ட திகதியில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (50-204)

## நிறுவனத் தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ் வரன் அறிவித்துள்ளார். (50-204)

## ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.3

இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றிஇளைப்பாறிய ஊழியரின் பணிக்கொடை நிலுவைக் கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளதால் நேரடியாகச் சமுகமளித்துக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு இ.போ.ச.ஊழியர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஊழியர்களின் விவரம் வருமாறு:
என்.லோகநாதன், என்.தங்கராசா, எஸ். சுந்தரம், எஸ்.ஞானசேகரம், ஐ.பாலசிங்கம், பி.கந்தசாமி, ரி.செல்வநாயகம், எஸ்.சிவஞானராசா, எஸ்.வேலாயுதம், [illegible] (50-201)

## கூட்டுறவு பனம் தொழில் வல்லுநர் மாநாடு - 11.12.2009

வடமாகாணத்தில் செயற்பட்டு வரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களால் 11.12.2009ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள பனம் தொழில் வல்லுநர் மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அரியாலை பனை தென்னை வள அ.கூ.சங்க பணியாளர் நல நோன்புக் கூட்டுறவுச் சங்கம்.
(92721)

## மரண அறிவித்தல்

### திருமதி தாட்சாயணி நாகராசா



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாட்சாயணி நாகராசா 01.12.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
(92722)

## ஆறாம் மாத நினைவுகள்



அப்பாவைத் தேடி....
அமரர் தம்பிஐயா
**பாலகுமாரநாதன்**
(கண்மணி)

மண்ணில் 21.05.1945
விண்ணில் 03.06.2009

கண்ணின் மணியே கண்ணின் மணியே எமை ஏன் மறந்தாய்
இதயத்துடிப்பே இதயத்துடிப்பே கணம் ஏன் நின்றாய்
உயிரின் இணைப்பே உயிரின் இணைப்பே எமை ஏன் பிரித்தாய்
கண்ணீர் சொரிந்தோம் கண்ணீர் சொரிந்தோம் துயர் ஓடிடும் ஆறாய்
இணைவோம் வாழ்வில் இணைவோம் வாழ்வில் நாமவர் மீண்டுனும் ஒன்றாய்...

தங்களைக் காணத்துடிக்கும்
மனைவி - திருமதி கி.கா.பாலகுமாரநாதன்,
மக்கள் - லோகினி, கஜனி,
மருமகன் - சத்தியராஜ்,
தம்பி - ந.இரவீந்திரநாதன் (அவிசாவளை)

52, பிரதான வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே.:
021 222 2753 (சி/562566)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 ★ 03 ★ 1941

மறைவு 17 ★ 11 ★ 2005

**அமரர் கந்தையா சந்திரமோகனதாஸ்**
(மீன்பிடிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)
திதி: அபரபக்க துதியை

அப்பா நான்காண்டுகள்
ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.04, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (92706)

சிவமயம்

## தசாக, கிரகயஞ்ஞ அழைப்பு




நிகழும் சுவஸ்திஸ்ரீ விரோதி வருஷம் கார்த்திகை மாதம் ஒன்பதாம் நாள் (25.11.2009) புதன்கிழமை பூர்வபக்கநவமித் திதியில் சிவபதமடைந்த தெல்லிப்பழை விழிசிட்டி ஞானவைரவர் கோயிலைச் சேர்ந்த திருமதி சிவபாதவிருதய ஐயர் சரஸ்வதி அம்மா அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறஉள்ளன.

04.12.2009 வெள்ளிக்கிழமை - தசாகம் -10 மணி
05.12.2009 சனிக்கிழமை - ஏகோர்திட்டம் மாசியம்
06.12.2009 ஞாயிற்றுக்கிழமை - சபிண்டீகரணம்
07.12.2009 திங்கட்கிழமை - கிரகயஞ்ஞம்

குறித்த தினங்களில் நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும்அன்புடன் அழைக்கின்றோம்.

வற்றாக்கை அம்மன் கோயில்,
கந்தரோடை,சுன்னாகம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(92691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய - இலங்கை டெஸ்ட் ஆட்டம்;

# டில்ஷான் சதமடித்து அணியை வீழ்ச்சியில் இருந்து மீட்டார்

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாள் ஆட்ட நேர முடிவின் போது இலங்கை அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 366 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடந்து வருகிறது.

இதில் முதலாவது போட்டி சமனிலையில் முடிய, இரண்டாவது போட்டியை இந்தியா வெற்றிகொண்டு 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் நேற்று 3ஆவது போட்டி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது.

அதன்படி ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய பரண விதாரண-டில்ஷான் ஜோடி மிகவும் நிதானமாக நின்று ஆடி இலங்கை அணிக்கு சிறப்பான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தது.

பரண விதாரண 53 ஓட்டங்களையும் டில்ஷான் 103 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

அணித்தலைவர் சங்கக்காரா (18), மஹேல ஜெயவர்த்தன (29), சமரவீர (1), பிரசன்ன ஜெயவர்த்தன (43), குலசேகர (12), ஹேரத் (1) ஆகியோர் தம்மாலான பங்களிப்பைச் செய்து ஆட்டமிழந்தனர்.

மத்யூஸ் 82 ஓட்டங்களுடனும் முரளிதரன் எந்தவித ஓட்டங்களையும் பெறாமலும் இறுதிவரை களத்தில் இருந்தனர்.

இலங்கை அணி நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது 89 ஓவர்களை எதிர்கொண்டு 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 366 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் ஒஜா 2 விக்கெட்டுகளையும், சஹீர்கான், சிறிசாந்த் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

## 36 ஆண்டுகளுக்குப் பிறகு பிராபோர்ன் மைதானத்தில் டெஸ்ட்

இந்தியாவின் மும்பையிலுள்ள பிராபோர்ன் மைதானத்தில் 36 ஆண்டுகளுக்குப்பிறகு டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது.

மும்பையில் மூன்று சர்வதேச கிரிக்கெட் மைதானங்கள் உள்ளன. இதில் வழக்கமாக வான்கடே மைதானத்தில் டெஸ்ட் போட்டிகள் நடைபெறும். ஆனால், 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் இறுதியாட்டம் நடக்க இருப்பதால் வான்கடே மைானத்தைப் புதுப்பிக்கும் பணிகள் தற்போது மும்முரமாக நடந்து வருகிறது.

இதையடுத்து இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான கடைசி டெஸ்ட் போட்டி அங்குள்ள பிராபோர்ன் மைதானத்தில் நடத்துவதென முடிவு செய்யப் பட்டுள்ளது. பிராபோர்ன் மைதானம் இந்தியாவில் உள்ள பழமை வாய்ந்த மைதானங்களில் ஒன்றாகும்.

இங்கு 1948ஆம் ஆண்டு முதல் இதுவரை 17 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன. இதில் இந்திய அணி 4இல் வெற்றியும், 2இல் தோல்வியும், 11இல் சமனிலையும் கண்டுள்ளது.

1974ஆம் ஆண்டு வான்கடே அமைக்கப்பிட்ட பிறகு பிராபோர்னில் டெஸ்ட் போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் 36 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக இங்கு டெஸ்ட் போட்டி நடைபெறவிருப்பது ஆவலை ஏற்படுத்தியுள்ளது. பிராபோர்னில் கடைசியாக 1973ஆம் ஆண்டு நடந்த இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மொத்தம் 20 ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்திருக்கக்கூடிய வசதி கொண்ட இம்மைதானத்தில் இலங்கை அணி இதற்கு முன்பு ஒருபோதும் ஆடியதில்லை.

## மே.இ.தீவுகள் அணியை தடைசெய்ய வேண்டும் -கிம்ஹிக்ஸ்

''மேற்கிந்தியத் தீவுகள் அணி, டெஸ்டிற்குரிய தகுதிகளைப் பெறும்வரை தடை செய்து ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாட அனுமதிக்கவேண்டும்'' - ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் கிம் ஹிக்ஸ் கூறியுள்ளார்.

பிரிஸ்பேனில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி படுதோல்வி அடைந்தது. 3ஆவது நாளிலேயே இந்த ஆட் டம் முடிவுக்கு வந்தது. இதனால், மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் கிறிஸ் கெய்ல் தனது பொறுப்பிலிருந்து விலகவேண்டும் என்ற கண்டனக் குரல்கள் வந்தன.

இதுகுறித்து கிம் ஹிக்ஸ் கூறியிருப்பவை வருமாறு:-

''டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குத் தகுதி இல்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் விருப்பம் இல்லாத ஒருவரை (கெய்ல்) அணித்தலைவராகக் கொண்டுள்ள அந்த அணியை டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து தடை செய்தாலும் தவறில்லை.

''மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது நல்லதுதான். ஆனால், அது டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு நல்லதல்ல. மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் போன்ற அணிகள் டெஸ்ட் கிரிக்கெட்டுக்குரிய தரத்திற்கு உயரும் வரை ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே விளையாட வேண்டும்.

''எனவே ஆஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகளுக்கியில் தற்போது நடந்து வரும் தொடர் 'நகைச்சுவைத் தொடர். கடந்த மே மாதத்திற்குப் பின்னர் பெரும்பாலான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் எவரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடவில்லை. - என்றார்.

## விளையாட்டு அரங்குகளில்

### காமன்வெல்த் போட்டிக்கு ரூ.26,387 கோடி!

அடுத்த ஆண்டு இந்தியாவில் முதல் முதலாக நடைபெறவுள்ள கொமன்வெல்த் விளையாட்டு போட்டிகளுக்கான செலவுத் தொகை சுமார் ரூ. 26ஆயிரத்து 387 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானுக்கு மேலும் 30 ஆயிரம் துருப்புகள்; பாகிஸ்தானின் பாதுகாப்பும் பலப்படுத்தப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்ரன், டிசெ.3

''ஆப்கானிஸ்தானுக்கு மேலும் 30 ஆயிரம் சிப்பாய்கள் அனுப்பப்படுவார்கள். அதே நேரத்தில் அடுத்த 18 மாதங்களில் ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படைகளை மீளப் பெறும் பணியும் ஆரம்பமாகிவிடும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, செவ்வாய்க்கிழமை இரவு, அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் தாம் பேசுகையில் குறிப்பிட்டார்.

எட்டு வருட கால ஆப்கானிஸ்தான் போரின் அடுத்த கட்டம் தொடர்பான புதிய உத்திகள் தொடர்பாக அவர் பேசுகையில், ''ஆப்கானிஸ்தான் எல்லைப்புறத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் தீவிரவாத புற்று ஆழமாக ஊடுருவி, பு[illegible]யோடிப் போயுள்ளது. இதை வேரோடு அ[illegible]க[illegible]ண்டும். இதற்காக பாகிஸ்தானுக்கு அ[illegible]கா அனைத்து வழிகளிலும் உதவும்'' என்றார்.

''தீவிரவாதக் குழுக்களை அழிக்கும் பாகிஸ்தானின் பாதுகாப்புப் பலத்தை அதிகரிக்க அமெரிக்கா உதவும். பாகிஸ்தானும், அதன் எல்லைப் பகுதிகளும், ஆப்கானிஸ்தானும் தீவிரவாதிகளின் சொர்க்கமாகத் திகழ்கின்றன. இனியும் இதை அனுமதிக்க முடியாது. தலிபான்களின் நோக்கம் என்னவென்பது உலக மக்களுக்குத் தற்போது தெளிவாகிவிட்டது'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

''எல்லைப் பகுதியிலிருந்து தீவிரவாததை விரட்ட பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து செயற்படவேண்டும். இது மிக அவசியமாகும். ஆப்கானிஸ்தானுக்குக் கூடுதலாக 30 ஆயிரம் படைச்சிப்பாய்கள் அனுப்பிவைக்கப்படுவர். ஸ்வாட் பிராந்தியத்திலும், தெற்கு வசீரிஸ்தானிலும் தலிபான்களுக்கு எதிராகப் பாகிஸ்தான் படையினர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பராட்டுக்குரியவை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்கும் தற்போது உள்ள எதிரி ஒரே எதிரிதான். அந்த எதிரியை வேரறுக்க இரு நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும். பாகிஸ்தானின் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் அமெரிக்கா உறுதியான ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும். இதை பாகிஸ்தான் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்'' என்றும் பராக் ஒபாமா கூறினார்.

''இந்தக் கூடுதல் படைகளை அனுப்புவதால் அமெரிக்காவுக்கு முதல் ஆண்டில் மட்டும் 3 ஆயிரம் கோடி டொலர் கூடுதல் செலவாகும். ஏற்கனவே, ஆப்கானிஸ்தானில் 68 ஆயிரம் அமெரிக்கப் படைச் சிப்பாய்கள் இருக்கிறார்கள். இந்நிலையில் கூடுதலாக 30 ஆயிரம் சிப்பாய்கள் அங்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்'' என்றும் அவர் விளக்கினார்.

### பாக். கடற்படைத் தலைமையக நுழைவாயிலில் குண்டுத்தாக்குதல்

பாகிஸ்தான் கடற்படைத் தலைமையக நுழைவாயிலில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்துள்ளது.

பாகிஸ்தான் கடற்படையின் தலைமையகம் இஸ்லாமாபாத்தில் உள்ளது. நேற்று புதன்கிழமை இந்த தலைமையகத்தின் நுழைவாயிலில் தற்கொலைப் படைத் தீவிரவாதி வெடிகுண்டுகளுடன் வந்து மோதினார். இதில் 3 பேர் காயமடைந்தனர்.

தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியை பாதுகாப்புப் படையினர் மூடிவிட்டனர்.

## உலக அரங்கில்

# பின்லேடன் குறித்து அமெரிக்காவோ, பிரிட்டனோ உரிய தகவல் அளித்தால் உடனடி நடவடிக்கை

## பாகிஸ்தான் பிரதமர் ரஸா கிலானி தெரிவிப்பு

இஸ்லாமாபாத், டிச. 03

அல்-குவைதா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் குறித்து அமெரிக்காவும், பிரிட்டனும் உரிய புலனாய்வுத் தகவலை அளித்தால் நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்கமாட் டோம். இதுவிடயத்தில் பின் வாங்கவும் மாட்டோம் என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள கிலானி இஸ்லாமாபாத் விமான நிலையத்திலிருந்து தாம் ஜேர்மனிக்குப் புறப்படுவதற்கு முன்னர் பத்திரிகையாளர்களுக்கு இப் பேட்டியை அளித்துள்ளார்.

''ஒசாமா பின்லேடன் குறித்து இதுவரையில் எவ்விதக் தகவலையும் அமெரிக்காவோ, பிரிட்டனோ அளிக்கவில்லை. ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் தங்கியிக்கிறார் எனக் கூறப்படுகிறது. இது தவறாகும்'' என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

''எனக்கும், ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரிக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இதுவும் தவறாகும்'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''பாகிஸ்தானில் ஜனநாயகம் மிகவும் அவசியமாகும். இது அனுமதிக்கப்படா விட்டால் நாட்டின் வளர்ச்சி பாதிப்படையும். ஜனநாயகம் தழைத்தோங்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது'' என்றும் கிலானி தெரிவித்துள்ளார்.

''பத்திரிகைச் சுதந்திரம், நீதித்துறை, இராணுவம் ஆகியவை நாட்டின் மிகவும் வலுவான தூண்களாகும். நாடு வளர்ச்சியடைய வேண்டுமெனில் இவை அனைத்தும் சுதந்திரமாக செயற்படவேண்டும். அப்போது தான் நாடு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்ட முடியும், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்தும் மீள முடியும்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

''சமீபத்தில் பலுசிஸ்தான் குறித்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. அரசின் முன்னுள்ள முக்கியமான பிரச்சினைகளில் பலுசிஸ்தான் பிரச்சினை அதி முக்கியமானது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரை அங்கு பொருளாதார வளர்ச்சிக்கு சாத்தியமில்லை'' என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

''இப்பிரச்சினை மிகவும் முக்கியமானது. இதன் முழு தன்மையையும் அரசு உணர்ந்துள்ளது. இதை விரைவில் தீர்த்துவைக்க அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது'' என்றும் கிலானி தெரிவித்துள்ளார்.

''பலுசிஸ்தானில் நிர்வாக ரீதியிலும், பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும். இதனை அரசு அறிவித்துள்ளது. ஊடுருவல்களும் தடுக்கப்படும்'' என்றும் அவர் மேலும் விவரித்துள்ளார்.

ஜேர்மனி அதிபர், வெளியுறவு அமைச்சர் ஆகியோரையும் கிலானி சந்தித்துப் பேசவுள்ளார். இரு நாடுகளிடையே வர்த்தக உறவு ஆரம்பமாகி 50 ஆண்டுகள் நிறைவடைவதை யொட்டி பிராங்கபர்ட்டில் கிலானி தலைமை உரை நிகழ்த்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வறிய நாடுகளுக்கு உதவ ஐ.நா. நிதியுதவி கோருகிறது

நியூயோர்க், டிச. 03

25 நாடுகளில் பிரச்சினைகளோடு வாழும் 4 கோடியே 80 இலட்சம் மக்களுக்கு உதவுவதற்காக ஐ.நா. உலக நாடுகளிடம் ரூபா 21 ஆயிரத்து 300 கோடி நிதியளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நிதியால் 25 நாடுகளில் பிரச்சினைகளோடு வாழும் 4 கோடியே 80 இலட்சம் மக்களுக்கு 2010 ஆம் ஆண்டில் உதவி புரிய இயலும் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

''25 நாடுகளில் வாழும் மக்களின் நல்வாழ்விற்காக ரூபா 21 ஆயிரத்து 300 கோடியே நிதியளிக்குமாறு அந்நாடுகளின் மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.


''இந்த அவசர நிதியுதவியின் பெரும் பகுதி நீண்டகாலமாக பெரும் பிரச்சினைக்கள் நிலவும் ஆப்கானிஸ்தான், கொங்கோ, சூடான், கென்யா, பலஸ்தீனம், சோமாலியா, உகண்டா, சிம்பாப்வே ஆகியவை உட்பட 12 நாடுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

''அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு சுயமரியாதையுடன் கௌரவமாக வாழ அனைவருக்கும் உரிமை உண்டு. வளர்ந்த நாடுகளில் உள்ள மக்கள் வசதியாக வாழும் நிலையில் உள்ளார்கள். அடிப்படைத் தேவைகள் கூட கிடைக்கப்பெறாத மக்களுக்கும் அவை கிடைக்க வழிசெய்யப் படவேண்டும். இந்த நோக்கத்திற்காகத்தான் உலக நாடுகளில் நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

''உலக பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் 2010 ஆம் ஆண்டிற்கான நிதி உதவியானது குறையும் என்பது தவிர்க்க முடியாதது. இருப்பினும், உலக நாடு களும் மற்றும் த[illegible] தங்களால் முடிந்தளவு நிதி [illegible]'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் சீன விமானத்தளங்கள்; இந்தியப் பாதுகாப்புக்கு பேராபத்து



புதுடில்லி, டிச. 03

இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே புதிதாக 27 விமானத் தளங்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது. இதனால், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அருணாச்சலப் பிரதேசம் தமக்குச் சொந்தமான பகுதி என்று சீனா அடாவடி செய்து வருகிறது. காஷ்மீரில் லடாக் பகுதியில் சில மாதங்களுக்கு முன் சீன இராணுவத்தினர் ஊடுருவினர் எனச் செய்திகள் வெளியானது. லடாக் பகுதியில் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வீதி அமைக்கும் பணி சீன இராணுவத்தின் எதிர்ப்பால் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே புதிதாக 27 விமானத் தளங்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது. இதனால், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இதுகுறித்து கவலைப்படத் தேவையில்லை என்று இராணுவ இணை அமைச்சர் பல்[illegible]ம் ராஜு தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியில் -

சீனா அமைத்து வரும் விமானத் தளங்கள் குறித்து நாம் அநாவசியமாக கவலைப்படத் தேவையில்லை.

ஒரு பிராந்திய சக்தியாக தங்களது கட்டமைப்பு வசதிகளை அவர்கள் பலப்படுத்தலாம். நம்மை நாம் பலப்படுத்திக் கொள்ள என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம். மற்ற நாடுகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்று நாம் கவலைப்பட வேண்டியதில்லை - என்றார்.

# கடலில் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க கடலோரத்தில் நேற்றுமுதல் தீவிர ரோந்து

## இந்த ஆண்டு 58 பேர் மூழ்கிப் பலி

சென்னை, டிச. 03

சென்னைக் கடலோர பகுதியில் நேற்றுமுதல் பொலிஸாரின் ரோந்துப்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இதுவரை கடலில் மூழ்கி 58 பேர் பரிதாபமாக இறந்துள்ளதால், சாவை தடுக்க பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை கடலில் மூழ்கி உயிர்ப்பலியானவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு இதுவரை 58 பேர் சென்னை கடலில் மூழ்கி இறந்துள்ளனர். இதில் மெரினா கடலில் மூழ்கி 39 பேர் இறந்துள்ளனர். இவர்களில் அதிகளவில் ஆண்கள் 28 பேரும், பெண் ஒருவரும், சிறுவர்கள் 4 பேரும் உயிரை விட்டுள்ளனர்.

திருவான்மிரில் 4 பேரும், நீலாங்கரையில் 7 பேரும், பட்டினப்பாக்கத்தில் 3 பேரும், சாஸ்திரிநகரில் 4 பேரும் உயிரை மாய்த்துள்ளனர். கடந்த ஆண்டு 54 பேர் இறந்துள்ளனர் என புள்ளி விவரங்கள் சொல்கின்றன. கடந்த ஆண்டோடு ஒப்பிடும் போது இந்த ஆண்டு முடிவடைய இன்னும் ஒரு மாதம் உள்ள நிலையில் 4 பேர் அதிகமாக இறந்துள்ளனர்.

கடலில் மூழ்கி இறப்பதைத் தடுக்க முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும்படி பொலிஸ் கமிஷனர் ராஜேந்திரன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார். இதனால் சென்னை கடற்கரை பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க பொலிஸார் முடிவு செய்தனர்.

# நாடாளுமன்றத்துக்கு வருகை தராத காங். எம்.பிக்கள் மீது நடவடிக்கை

## பட்டியல் சேகரிக்கிறார் சோனியா



டில்லி, டிச. 03

நாடாளுமன்றில் கேள்வி நேரத்தின்போது, பங்கேற்காத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் மீது நடவடிக்கை எடுக்க சோனியா முடிவு செய்துள்ளார். அதற்காக, அந்த எம்.பி.க்கள் பற்றிய முழுவிவரங்களை அவர் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்களன்று கேள்வி நேரம் நடைபெற்றபோது, கேள்விகளைக் கேட்டிருந்த 34 எம்.பிக்களில் 2 பேர் மட்டுமே வந்திருந்தனர். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இருந்தும் கூட, எம்.பிக்கள் இல்லாததால் சுமார் 20 கேள்விகளை எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால், நாடாளுமன்றம் தொடங்கிய அரை மணி நேரத்துக்குள் ஒத்தி வைக்கப்பட்டது. இது மிகவும் மோசமான நிகழ்வு.

இதுகுறித்து சபாநாயகர் மீராகுமார் கூறும்போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் பங்கேற்காமல் இருப்பது மிகவும் துரதிஷ்டவசமானது. கடந்த 20 ஆண்டுகளில் இதுபோன்று நடந்தது இல்லை - என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

எம்.பி.க்கள் வராததால் மன்று ஒத்தி வைக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. முக்கிய கட்சிகள் அனைத்தும் தங்களுடைய எம்.பிக்களிடம் விளக்கம் கேட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் கடந்த திங்களன்று இல்லாத எம்.பி.க்களில் பெரும்பாலானவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள். எனவே, இந்தப் பிரச்சினையை சோனியா தீவிரமாக எடுத்துள்ளார்.

# மரண அறிவித்தல்



## இராசையா அம்பிகாபதி
### (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா அம்பிகாபதி 29.11.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சுந்தரம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சொர்ணகாந்தியின் (கமலா) பாசமிகு கணவரும், சத்தியவாணி, நித்தியவாணி,வாமணன் (லண்டன்), வாமினி ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலசிறிதரன் (சிறி), திருவருட்செல்வன், சுகந்தி (லண்டன்), உதயகுமார் ஆகியோரின் மாமனாரும், துஷாரா, பிரஷாந், பிருஷா, கிரிஷாந், சானுகன், யதுசிகா, கஜீபன், கஜலக்சன், கெசானி (லண்டன்), சிதோஸ் (லண்டன்), நிருசிகா, லக்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, நீலாம்பிகை, வல்லிபுரம் மற்றும் சபாரெத்தினம், சத்தியபாமா, ரெத்தினவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செகசோதி, கனகரெத்தினம், சிவசோதி, காலஞ்சென்ற யோகம்மா மற்றும் இராசரெத்தினம், பகவத்சிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை பி.ப 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் வட்டாரம்,*
*வேலணை மேற்கு, வேலணை.*
(92744)
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ரஜினியின் மகள் தயாரிக்கும் படத்தை வெளியிடத் தடை!



சென்னை, டிச. 03

நடிகர் ரஜினிகாந்தின் மகள் சௌந்தர்யா தயாரிக்கும் 'கோவா' திரைப்படத்தை வெளியிடுவதற்கு உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ரஜினிகாந்தின் மகள் சௌந்தர்யா 'ஆக்கர் ஸ்டுடியோஸ்' என்ற படத் தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

வெங்கட் பிரபுவின் இயக்கத்தில் 'கோவா' என்ற படத்தை சௌந்தர்யா தயாரித்து வருகிறார். இந்தத் திரைப்படம் தொடர்பாக வருண் மணியன் என்பவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நீதிபதி ஜி.ராஜசூர்யா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதி, டிசம்பர் 11 ஆம் திகதிவரை 'கோவா' படத்தை வெளியிடத் தடை விதித்தார். இதுதொடர்பாக, பதிலளிக்குமாறு சௌந்தர்யாவுக்கு நோட்டீஸ் அனுப்பவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# மரண அறிவித்தல்கள்



## முருகன் நடராஜா
### (கன்ரீன் நடா,யாழ் இந்துக்கல்லூரி)

பிறவுண் வீதி,வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் நடராஜா நேற்று (02.12.2009) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஞானசுந்தரியின் அன்புக் கணவரும், ஜெயராஜ் (சாரதி, மீள் எழுச்சித்திட்டம், யாழ்.செயலகம்), சிவகாமசுந்தரி (ஆசிரியை - யாழ் இந்து ஆரம்ப பாடசாலை),சிவராஜ் (ஆசிரியர், - யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெ.யோகேஸ்வரி, சி.சாமினி (ஆசிரியை, ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்), சேகர், லோசினி, ரதி, சித்திரா, நேரு (T.V. திருத்துநர்), சர்வானந்த் (லண்டன்), அருள்ஞானானந்த் (Telecom) ஆகியோரின் மாமனாரும், சங்கீர்த்தனன், ஜெயந்திகா, சதுர்சனன், வினோதனன், அபிஷாலியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/4, அராலி வீதி,*
*ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.*
தகவல்: மகன்-ஜெயராஜ், மகன்-சிவராஜ்.



## கதிரவேலு பராசக்தி

கோயிலாமனை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பராசக்தி 29.11.2009 (ஞாயிற்றுக் கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முதலிக்குட்டி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், யோகம்மாவின் சகோதரியும், கதிரவேலுவின் அன்பு மனைவியும், மகேந்திரன், தெய்வேந்திரம் (லண்டன்), இராசதுரை, வல்லிபுரநாதன் (சுவிஸ்), கந்தசாமி (சுவிஸ்), குமாரவேலு (லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), அமரர் பரமானந்தன், அமிர்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன் , வசந்தா (சுவீடன்), சிவதாசன் (சுவிஸ்), (அமரர்) நளினி ஆகியோரின் பெரியதாயும், மீனாட்சி, சுந்தரகுமாரி, அமரர் ஞானமணி, லோகேஸ்வரி, சிவலோகநாயகி,மீனவேணி, ராஜேஸ்வரி, அமிர்தலிங்கம் (திருநெல்வேலி, குமார்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் தினேஷ், பிரதீபா, கருணா, கோடீஸ்வரன், சரிதா, பிரசாந் திருலோகன், சுதாகரன், ரஜனி, சர்மினி, கௌதமி, ஜானுசா,கௌசல்யா, நிலானி, நிலக்ஷன், நிசானி, கிருத்திகன், குணாளன், விஷாலினி, கிஷாந், யதுசனா, தர்மினா, திலக்ஷனா, கோபிகா, ஜனுவிந்த், வசந், சுரேகா, மிலேனியா, பூமிகா, மதுலிகா ஆகியோரின் பேர்த்தியும், தியானா, லக்ஷியா ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனகன் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயிலாமனை,*
*கொடிகாமம்.*
(சி/562881)
தகவல் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



### லயஞானமணி, ஞான ஏந்தல்
## செல்லப்பா கிருஷ்ணமூர்த்தி

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கிருஷ்ணமூர்த்தி நேற்று (02-12-2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல தவில்வித்துவான் க.நித்தியானந்தத்தின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தசாமி கோயிலடி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
தகவல்: க. நித்தியானந்தன் [illegible] குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜரட்ணத்தின் டி.எப்.சீ.சீ பங்குகள் நேற்று பங்குச் சந்தையில் விற்பனை

கொழும்பு,டிசெ.3

அமெரிக்காவின் பிரபல தமிழ் வர்த்தகர் ராஜ் ராஜரட்ணத்தின் டி.எப்.சீ.சீ. பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தப் பங்குப் பரிவர்த்தனையினால் பங்குச் சந்தை மொத்தப் புரள்வு வளர்ச்சியைப் பதிவு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பிரபல வர்த்தகர் ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க நீதிமன்றம் விதித்துள்ள ரொக்கப் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ராஜ் ராஜரட்ணத்தின் கெலுன் நிறுவன சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன் ஒரு கட்டமாக இலங்கையில் ராஜ் ராஜரட்ணத்திற்கு சொந்தமான டி.எப்.சீ.சீ.வங்கிப் பங்குகள் கொழும்புப் பங்குச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

டி.எப்.சீ.சீ.வங்கியின் ஐந்தாவது முக்கிய பங்குதாரராக கருதப்படும் ராஜ் ராஜரட்ணம் அவ்வங்கியிலுள்ள தனது சகல பங்குகளையும் நேற்றையதினம் விற்பனை செய்துள்ளார்.

பங்குத் தரகு நிறுவனங்களின் மூலம் இந்த கொடுக்கல் வாங்கல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பங்கு ஒன்று 135ரூபா என்ற விகிதத்தில் சுமார் 12.2மில்லியன் பங்குகள் நேற்றையதினம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



'தாயகம்' சிறுவர் இல்ல நிறுவுநரும் பிரபல வர்த்தகருமான வீ.ஸ்ரீதரன் தம்பதியினருக்கு யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடுசெய்த சேவையை பாராட்டும் வைபவம் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வீ.ஸ்ரீதரனுக்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடைபோர்த்தி கௌரவிப்பதையும், 'தர்மவாரிதி' விருது பெற்ற தம்பதியினருடன் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நிற்பதையும் படங்களில் காணலாம். (50)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தரம் 6 தொடக்கம் தரம் 9வரையான வகுப்புகளில் தமிழ் மொழி மூலம் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'இருமொழிக் கற்கை' செயற்றிட்டம் மூலம் 'ஆங்கிலமொழி தொடர்பாடற்றிறன்' 'கலைச் சொல்லகராதி' போன்ற பகுதிகளூடாக வாண்மைவிருத்திச் செயலமர்வு நான்கு நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5ஆம்,6ஆம் திகதிகளில் யாழ்.கல்விவலய ஆசிரிய நிலையத்தில் இந்தச் செயலமர்வு இடம்பெறும்.

பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது பெயர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் யாழ்.கல்விவலய ஆசிரிய நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறும், கொடுப் பனவு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

## சாவகச்சேரியில்'கோப் சிற்றி' கள் திறந்து வைக்கப்பட்டன

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கங்களின் இரு மினி கோப் சிற்றிகள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

கைதடி - நுணாவில் (கிளை 5) சப்பச்சிமாவடி ( கிளை இல. 22) ஆகியவற்றின் மினி கோப் சிற்றிகளே திறந்து வைக்கப்பட்டன.

ஈ.பி.டிபியின் யாழ். மாவட்ட பிரதி இணைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) யாழ்.மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டு கோப் சிற்றிகளைத் திறந்து வைத்தனர். (207)

## குடாநாட்டில் மீன் விலையில் வீழ்ச்சி

வண்ணை,டிசெ.3

யாழ்.குடாநாட்டில் கடலுணவு வகைகளின் விலைகளில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

ஒரு சில தினங்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால் கடல் வாழ் உயிரினங்கள் கூட்டம் கூட்டமாக ஆழ் கடலில் இருந்து கரையை நோக்கி படை யெடுத்து வருகின்றன.

மீனவர்களுக்கு அளவுக்கு அதிக மான மீன் வகைகள் பிடிபட்டு சந்தைக்கு வந்து சேர்வதால் விலைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்படுகிறது.

கடந்த ஓரிரு தினங்கள் மீன்களின் விலை கிலோ ஒன்று 40, 50 ரூபா வாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-160)

## இளைஞர் மன்றத்தின் விருது நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் இளைஞர் விருது விழா நாளை வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத் தூது கலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் அ.சக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் பாஸ்வர சேனாங்க குணரத்னவும், கௌரவிருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்வர். (7)

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.3

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான கார்த்திகை மாதத்துக்குரிய 'ஞானச்சுடர்' வெளி வந்துள்ளது.

சமயக் கட்டுரைகள், கவிதைகள், சைவ ஆலய வரலாறு, சமயப்பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் எனப்பல்வேறு அம்சங்களைத் தாங்கி 'ஞானச்சுடர்' வெளி வந்துள்ளது. (ஓ-9)

## மானிப்பாய் இலங்கை வங்கியின் கிளையில் சனியன்றும் சேவைகள்

மானிப்பாய் இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் சனிக்கிழமைகளிலும் வங்கிச் சேவைகள் நடைபெறுவதற்கான சகல பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் முகாமையாளர் க.இலட்சுமணசர்மா தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் பிரதம விருந் தினராக கலந்து கொண்டு குத்து விளக் கேற்றி சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்தில் இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் வி.எஸ். சிவநாதன், கணக்காய்வாளர் தர்மதாச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் சங்கானை இலங்கை வங்கிக் கிளையிலும் கணனி வலைப்பின்னல் சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ஓ-100)

## பயிற்சி நிலைய திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள சென்.ஜோன் அம்புலன்ஸின் பயிற்சி நிலைய கட்டடத்திறப்பு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும்.

இதேவேளை, கொழும்பில் இருந்து யாழ்.வரும் ஜொகனிற்றர் நிறுவன சர்வதேச பிரதிநிதியுடனான பத்திரிகையாளர் சந்திப்பு முற்பகல் 10.30 மணிக்கு அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-14)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்ற உறுப்பினர்களான என். ஸ்ரீகாந்தா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய பேச்சின்போதே பஸில் இந்த உறுதி மொழியை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தவை வருமாறு:-

✱வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்று கோரினோம். முதல் கட்டமாக 4,500 பேரை குடியமர்த்தவும், ஏனையோரின் மீள்குடியமர்வு தொடர்பாக வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கப் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்க ஏற்பாடு செய்வதாகவும் பஸில் உறுதி வழங்கினார்.

✱வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மற்றும் கிழக்கில் மூதூர், சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயம் ஆகியவற்றிற்கு மக்கள் சென்றுவர ஏற்பாடு செய்யவேண்டும் எனக் கோரினோம். அதற்கு ஏற்பாடு செய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

✱மன்னார் - மதவாச்சி வீதியில் வாகனங்களில் பயணிப்போர் ஐந்து சோதனை நிலையங்களில் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்படுவதை நிறுத்துமாறு கோரினோம். எதிர்காலத்தில் பறையனாங்குளத்தில் மட்டும் சோதனை செய்வதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

✱வவுனியாவில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் மதவாச்சியில் சோதனை நடவடிக்கையால் பாதிக்கப்படுவது குறித்தும் பிரஸ்தாபித்தோம். இந்தச் சிரமங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினோம். அந்த யோசனைகளும் ஏற்கப்பட்டது.

✱கனகரத்தினம் எம்.பி.யின் விடு தலையைத் துரிதமாக்க வேண்டும் என்று கோரினோம். விரைவில் அவரை விடுவிக்க ஏற்பாடு செய்வதாக உறுதி கூறி னார் பஸில் -என்று விவரித்தார் ஸ்ரீகாந்தா. (ஓ-1)

## நாட்டுக்கு ஏற்பட்ட களங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பி.பி.ஸியின் இலங்கை நிருபர் சார்ள்ஸ் ஹரிலண்ட்ருக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே இதனை சரத் பொன்சேகா வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அவர் அப் பேட்டியில் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நான் ஒரு உண்மையான சிங்களவன். மார்க்கப்பற்றுடைய பௌத்த சமயி. இராணுவத் தளபதியாகப் பதவி வகித்தவன். கட்டுக்கோப்பான ஒழுக்கநெறி முறைமைகளைப் பின்பற்றுபவன். வாக்குறுதி தவறாதவன். வாக்களித்தபடி புலிகளுடனான போரில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தவன். எனது காலத்திலேயே போரை முடித்து வைத்தேன்.

இப்படிப்பட்ட என்னால் இலங்கையின் நற்பெயருக்கு சர்வதேச மட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கும் களங்கங்களை நிச்சயமாக இல்லாமற் செய்ய முடியும்.

**படுகொலைகள் காணாமற் போதல்கள் குறித்து விசாரணை நடத்தப்படும்**

இலங்கை குறித்த சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை என்னால் நிச்சயம் மாற்றியமைக்க முடியும். மாற்றிக் காட்டுவேன். குறிப்பாக கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகள், காணாமல் போதல்கள் என்பன குறித்து நீதியான, பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வேன்.

நாட்டில் புரையோடிக் காணப்படும் படுகொலைகள், காணாமல் போதல்கள், மிரட்டல்கள், பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள், ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் உட்பட சட்ட விரோத செயற்பாடுகளை இல்லாமற் செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அர்த்த புஷ்டியான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

இன்று இந்நாட்டில் மக்களுக்கு நடமாடும் சுதந்திரம் இல்லை. கருத்து வெளியிடும் சுதந்திரமோ, பேச்சுச் சுதந்திரமோ, ஊடக சுதந்திரமோ இந்நாட்டில் இல்லை. ஒழுங்கான நீதித்துறை இல்லை. மக்கள் எதிர்கொள்ளும் இவை போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு [illegible] ஆனால் இப்பிரச்சினைகளையும், இப்பிரச்சினைகளால் மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளையும் தீர்த்து வைக்க அரசு எவ்விதமான உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்கவே இல்லை. ஆனால் இப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க என்னால் முடியும். நாட்டில் சட்டம், ஒழுங்கு, நீதி ஆகியன அவசியம். அதை நிலைநாட்ட என்னால் முடியும்.

**போர்க்குற்ற விசாரணை**

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றங்கள் குறித்து உள்நாட்டின் சட்ட திட்டத்துக்கு அமைய கட்டாயம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் உண்மைகள் வெளிவரும். சந்தேகங்களும், குற்றச்சாட்டுகளும் இல்லாமற் போகும். ஆனால் வெளிநாடுகள் இங்கு வந்து விசாரணை நடத்த முடியாது. இருப்பினும் ஐ.நா. சபை, சர்வதேச நாடுகள் நேச நாடுகள் ஆகியன யுத்தக் குற்றச்சாட்டு தொடர்பில் அவர்களின் சந்தேகங்கள், சிக்கலுக்குரிய விடயங்கள் ஆகியன [illegible]ங்களுக்கு வெளிப்படுத்தி நாம் இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கு உதவி செய்யமுடியும்.

**தமிழ் மக்கள் விவகாரம்**

வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தவன் நானே. புலிகளின் பிடியிலிருந்து விடுவித்த தளபதி நானே. எனது தலைமையிலான இராணுவப்படையணியே களத்தில் இறங்கிச் செயற்பட்டு நாட்டுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளது. எனவேதான், இந்த வெற்றி இராணுவத்தின் உடையது என்று நான் அடித்துக் கூறுகிறேன்.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு நடமாடும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் விரும்புகின்ற இடங்களுக்கு சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். உறவினர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் பொதுமக்கள் நாட்டின் பாதுகாப்புக்கு கட்டாயம் ஒத்துழைப்பு வழங்கவேண்டி உள்ளனர். ஏனெனில், மறைந்திருக்கும் புலிகளைக் கண்டுபிடிக்க வேண்டி உள்ளது - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் இறுதி வெற்றிக்கு அரசியல் தலைமையே காரணம்

## இப்படிச் சொல்கிறார் படைத்தளபதி

கொழும்பு,நவ. 03

இராணுவம் இம்முறை இறுதி வெற்றியை பெறுவதற்கு சிறப்பான அரசியல் தலைமைத்துவமே காரணம் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மின்னேரியாவில் உள்ள காலாட்படைகளின் பயிற்சிக் கல்லூரியில் ஆயிரத்து 500 படையினரின் முன்னிலையில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பயங்கரவாதத்துக்கு எதிரான இராணுவத்தின் வெற்றி அனைவரும் புரிந்த தியாகத்தினாலும், மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைத்து தரத்திலான இராணுவத்தினரின் திறமையான செயற்பாடுகளினாலுமே கிட்டியது.

கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், உரிய அரசியல் தலைமைத்துவம், சர்வதேச உதவி, நிதியுதவி இன்மையால் இறுதி வெற்றியைப் பெறமுடியவில்லை.

அரச அதிகாரிகள் மேற்கண்ட விடயங்களை இம்முறை சாத்தியமாக்கியமையே இறுதி வெற்றி கிடைத்தமைக்குக் காரணம்.

இராணுவத்தில் உள்ளவர்கள் அதன் கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உயர் ஒழுக்கநெறிகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும் - என்றார்.



ஆசிய தகவல் தொழில்நுட்பக் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது. இதன்போது பெண்மணி ஒருவர் புதிய தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பற்றி ஜனாதிபதிக்கு விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.

# பொன்சேகாவின் தேர்தல் பிரசாரம் ஐ.தே.கட்சியின் மாநாட்டில் ஆரம்பமாகும்

கொழும்பு, டிச. 03

எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெற இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் 64 ஆவது வருடாந்த மாநாட்டின் போது பொதுமக்கள் முன்னிலையில் பிரசன்னமாகி, தமது ஜனதிபதித் தேர்தல் பிரசாரங்களை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்க உள்ளார் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான ஜெனரல் பொன்சேகா.

இந்த மாநாடு பேலியகொடவில் உள்ள நவலோகா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான பொன்சேகா அங்கு பொதுமக்கள் முன்னிலையில் பிரசன்னமாகி, தமது தேர்தல் பிரசாரங்களை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கவுள்ளார்.

இதுவே இம் மாநாட்டின் சிறப்பம்சமாக இருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர்களில் ஒருவரான ஜயந்த கருணாதிலக எம்.பி. தெரிவித்தார்.

''இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மாநாடாகும். ஏனெனில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து இம்மாநாட்டின் போது எமது ஆதரவாளப் பெருமக்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளோம்'' என்றார் அவர்.

## தொப்பிக்கலவில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிச. 03

தொப்பிக்கல பகுதியில் குற்றப்புலனாய்வுத்துறையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது தலா 15 கிலோகிராம் எடையுள்ள 5 கிளைமோர் குண்டுகளும், 5ஆர். பி. ஜி. லோன்ஜர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கை கடந்த நவம்பர் 28ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் முதலாம் திகதி வரை நடைபெற்றது எனவும் இதில் மேலும் புலி இலட்சினைகள் பொறிக்கப்பட்ட 16 விடுதலைப் புலிகளின் கொடியும் மற்றும் 31 விடுதலைப் புலிகளின் பகுதிகள் சார்பான கொடியும் கிடைக்கப்பெற்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஐ.எம் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

**DAY CLASS**
**கலைப் பிரிவு**
ஆரம்பம்
05.12.2009
சனி காலை 8 மணி
**DMI**
**Jaffna**

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் ஆரம்பம்**
வெள்ளி (4/12):- 3 - 5
* நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்தல்
* முகாமைத்துவ உதவியாளர்
ஆசிரியர்: த.தவசேகர்
**DMI**
ஆரியகுளம் சந்தி.

# அமைச்சின் பொறுப்பற்ற செயற்பாடே பன்றிக்காய்ச்சல் பரவலுக்கு காரணம்

## சுகாதார சேவை சங்கம் குற்றச்சாட்டு

நாட்டில் பன்றிக்காய்ச்சல் நோய் அதிகமாகப் பரவிச் செல்கின்றமைக்கு சுகாதார அமைச்சின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே காரணம் என்று அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இச்சங்கத்தின் தலைவரான காமினி குமாரதுங்க இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டில் பன்றிக்காய்ச்சலுக்குப் பலியானோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமைக்கு சுகாதார அமைச்சே பொறுப்புக் கூறவேண்டும். இலங்கையின் முதலாவது பன்றிக்காய்ச்சல் நோயாளி கடந்த ஜனவரி மாதம் கண்டுபிடிக்கப்பட்டார். ஆனால் அமைச்சைச் சேர்ந்தவர்கள் பன்றிக் காய்ச்சல் நோயை இல்லாமற் செய்வதற்கு எந்த உருப்படியான நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. மாறாக, அதை அலட்சியப்படுத்தி விட்டார்கள். தற்போது விபரீதம் நேர்ந்துவிட்டது. நாட்டில் பன்றிக் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரித்துச் செல்கின்றது.

அமைச்சின் கையிருப்பில் இந்நோய்க்கான மருந்துகளும் இல்லை. பொதுமக்கள் மாத்திரமின்றி வைத்தியர்களும், தாதியர்களும் கூட உரிய முறையிலான நோய்த்தடுப்பு ஏற்பாடுகள் இன்மையால் பன்றிக்காய்ச்சல் நோய்க்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நோய்க்கென்று தடுப்பூசி மருந்து ஒன்று உண்டு. பன்றிக்காய்ச்சல் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்குமுன் வைத்தியர்கள், தாதியர் ஆகியோர் இத்தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும். ஆனால் இத்தடுப்பூசி மருந்து இங்குள்ள வைத்தியசாலைகளிலோ, அமைச்சிலோ இல்லை. பன்றிக்காய்ச்சல் நோயைத் தடுப்பதற்குத் தேவையான மருந்துகள், பாதுகாப்பு முகமூடிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சு ஏன் காலங் கடத்திக் கொண்டிருக்கிறது? அவ்வாறு கடைசி நேரம் வரை காத்திருக்கத் தேவையில்லை. நோயாளர்களுக்கு சேவை செய்ய வேண்டிய தார்மீககடப்பாடு எமக்கு உண்டு. அதற் காக எமது உயிரைப் பணயம் வைத்து பன்றிக் காய்ச்சலுக்கு ஆளாக நாம் தயாராக இல்லை. - என்றார்.

# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவு யாருக்கு என்ற விவரம் இன்று வெளிவரும்

## அக்கட்சியின் ஊடகச் செயலர் தெரிவிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர்.

இச் சந்திப்பு அலரிமாளிகையில் இடம்பெற்றதென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் அசாத் மௌலான தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்று நடைபெற்ற பேச்சில் சுமூகமாக இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பான முடிவை எமது கட்சியின் தலைவர் சந்திரகாந்தன் நாளை (இன்று) காலை 10 மணியளவில் மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெறவுள்ள பத்திரிகையாளர் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

நேற்று இடம்பெற்ற பேச்சுகளின் பயனாக இதுவரை காலமும் கிழக்கு மாகாண சபையில் வெற்றிடமாக இருந்து வந்த மேலதிக போனஸ் ஆசனத்துக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கோபாலப்பிள்ளை நிஷாந்தனை நியமிப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. அவருக்கான நியமனக் கடிதமும் நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவினால் வழங்கப்பட்டுள்ளது எனவும் அசாத் மௌலானா தெரிவித்தார்.

## இந்தோனேஷியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிசெய்யவேண்டும்.

இந்தோனேஷிய அதிகாரிகளிட மிருந்து இந்த உறுதிப்பாடு கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் படகிலிருந்து வெளி யேறுவார்கள் என நான் நம்புகிறேன் - என்றார்.

## வீதித் தடைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப் புரைக்கிணங்க இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது எனவும் தேசிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

## டிசெம்பர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி ஜே. ஆர். டி. ஆர். அல்விஸ் தெரிவிக்கிறார்.

இதுவரை நாடெங்கிலும் 30 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 283 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பருவப் பெயர்ச்சி மழை காரணமாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் டெங்கு நோய் பரவும் விகிதம் அதிகரிக்குமென மக்கள் சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை செய்கிறது.

எனவே பொதுமக்கள் தமது சுற்றடலைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் இந் நோய் பரவாது பார்த்துக்கொள்ளவேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

ஆசிரிய போட்டிப் பரீட்சை, S.L.A.S போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்
பொது அறிவு -2010
நுண்ணறிவுத்திறன்
S.L.A.S போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல் - 2010
விற்பனையாகின்றது.
BY:P.Kamalathasan
பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலை

**உயர் கலைக் கல்லூரி**
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
**2010 A/L DAY CLASS**
தமிழ்: R.S.சந்திரசேகர்
இந்து நாகரிகம்: S.சிறீதரன்
புவியியல்: P.S.குமரன்
அரசறிவியல்: K.S.இளங்கோ
வரலாறு: M.பத்மன்
இந்து சமயம்: S.சிறீதரன்
நாடகமும் அரங்கியலும்:
பிரபல ஆசிரியர்
ஆரம்பம்: 05.12.2009
சனிக்கிழமை நண்பகல் 12 மணி
''அறிவை அறிவால் அறிவோம்''

**நாவலர்** பட்டப்படிப்புக் கல்லூரி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
1st IN Com., யாழ்ப்பாணம், பேராதனைப்
G.A.Q பல்கலைக்கழகம் (வெளிவாரி)
ஆரம்பம் 05-12-2009 சனி காலை8மணி
* மேற்படி பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/L இல் கலை. வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியடையவர்கள்.
* பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாகச் செய்து தரப்படும்.

**ஐடியல் அக்கடமி**

| சிரணிச்சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | பிரதான வீதி, மானிப்பாய் |
|---|---|---|---|

மாணவச் செல்வங்களே!
புதிய ஆண்டு கல்விச் செயற்பாட்டிற்காக எமது நான்கு நிறுவனங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் **2010** ஆம் ஆண்டின் புதிய வகுப்புகள் **05.12.2009** சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.
**நேரம் பிற்பகல் 3.30**
யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள எமது ஐடியல் அக்கடமியில் தரம்6 இற்கான English Medium வகுப்புகளை புதிய ஆண்டில் குதூகலமாக ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
* ஒழுக்கத்துடனான கல்விச் சேவையே எமது ஐடியலின் தனித்துவம் எம்முடன் இணைந்தவர்களுக்குப் புரியும் அதன் மகத்துவம்.
நிர்வாகி.

**வேலை வாய்ப்பு**
Photoshop, Page Maker, Corel Draw தெரிந்து கணனி ரைப்செற்றிங் செய்வதில் நல்ல தேர்ச்சி உடைய பெண் ஒருவர் தேவை.
* மாதாந்த வேதனம் ரூபா 10,000 வரையில்
0718474325, 0772395783

**அதிரடி விலைக்கழிவு**
டிஜிட்டல் பனர், ஸ்ரிக்கர் என்பவற்றை பிரதியாக்கம் செய்திட சதுர அடி 70/= மட்டுமே.
**மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்**
யாழ்ப்பாணம்.

**''மாபெரும் மலிவு விற்பனை''**
50 வருட பூர்த்தியை முன்னிட்டு
20% - 40% வரையான விசேட கழிவு
எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலுறுாள், இரட்டைறுாள் கொப்பிகள் (160,80 பக்கங்கள்) மற்றும் எழுதுகருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் தெரிவுசெய்து குறைந்த விலையில் தரமான பொருள்களை பெற்றுக்கொள்ளலாம். தரம் குறைந்த கொப்பிகளைப் பெற்று பிள்ளைகளின் தரத்தைக் குறைக்காதீர்கள். 2500 ரூபா பெறுமதிக்கு அதிகமாக கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய (My Clear Bag - Rexion) இலவசமாக வழங்கப்படும்.
சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.
**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org